
கல்கி
KALKI 16.11.97
ரூ 4.00
ஆர்ப்பாட்ட (V) அழகிகள்!



HMT
கடிகாரங்கள்
LG GL 63
Rs. 825
LG GG 32
Rs. 955
பெறுவதை விட தருவதே சிறந்தது
என்பார்கள் பெரியவர்கள். ஆனால்
இதற்குச் சில விதிவிலக்குகள் நிச்சயம் உண்டு
SG 005
Rs. 2100
BLS 4
Rs. 2362
56429
Rs. 1600
எச்எம்டி கடிகாரங்கள் 500 க்கும் மேற்பட்ட மாடல்களில் கிடைக்கின்றன. விலைகள் ரூ.400லிருந்து ரூ.19,000 வரை
உங்கள் குவார்ட்ஸ் வாட்சுக்கு எச்எம்டி பவர் செல்லையே கேட்டு வாங்குங்கள்.
Mudra:HMT:1369:97:TAM

இரண்டு பாத்திரங்களை மட்டுமே மையமாகக் கொண்டு சுற்றி வரும் கதை. பெரும்பாலான காட்சிகள் ஒரு வீட்டுக்குள் மட்டுமே நடக்கின்றன. தனியாக காமெடி ட்ராக் இல்லை. கம்பி மேல் நடப்பது போன்ற மனோதத்துவ சப்ஜெக்ட். மீண்டும் ஒரு விருது முயற்சி என்பது புரிகிறது.

ஆனால் மசாலா விஷயங்களை ஒதுக்கியதுடன் நிற்காமல், சொல்ல வருவதைத் தெளிவாகவும் நிறைவாகவும் பதிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அகத்தியன் ஒதுக்கிவிட்டதுதான் பட ஓட்டத்திற்குப் பெரிய தடைகள்.

நாற்பத்தியொரு வயதான மிலிட்டரிக்காரரைப் பதினெட்டு வயதுப் பெண் விரும்பித் திருமணம் செய்து கொள்கிறாள். சிக்கல் தொடங்குகிறது. அறியாத சிலர் அவர்களை 'அப்பா-மகள்' என்று குறிப்பிட்டு





விடுகதை

விட, நாயகன் மனமொடிந்து போகிறான். போதாக்குறைக்கு அவனது கவனத்துக்கு வரும் வேறு சிலரது அனுபவங்கள் அவனது காம்ப்ளெக்ஸை வளர்க்கின்றன. 'தனக்கு மூப்பு வரும்போது மனைவி ஆசைக்கு வேறு வடிகால் தேட எண்ணினால்?' என்று யோசித்து, தொடக்கத்திலேயே பிரிந்துவிடத் தீர்மானிக்கிறான்.

என்ன ஒரு திறமை, எப்படியெல்லாம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன விழிகள்! பல படங்களில் சாடிஸ்டாக வரும் பிரகாஷ்ராஜ் இதில் தயக்கம், சஞ்சலம் கலந்த கூச்சமுள்ள நடுத்தர வயதுக்காரராக அற்புதமாகக் கூடு பாய்கிறார். ஆனால் இன்றைய பிரபல தமிழ்க் கதாநாயகர்களில் மிகப் பெரும்பாலானோர் நாற்பது ப்ளஸ்ஸாக (வயது மட்டுமல்ல, தோற்றத்திலும்தான்) இருந்தும் டீனேஜ் நாயகிகளுடன் தோன்றுவதால், வயது வித்தியாசமே மைய இழையாக பிரகாஷ்ராஜ் - நீனா வரும் காட்சிகளில், அதன் தாக்கம் முழுமையாக மனதில் பதிய மறுக்கிறது.

'கோடி. கண்மணி'யின் சின்ன அஞ்சுவாக வந்த நீனா, இதில் வெயிட்டான கதாநாயகி வேடத்தில். பனங்காயைக் குருவி திறமையாகவே சுமக்கிறது.

வாழ்க்கையை வெகு ஸ்போர்ட்டிவாக எடுத்துக் கொண்டு, அதேபோல் மகள் நீனாவையும் வளர்த்து விட்டிருக்கும் ஜனகராஜுக்கு நாலே காட்சிகள்தான் என்றாலும் அவருக்கு இப்படம் ஒரு மைல் கல். கூச்சல் இல்லாமல், ஒரு கண்ணை அடிக்கடி சுருக்கிக் கொள்ளாமல், வெகு கண்ணிய நடிப்பு. மற்றொரு காமெடியரான மணிவண்ணன் கூட சீரியஸான 'மனசாட்சி'யாகத் தோன்றுகிறார். பல்வேறு விஷயங்களுக்காக (அறிவை வளர்த்துக் கொள்ள அல்ல) பொது நூலகங்களுக்கு வருபவர்களின் மீது கோபம், சினிமாவைப் பார்த்துவிட்டு அரைவேக்காட்டுத் தனமாகக் 'காதலிக்கும்' இளைஞர்களைக் கண்டு எழும் ஆதங்கம் இவற்றையெல்லாம் மணிவண்ணன் மூலமாகச் சாடியிருப்பதில் இயக்குனரின் சமுதாய உணர்வு புலப்படுகிறது.

அவ்வப்போது சேலையில் பிரகாஷ்ராஜ் வருவதும், பக்குவப்பட்ட ஆணின் மனோபாவத்துடன் நீனா பிரச்னையை விடுவிப்பதும்... எவ்வளவு பேருக்குப் புரியும்?! அதனால்தான் படம் முடியும் போது 'பிள்ளையார் பிடிக்க நினைத்திருக்கிறார்கள்' என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

— ஜி

வை.கோ. அலுவலகத்தில் ஜெ:

"எங்கள் நெருக்கம் கலைஞருக்குப் புளியைக் கரைக்கும்!" — வை.கோ.

ம.தி.மு.க. அலுவலகத்திற்கு ஒரு கி.மீ. தூரத்திலேயே தோரணங்கள், புரட்சித் தலைவியை வரவேற்கும் போஸ்டர்கள் (கட் அவுட் இல்லை) எழும்பூர் பகுதி ம.தி.மு.க. ஏற்பாடு செய்த பாண்ட் பார்ட்டி 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்...' என்று வாசிக்க, உற்சாக மிகுதியாய் பிரபுதேவாக்கள் ஆனார்கள் வை.கோ.வின் கண்ணின் மணிகளில் சிலர்.

♦ மதுசூதனனின் தளபதிகளான பாலகங்காவும், சேகர் பாபுவும் வாசலில் உள்ள கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார்கள். அதிலும் பாலகங்கா செல் போனில் போயஸ் கார்டனோடு நேரடித் தொடர்பில் இருந்தார்.

♦ வெடிச் சப்தம் காதைப் பிளக்க ஜெ. அலுவலகத்திற்குள் நுழையும் போது நமது கடிகாரத்தில் சரியாக மாலை 5.09. வை.கோ.வுடன் மகளிர் அணி விஜயா தாயன்பன் கையில் பொக்கேயுடன் வரவேற்கத் தயாராக இருந்தார். அம்மா கார் வந்து நுழைந்த களேபரத்தில் விஜயா அதை ஜெ.விடம் கொடுக்க முடியாமல் தவிக்க, வை.கோ. வாங்கிக் கொடுத்தார்.

♦ டார்க் மஞ்சள் கலர் புடைவை, கறுப்பு சோளி. தலையில் கறுப்பு மினி டவலை சுற்றியிருந்தார் ஜெ. காது, கழுத்து, வெறுமையாக இருக்க, புன்னகை மட்டும் வெகு தாராளம்.

♦ம.தி.மு.க. அலுவலகத்தில் மூன்றாவது மாடியில்தான் அரங்கமும் வை.கோ.வின் அறையும் இருக்கின்றன. கழிப்பிடங்களை இடித்து மற்றொரு சிறிய அறையும் கட்டியிருக்கிறார்கள். லிப்டில் வந்த ஜெயும் வை.கோ.வும் மூன்றாவது மாடியில் இறங்குவதில் பிரச்னை. காரணம் லிப்ட்தான்! திடீரென்று லிப்ட் கதவு திறக்காமல் தகராறு செய்தது. லிப்டிற்கு வெளியில் தவிப்போடு பொன் முத்துவும், எல்.கணேசனும் பார்க்க, மீண்டும் லிப்ட் கீழ்நோக்கி இரண்டாவது தளத்துக்குச் சென்று, பிறகு மேலே வந்தது. அதன்பிறகு நோ ப்ராப்ளம்!

♦அரங்கத்தில் ஒரு பக்கத்தில் காளிமுத்து, செல்வகணபதி, மதுசூதனன், சத்தியமூர்த்தி எல்லாம் அம்மாவின் தளபதிகள். எதிர்ப் புறத்தில் பொன்முத்து, கோவை கண்ணப்பன், மதுராந்தகம் ஆறுமுகம் என்று வை.கோ.வின் தளபதிகள். ஒவ்வொருவராக எழுந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். பிறகு வை.கோ.வும், ஜெயும் பேசினார்கள். "எனக்கு வேறு ஒரு கட்சியின் அலுவலகத்துக்கு வந்தது போன்ற உணர்வே இல்லை. என் அலுவலகத்திற்கு வந்தது போன்றே உணர்கிறேன்" என்று ஒரு போடு போட்டார் ஜெ.



• புதிய கூட்டணி

♦கட்சிப் பிரமுகர்களுடன் கலந்து பேசியபின் வை.கோ.வின் அறையில் இரு கட்சி மேலிடத்தினர் மட்டும் தனி உரையாடலில் ஈடு

பட்டனர். "உங்க மாவட்டத்தில் நடக்கப் போகும் எங்க மாநாட்டுக்கு நீங்க, உங்க கட்சிக்காரங்க எல்லாம் அவசியம் வரணும். தங்கறதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்கிறேன்!" என்று ஜெ. சொன்னவுடன் நெகிழ்ந்தார் வை.கோ. "உங்களுக்கு என்ன உதவி வேணும் என்று என்னிடம் சொல்லுங்கள். நாங்கள் host ஆகச் செயல்படுவோம்!" என்று பதில் சொன்னார் வை.கோ.

♦ இரு கட்சித் தலைவர்களும் கூட்டாக பத்திரிகையாளர்களைச் சந்திப்பார்கள் என்று பலர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். எல்லா பத்திரிகையாளர்களையும் அரங்கத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். வை.கோ. அறையில் பேசிக் கொண்டிருந்த ஜெ., திடீரென்று வை.கோ.வுடன் வெளியே வந்து, மொட்டை மாடியில் இருந்து கீழே சாலையில் இருந்த தொண்டர்களைப் பார்த்துக் கையசைத்தார். ஜெ. இரட்டை விரலைக் காட்ட, வை.கோ. உள்ளங்கை தெரிய அசைத்துக் காட்டினார். நாமும், ஹிந்து நிருபரும் உள்ளே பத்திரிகையாளர்களுடன் மாட்டிக் கொள்ளாமல் வெளியே இருந்ததால் அந்தக் காட்சியைப் பார்க்க முடிந்தது. பின்னாலேயே வந்த நாவலரைப் பார்த்த ஜெ. "நீங்களும் போய் கீழே நிற்கும் கூட்டத்தைப் பாருங்க" என்று சொல்லி அனுப்பினார்.

♦ திரும்பப் போகும்போது கேள்விகளால் மடக்கினோம். "எங்கள் தோழமைக் கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் எழுதி மாநாட்டுக்கு அழைத்து விட்டோம். மற்றபடி எங்கள் அலுவலகத்துக்கு வந்திருந்தார் வை.கோ. அதன் தொடர்ச்சியாக, நான் இங்கு வந்திருக்கிறேன்!" என்றார் ஜெ. "மாநாட்டுக்கு காங்கிரஸுக்கு அழைப்பு உண்டா?" என்ற கேள்விக்கு, "ஏன் வாழப்பாடி எங்கள் ஆதரவாளர்தானே... அவருக்கு அழைப்பு உண்டே!'' என்று சொல்லிக் கீழே இறங்கி விடை பெற்றுப் போனார் ஜெ. அப்போது மணி 6.54. அரங்கத்தின் உள்ளே இருந்த மூன்று டஜன் பத்திரிகையாளர்களுக்கு ஜெயின் மினி பேட்டி பற்றி ஒன்றும் தெரியாது!


• கூட்டம்

♦ ஜெ. சென்ற பிறகு பத்திரிகையாளர்களைத் தனியாகச் சந்தித்தார் வை.கோ. "ஒரு அண்டர்ஸ்டாண்டிங்கை அடிப்படையாக வைத்துச் செயல்பட்டு வரும் நாங்கள் தேர்தலில் கூட்டணி அமைத்துச் செயல்படுவோம். எங்களின் நெருக்கம் கலைஞர் வயிற்றில் புளியைக் கரைக்கும்!" என்றார். ஜெ.வின் விசிட்டுக்கு இடைஞ்சலில்லாமல் மழை பெய்யாமல் இயற்கை ஒத்துழைத்ததைச் சொல்லி சந்தோஷமடைந்தார் வை.கோ.

♦ கீழே தொண்டர்களிடம் பெரிய எழுச்சி. ஏதோ தேர்தல் முடிந்து பெருவாரியான வெற்றி பெற்றுப் பதவியேற்க இருக்கும் கட்சிகளின் தொண்டர்கள் எப்படியிருப்பார்களோ அப்படிப்பட்ட மனநிலையில் அவர்கள் இருந்தார்கள். 'புரட்சிப் புயல் வாழ்க! புரட்சித் தலைவி வாழ்க!'என்ற கோஷம். அதற்குப் பின்னணி இசைபோல அலுவலக வாசலில் இருந்த பிள்ளையார் கோயில் மணி ஒலித்துக் கொண்டே இருந்தது!

♦ அதி.மு.க. அலுவலகத்துக்கு வை.கோ. போய் நீண்ட நாட்களாகிய பிறகும் இத்தனை தாமதமாக ம.தி.மு.க. அலுவலகத்துக்கு ஜெ. வரக் காரணம் என்ன? நல்ல நாள், நேரம் எல்லாம் இந்த ஐப்பசியில்தான் வந்ததாம் ஜெவுக்கு!

♦ எல்லோரும் சென்ற பிறகு அலுவலகத்தில் சற்று ஃப்ரீயாக இருந்த வை.கோ.வைச் சந்தித்தோம். கட்சிப் பிரமுகர்கள் கூட்டத்தில் ஜெ. அழுத்தம் திருத்தமாகப் பேசியதைப் புகழ்ந்து தள்ளினார். "எங்கள் கட்சித் தலைவர்கள் கூட அவங்க பேச்சில் ரொம்ப 'இம்ப்ரஸ்' ஆயிட்டாங்க!" என்றார் நம்மிடம்.

♦ "அதி.மு.கவின் நெல்லை மாநாடு முடிந்ததும், நான், சுவாமி, ஜெயலலிதா ஆகிய மூவரும் சேர்ந்து தமிழகம் முழுக்க சுற்றுப் பயணம் செய்யப் போகிறோம்!" என்றார் வை.கோ.

— ப்ரியன்


படங்கள் : செளந்தரராஜன்



வீ. ஜெ:

வீ - என்றால் வீரப்பனும் இல்லை.

ஜெ - என்றால் ஜெயலலிதாவுமில்லை.



அப்புறம்?

வீடியோ ஜாக்கி.

கிங், குயின், ஜாக்கி தெரியும். அது என்ன வீடியோ ஜாக்கி?

நம் ஊர் தூர்தர்ஷனிலும், பிற சாடிலைட் சானல்களிலும், பழைய பாடல், புதுப் பாடல், நகைச்சுவை விருந்து, அறுவை விருந்து, சூப்பர் சீன், டாப் டென், டாப் கவுண்ட டௌன் என்று வரும் எல்லா நிகழ்ச்சி



• வீ. சேனல் வீ.ஜெக்கள்



களிலும் ஓர் அறிவிப்பாளர் - அநேகமாக அழகான (அல்லது - சுமாரான) பெண்ணாக இருப்பார். இணைப்புரை என்ற பெயரில் தமிழ்க் கொலை செய்வாரில்லையா? அவரேதான். இங்கே அறிவிப்பாளர் என்கிறோம். வடக்கத்திய சானல்காரர்கள் 'ஆங்க்கர் பர்ஸன்' என்கிறார்கள். மியூஸிக் சானல்களான எம்.டிவி, 'வி' சானல் ஆகியவற்றில் இவர்களுக்குப் பெயர் வீடியோ ஜாக்கி. சுருக்கமாய் வீ.ஜே.

ஒரு சினிமா பாட்டு நிகழ்ச்சி என்றால், அந்தப் பாட்டு எந்த சினிமாவில் அல்லது ஆல்பத்தில் இடம் பெற்றுள்ளது? பாடியவர் யார்? நிகழ்ச்சியில் தோன்றுபவர் யார் போன்ற எல்லா விவரங்களையும் சொல்லி, பாடலை நேயர்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான் இந்த வீ. ஜெ.க்களின் பிரதான பணி.

ஆர்ப்பாட்ட (V) அழகிகள்!



* ஷாகுல்



* ராம்ஜி



* உமா

எம்.டி.வியில் இந்த வீ.ஜெ.க்களிடம் அதீத மேற்கத்தியத் தனம் மிகும். வீ. சானலில் ஆசியத்தனம் - குறிப்பாக இந்தியத்தனம் அதிகமிருக்கிறது. இந்த வீ.ஜெ.க்களுக்காகவே புரோகிராம்களை மிஸ் பண்ணாத ரசிகர்கள் அநேகம் பேர். தேன் குடித்த நரி போல, 'லைலா, லைலா' என்றும் 'மேகனா, நீ மேகமா?' என்றும் இன்னும் பலவாகவும் கிரங்கிக் கண்ணீர் உகுப்பவர்கள். எம்.டி.வியின் நோனி, சோபியாக்களை அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியுமா என்ன?

"இன்று இளைய தலைமுறையினர் தமது வாழ்க்கை லட்சியமே எப்படியாவது 'வீ.ஜெ ஆகி விடுவதுதான் என்று நினைக்கிறார்கள்" என்கிறார் வீ சானலின் பம்பாய் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர்.

"இந்த வீ.ஜெ.க்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள்?"

"நம் ஊர் இயக்குனர்கள் புதுமுக வேட்டை நடத்துவதுபோலத்தான். கல்லூரி வாசல், டிஸ்கோ கிளப்களைக் கூட விட்டு வைப்பதில்லை. வீ.ஜெ.ஆவதற்கு விருப்பம் தெரிவித்து, கத்தை கத்தையாய் போட்டோக்கள் வந்து குவிகின்றன! சில பிரபல புரோகிராம்களின் வீ.ஜெ.க்களைப் போலவே நடித்துக் காட்டி, அதை வீடியோவில் படம் பிடித்து, அனுப்பி வைத்து சான்ஸ் கேட்பவர்களும் இருக்கிறார்கள். மாடலிங் துறையில் இருப்பவர்கள்கூட வீ.ஜெ.க்களாவதற்கு விருப்பப்படுகிறார்கள். ஸ்மார்ட்டான தோற்றம், கேஷுவலான பேச்சு, ஸ்டைலான உச்சரிப்பு இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு ஸ்பார்க் இருக்க வேண்டும். அது இருந்து விட்டால், பார்த்த மாத்திரத்திலேயே தேர்வு செய்து விடுவோம்" என்கிறார் அந்த வீ சானல் அதிகாரி.

பல்வேறு நிகழ்ச்சிகளையும் வழங்குகிற வீ.ஜெ.க்களுக்கிடையே 'தன்னை, மற்றவர்களி



டமிருந்து வித்தியாசப் படுத்தி காட்டிக் கொள்ள வேண்டும்; ரசிகர்கள் மத்தியில் தான் நெம்பர் ஒன் இடம் பிடிக்க வேண்டும்' என்கிற ஆர்வமும் போட்டியும் நிறையவே இருக்கிறது. ஒரு சிலர் தம் உடைகளைப் பிரத்யேக டிசைனர்களைக் கொண்டு, டிசைன் செய்து கொள்கிறார்கள்.

ரூபி பாடியா மிகப் பிரபலமான வீ.ஜெ. அமிதாப், பெங்களூரில் உலக அழகிப் போட்டியை நடத்தியபோது, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் வாய்ப்பை இவருக்குக் கொடுத்தார். இன்னும் சில வீ.ஜெ.க்களுக்கு மாடலிங் வாய்ப்புகளும், ஏன் சினிமா வாய்ப்புகளும் கூடக் கதவைத் தட்டியுள்ளன.

வீ. சானலில் தென்னிந்திய திரை உலகம் பற்றிய நிகழ்ச்சி சிம்னி சௌத். இந்த நிகழ்ச்சியை வழங்கும் வீ.ஜெ. சுசித்ரா. இவர் முறைப்படி இசை கற்றுக் கொண்டவர். சன் சில்க் முதலிய விளம்பரங்களில் மாடல். ஒரு பிரெஞ்ச் திரைப்படத்தில் தோன்றியிருக்கிறார். நாடகங்களில் நடித்த அனுபவமும் உண்டு. ஒரு தமாஷ் என்னவெனில் இந்த சுசித்ரா படித்தது எலக்டிரிகல் இஞ்சினியரிங்!

இன்னொரு பிரபல வீ.ஜெ. மேக்னா ரெட்டி. பாண்ட்ஸ் உட்பட பல விளம்பரங்களில் தோன்றிய அழகி இவர்! லண்டன், பாரிஸ் என்று சுற்றிவிட்டு கடைசியில் வீ சானலில் லாண்ட் ஆன பறவை!

"ரசிகர்களைக் கவர வேண்டுமானால் துனியும் செயற்கைத்தனமில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். யதார்த்தப் பேச்சு, சென்ஸ் ஆஃப் ஹியூமர் இவைதான் அத்தியாவசியமான அம்சங்கள். ஒருதடவை, பேசியபடியே நடந்து போய்க் கொண்டிருந்தபோது, கால் இடறி விழுந்து விட்டேன். அதற்காக அப்செட் ஆகி கட் சொல்லிவிட்டு, ரீ-டேக்கிற்குப் போகாமல், வலியைப் பொறுத்துக் கொண்டு, மண்ணைத் தட்டிக் கொண்டே எழுந்து, விட்ட இடத்தி லிருந்தே பேச்சைத் தொடர்ந்தேன்" என்று சொல்கிறார் ரூபிபாட்டியா.

இவர்கள் சரி. நம் ஊரிலும் அறிவிப்பாளினிகள் எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இங்கே இன்னமும் அறிவிப்பாளர் என்றுதானே சொல்லுகிறார்கள்? ஏன் வீ.ஜெ என்று அழைப்பதில்லை? என்ற கேள்வியை சன் டீ.வி.யில் வருகிற ஷாருவிடம் கேட்டபோது, "ஏனோ தெரியவில்லை! சீக்கிரமே எங்களையும் வீ.ஜெ. என்று குறிப்பிடுவார்கள் என்று நம்புகிறேன்" என்கிறார்.

ராஜ் டீ.வி.யில், தாகம் தாகம் நிகழ்ச்சியில் வரும் அம்ருதா, "அதனாலென்ன? நாங்கள் எல்லாம் எங்களை வீ.ஜெ. என்று குறிப்பிட்டுக் கொள்ளத் தொடங்கினால், பத்திரிகைகளும் அப்படியே எழுதுவார்கள். ஜனங்களுக்கும் 'வீ.ஜெ' என்ற டைட்டில் பரிச்சயமாகி விடும்" என்கிறார்.

"அங்கே உடைகளிலும் நிகழ்ச்சிகளை வழங்கும் முறையிலும் இருக்கிற கிரியேடிவிடி இங்கு இல்லையே! ஏன்?"

"இங்கே இது ஒரு பொழுதுபோக்கு மட்டுமே! தொழில்ரீதியாக இதை எடுத்துக் கொண்டிருப்பவர்கள் வெகு சிலரே! குறைச்சலாகப் பணம் கிடைக்கும்போது, மியூஸிக் சானல்கள் போலவோ, சில இந்தி சானல்கள் போலவோ, பிரத்யேக காஸ்டியூமர், ஹேர் டிரஸ்ஸர், மேக்-அப் ஆர்டிஸ்ட் போன்றவர்களை வைத்துக் கொள்ளுவது இயலாமல் போகிறது" என்கிறார் தாகம் தாகம் தயாரிப்பாளரான அபஸ்வரம் ராம்ஜி.

"உடை விஷயத்தில் வெரைடி கொடுப்பது என்பது இங்கே சாத்தியமில்லை. ஆரம்பத்தில் எனக்கு கோட், சூட் கொடுத்து, ரொம்ப ஃபார்மலாக்கி விட்டார்கள். சினிமா சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு கேஷுவலாய் டீ ஷர்ட்ஸ் அணிய ஆரம்பித்திருக்கிறேன்" என்கிறார் ஷாருல்.

"இங்கே அழகு இருந்தால், சுத்தமான தமிழ் உச்சரிப்பு இல்லை; ஸ்டைல் என்ற பெயரில் கொஞ்சம் உச்சரிப்பும் ஆங்கிலக் கலப்பும் அதிகமாய் உள்ளது. ஆனால் நம் சாடிலைட் சானல்களுக்கு அதெல்லாம் முக்கியமில்லை. அழகு போதும்" என்கிறார் தனியார் சானலில் பணி புரியும் முக்கியஸ்தர்.

பெப்ஸி உங்கள் சாய்ஸில், ஒரே மாதிரி கேள்விகளைக்கேட்டு போரடிப்பது ஏன் என்று உமாவிடம் கேட்டபோது, "நான் வெரைட்டியாகத்தான் கேட்கிறேன். ஆனால் எடிட்டிங்கில் வெட்டுப்பட்டு திரும்பத்திரும்ப ஒரேமாதிரியாக அமைந்துவிடுகிறது!" என்று வருத்தப்படுகிறார்.

"அறிவிப்பாளர் கைகளை அசைத்துப் பேசினால், மெட்ரோ பிரியா போல டிரை பண்ணுவதாகவும், மென்மையான குரலில் பேசினால் பெப்சி உமாவைக் காப்பியடிப்பதாகவும் நம் நேயர்கள் கமெண்ட் அடிக்கிறார்கள்; பத்திரிகைகளில் எழுதி விடுகிறார்கள்" என்கிறார் ஷாருல்.

"பேசுவதற்கும் அதிகமாய் இங்கே சுதந்தரம் கிடையாது. ஸ்கிரிப்ட் எழுதுபவர் எழுதித் தருவதைப் பேசிக் காட்ட வேண்டும். சொந்தமாய்ப் பேச சான்ஸ் கிடைப்பது அபூர்வம் தான். இப்படி இருக்கும் போது எப்படி ம்யூசிக் சானல் வி.ஜெ.க்களைப் போலக் கலக்குவது?" என்று கேட்கிறார். நியாயமான கேள்வி.

— எஸ். சந்திரமௌலி

அட்டையில்: **வி.ஜெ.க்கள் லைலா, மேக்னா, ரூபி.**

"காடு எனக்குப் புதிதல்ல!"

வீரப்பனைப் பிடிக்க அமைக்கப்பட்டிருக்கும், தமிழக – கர்நாடக கூட்டுப் படையின் தலைவரான இன்ஸ்பெக்டர் ஜெனரல் பெ.காளிமுத்துவை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

"பொதுவாவே நான் பத்திரிகைக்காரர்களைச் சந்திப்பதில்லை" – ஜகா வாங்கப் பார்த்த காளிமுத்து அவர்களைக் 'கன்வின்ஸ்' செய்து பேசினோம்.

"திருச்சி மாவட்டத்தில் இருக்கும் மணிமங்கலம் (இப்போது கரூர் மாவட்டம்) கிராமத்தில் பிறந்தவன் நான். அப்பா பெயர் மு.பெரியசாமி. அம்மா மாராயி அம்மாள். என்னுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள், மற்றும் இரண்டு சகோதரிகள். குடும்பத்துக்குக் கொஞ்சம் நிலம் உண்டு. ஒரு சாதாரண விவசாயக் குடும்பம் தாங்க!" என்று தமது வேர்களை விளக்குகிறார் காளிமுத்து.



"எம்.ஏ. இரண்டாவது ஆண்டு படிக்கும் போதுதாங்க, ஐ.பி.எஸ்ல சேரணும்னு ஆசை வந்தது. அதுக்கு முக்கியமான காரணம், அப்போதைய காலகட்டத்தில் சமுதாய ஏற்றத்தாழ்வு காரணமாக பலருக்கு நியாயங்கள் மறுக்கப்பட்டதை நேரில் கண்டதுதான். அந்த அடிப்படையில் போலீஸ் துறையில் சேர்வதன் மூலம் சமுதாயச் சேவை செய்ய வாய்ப்புக் கிடைக்குமே என்று ஆர்வம் கொண்டேன்."

பயிற்சி முடிந்த பிறகு ஏ.எஸ்.பியாக முதல் போஸ்டிங் விருதுநகரில்தான்.

"ஏழாயிரம் பண்ணை என்று ஓர் ஊர். அங்கு ஒரு ரவுடி ஊரையே கலக்கிக் கொண்டிருந்தான். ஒருநாள் திருமணமாக இருக்கும் ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயல, ஊர் கூடி அவனைத் தாக்க முனைந்தது. அவன், 'பெண்ணைக் கொலை செய்து விடுவேன்' என்று மிரட்டி கூட்டத்தை எட்டி நிற்க வைத்தான். எனக்குத் தகவல் வந்தது. உடனே ஸ்பாட்டுக்குச் சென்று நிலைமையை கவனித்தேன். நைஸாக வீட்டுக்குப் பின்புறம் சென்று மேற்கூரையில் ஏறி ஓட்டைப் பிரித்து, நேரே அந்த ரவுடியின் தலையில் குதித்தேன். ஆடிப்போய், ஓட நினைத்தவனை அப்படியே மடக்கினோம். அதே போல் அந்த மாவட்டத்தில், அரிசியில் கல், டீ இலையில் மஞ்சள் இலை கலப்படம் ஆகியவை இருப்பதாகப் புகார் வந்தது. பல நாள் பொறி வைத்து அலைந்து அந்த ஆட்களைப் பிடித்தது மறக்க முடியாது!" என்று தமது போலீஸ் வாழ்க்கையின் மைல் கற்களை அடையாளம் காட்டுகிறார் காளிமுத்து.

காளிமுத்துவின் மனைவி பெயர் சாரதா. இரண்டு மகன்கள். எஞ்ஜினீயரிங் படிக்கிறார்கள். பேச்சு மெதுவாக புதிய போஸ்டிங் பற்றித் திரும்புகிறது.

"ஏற்கெனவே வீரப்பனைப் பிடிக்க உள்ள அதிரடிப் படைக்கு நான்தான் தலைவர். அதனால் இந்தப் பொறுப்பு எனக்குப் புதிதல்ல. தவிர 1988ல் கிட்டத்தட்ட மூன்றரை வருட காலம் கோயமுத்தூர் சரகத்தில் டி.ஐ.ஜியாக இருந்தேன். அப்போது சில வன அதிகாரிகளின் மரணத்துக்குக் காரணம் வீரப்பன் என்று கண்டறிந்து 'இப்படிப்பட்ட ஒரு நபர் காடுகளில் இருக்கிறான்' என்று வெளியுலகத்துக்குக் காட்டியதில் எனக்கும் பங்கு உண்டு. கிட்டத்தட்ட முப்பது முறை அந்தப் பகுதியில் உள்ள அடர்ந்த காடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். ஆகவே காடு எனக்குப் புதிதல்ல" என்கிறார் காளிமுத்து.

வீரப்பனைப் பிடிக்க என்ன வியூகம் வகுக்கப்பட்டிருக்கிறது, எப்போது கிளம்பிச் செல்வார்? என்ற கேள்விகளுக்கெல்லாம் "பதில் வேண்டாமே!" என்கிறார்.

"உங்கள் புதுப் பொறுப்பு பற்றி உங்கள் மனைவி என்ன சொல்கிறார்?" என்று சென்டிமெண்டலாக மடக்கினோம்.

"அவுங்களுக்கு என் பணியின் தன்மை பற்றித் தெரியுமே. உள் மனத்தில் கொஞ்சம் பயம் இருக்குமோ என்னவோ!" என்றார் தயக்கமில்லாமல்!

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **சௌந்தர்ராஜன்**

— கூட்டுப் படைத் தலைவர் காளிமுத்து பேட்டி

* டாக்டர் சூடாமணி

பிரச்னைகள் பலவிதம்: சால்ஜாப்பு ஒரே விதம்!



உள்ளாட்சி அமைப்புகள் செயல்படத் தொடங்கி ஒரு வருடம் ஆகிவிட்டது. இதுவரை என்ன சாதித்திருக்கிறார்கள்? நான்கு முக்கிய நகரங்களுக்கு விஸிட் அடித்தோம்.

சேலம்

சேலம் என்றதும் மாம்பழம் நினைவிற்கு வருவதெல்லாம் சேலம் போகும் வரைதான். ஒரு முறை போய் வந்து விட்டால் பிறகு சேலம் என்றதும் சாக்கடைதான் நினைவிற்கு வரும். அந்தளவிற்கு எங்கு பார்த்தாலும் திறந்த வெளிச் சாக்கடைகள்.

பல இடங்களில் சாக்கடைகள் சுத்தம் செய்யப் படாததால் தேங்கி, ரோடுகளில் வழிந்து கொண்டிருக்கின்றன. பல பகுதிகளில் சாக்கடையிலிருந்து அள்ளிப் போடப்பட்ட குப்பைக் குவியல்கள் எடுத்துப் போக ஆளில்லாமல் மலை, மலையாய் நிற்கின்றன. கார்பெட் சேரி போன்ற பகுதிகளில் இந்தச் சாக்கடைகளில் பன்றிகள் அடிக்கும் கொட்டத்தை வேதனையோடு விவரிக்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

"பாதாளச் சாக்கடை வந்தால்தாங்க சேலத்துக்கு விமோசனம். முன்பு ராஜாராம் அமைச்சராய் இருந்தப்போ பாதாளச் சாக்கடைக்காக பல பகுதிகளில் தோண்டிப் போட்டாங்க. அப்புறம் என்னவோ தெரியலை... திட்டம் நிறைவேறலை. எம்எல்ஏ., மேயர் எல்லாம் வாக்குறுதி கொடுத்துட்டுத் தான் பதவிக்கு வந்தாங்க. ஆனா யாரும் முயற்சி எடுக்கிற மாதிரி தெரியலை" என்கிறார் முன்னாள் கவுன்சிலர் மாதேஸ்வரன்.

சென்னைக்குக் கூவம் மாதிரி சேலத்துக்கு திருமணி முத்தாறு. மாநகரம் முழுக்க இந்த சாக்கடை ஆறும், அதன் கிளையான ராஜ கால்வாயும் ஓடுகின்றன. ஓடுகின்றன என்று சொல்வதுகூடத் தவறுதான். சாலைகளைக் கடக்கும் பாலங்களில் செடிகளும், குப்பைகளும் அடைத்து நிற்பதால் ஓட முடியாமல் தேங்கி நிற்கின்றன. போதாக்குறைக்கு மக்களும் குப்பைகளை இந்தச்



· பொடாரங்காடு சாக்கடைத் தேக்கம்





சாக்கடை ஆறுகளிலேயே கொட்டி வைத்து வழி மறிக்கிறார்கள். இதனால் கொசு உற்பத்தி அமோகமாக நடக்கிறது.

பொடாரங்காடு என்ற பகுதியின் சாக்கடை நீர்த் தேக்கத்தில் ஒரு கொசுப் பண்ணையே இயங்கி வருகிறது. பல பகுதிகளிலிருந்து சாக்கடை நீர் வந்து இங்கு தேங்குகிறது! இந்த இடம் அலமேலு என்பவருக்குச் சொந்தமான இடம்.

• சாக்கடை குப்பை குன்றுகள்

"நானும் பல வருஷமா என் இடத்திலே விவசாயமும் பண்ண முடியாமல், வீடும் கட்ட முடியாம கஷ்டப் படுறேன். மேயர், கவுன்சிலர் எல்லார்கிட்டேயும் மனு கொடுத்திட்டேன். அந்த சாக்கடைகளுக்கெல்லாம் வேற வழி பண்ணி என் இடத்தை சாக்கடையிலிருந்து மீட்டுத் தாங்கன்னு நான் கொடுத்த குரலுக்கு யாருமே காது கொடுக்கலை. போதாக் குறைக்கு அந்த இடத்துக்கு மாநகராட்சியிலிருந்து என் பேருக்கு வரி போட்டுட்டுப் போயிருக்காங்க" என்று அழாத குறையாய்ப் புலம்புகிறார் அலமேலு.

ஒரு நாளைக்கு 20 ரூபாய் சம்பாதிக்கும் ஏழைகூட தன் பிள்ளையை மெட்ரி குலேஷனுக்கு அனுப்ப நினைக்கும் காலம் இது. பிள்ளைகளே இல்லாமல் மாநகராட்சிப் பள்ளியை மட்டும் திறந்து வைத்து ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது வேஸ்ட்தானே?!

குடிநீர் ஒருநாள் விட்டு ஒருநாள் ரெகுலராக சப்ளை செய்யப்படுகிறது. தெரு விளக்குகளும் குறை சொல்ல முடியாத அளவுக்கு உள்ளன. பல சாலைகள் புதுப்பிக்கப்பட்டு விட்டன. ஆங்காங்கே புதுச் சாலைகள் போடப் பட்டு வருகின்றன.

"இதெல்லாம் பழைய நகராட்சிப் பகுதியில் மட்டும்தான். புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் சாலைகள் படுமோசமாக உள்ளன. குடிநீர் வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரு

• மாதேஸ்வரன்



• எம். தனம்



• எஸ். வெங்கடாசலம்



• அலமேலு



> கலையும் ஒருவகை உணவுதான்.
> உடல் வளர்ச்சிக்கு உணவு எவ்வளவு
> முக்கியமோ, அவ்வளவு,
> மனவளர்ச்சிக்குக் கலை முக்கியம்.
> — மு.வ.
>
> தகவல் : மும்பை வாசுதேவன்

முறைதான் சப்ளை. என் வார்டில் பல பகுதிகள் இருட்டில் கிடக்கின்றன. 120 லைட் கேட்டால் 12 தருகிறார்கள். எப்படிப் போதும்?" என்று சீறுகிறார் அ.தி.மு.க. மாநகர் மாவட்ட செயலாளரும் 50வது வார்டு கவுன்சிலருமான எஸ். வெங்கடாச்சலம்.

தொடர்ந்து அவரிடம் பேசியபோது "நாங்க அ.தி.மு.க. கவுன்சிலர் பத்து பேர் இருக்கோம். ஆனா எங்க வார்டு என்றாலே பாரபட்சமாய்த்தான் நடத்து கொள்கிறார்கள். கேட்டால் நிதி இல்லை என்கிறார்கள். வந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. ஆனால் இன்னும் வீட்டு வரி நிர்ணயிக்கப்படலை. இரண்டாயிரம் குடிநீர் இணைப்புகள் முறையான அனுமதியின்றி திருட்டுத்தனமாகத் தரப் பட்டுள்ளதாக வந்தவுடன் குற்றம் சொன்னாங்க. இதுவரையிலும் அதைக் கண்டு பிடிச்சு கனெக்ஷனை 'கட்' பண்ணலை. என்ன நிர்வாகம் இது? அப்புறம் எப்படி நிதி சேரும்?"

"அ.தி.மு.க. வார்டு என்பதால் பாரபட்சம் காட்டப்படுவது உண்மைதான். முன்னாடி நகராட்சியிலிருந்த ஒரு பகுதியும், இரண்டு (ரெட்டிபட்டி, காமநாயக்கன்பட்டி) பஞ்சாயத்துகளும் சேர்ந்ததுதான் எனது வார்டு. இவ்வளவு பெரிய வார்டுக்கு தி.மு.க.வின் சிறிய வார்டுக்கு ஒதுக்கப்படுகிற அதே நிதிதான் ஒதுக்கப்படுது. இது நியாயமா? மேயரே என் வார்டுக்கு நேரில் வந்து, 'பெண்களின் மானம் எனக்கு ரொம்ப முக்கியம். உடனே பொதுக் கழிப்பறை கட்ட ஏற்பாடு செய்கிறேன்' என்று மக்களிடம் கூறி விட்டுச் சென்றார். இதுவரை கட்ட ஏற்பாடு செய்யவில்லை. மயானத்தில் தனியார் ஆக்கிரமிப்புகளை நீக்கித் தருவதாகச் சொன்னார். செய்யவில்லை. இதெல்லாம் பாரபட்சமில்லாமல் வேறென்ன?" என்று பொரிகிறார் 1-வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் எம். தனம்.

தி.மு.க. வார்டுகளுக்கு மட்டும் சிறப்பு கவனிப்பு இருப்பதை 59வது வார்டு த.மா.கா. கவுன்சிலர் கிருஷ்ணனும் குறை கூறுகிறார்.

"புது குடி நீர் இணைப்பு பெற ஐந்நூறு ரூபாயாக இருந்த கட்டணத்தை ஐயாயிரமாக உயர்த்திட்டாங்க. சரி தொலையுதுன்னு பணத்தையும் கட்டியாச்சு ஆனாலும் பல மாசமாகியும் கனெக்ஷன் வநதபாடில்லை" என்கிறார் மாமாங்கத்தைச் சேர்ந்த கருணாகரன் "ஆறு கார்ப்பரேஷன் ஸ்கூலை இழுத்து மூடிட்டாங்க. ஏழைகள் படிக்க முடியுற இடம் கார்ப்பரேஷன் ஸ்கூல் தான். இப்படி ஆறு ஸ்கூலை மூடிட்டா ஏழை ஜனங்க என்னதான் பண்ணுவாங்க? அந்த ஸ்கூல்களையெல்லாம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸாய் மாத்தி சம்பாதிக்க நினைப்பது முறையா?" என்றும் முறையிடுகிறார்.

"பல பகுதிகள்ல சாக்கடை கட்டினாங்க. எப்படித் தெரியுமா? துவக்கமும் இருக்காது. முடிவும் இருக்காது. தெருவில் ஓடி வந்து கட்டப்பட்ட சாக்கடையில் சேரும். கொஞ்ச தூரத்தில் திரும்ப சாக்கடை முடிந்து தெருவில் ஓடும். கேட்டால் அலாட்மெண்ட் அவ்வளவுதான் என்கிறார்கள். இப்படி ஒரு அரைகுறை அலாட்மெண்ட் தேவையா?" என்று கேட்கிறார் கொண்டலாம் பட்டி இராம. சுப்ரமணியம்.

50வது வார்டைச் சேர்ந்த ராதா நாராயணன் "டவுன் பகுதியை மட்டும் அழகா வச்சிக்கிறாங்க. எங்களை மாதிரி புறநகரை அம்போன்னு விட்டுடறாங்க" என்கிறார்.

இரண்டு நாள் நாம் சேலத்தை சுற்றியதில் நமக்குத் தோன்றியதும் அதுதான்.

நம் செவிக்கு வந்த குற்றச்சாட்டுகளை எல்லாம் சேலம் மாநகரின் முதல் மேயரான டாக்டர் ஜி. சூடாமணி M.S. அவர்கள் முன் வைத்தோம். அவர் தரும் பதில்கள்:

- பாதாளச் சாக்கடைத் திட்டம் சாதாரணமானதல்ல. அதற்குப் பெரிய நிதி ஒதுக்கீடு தேவை. படிப்படியாகத்தான் செய்ய முடியும். துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமான அளவில் இல்லாததால்தான் பல இடங்களில் சாக்கடை சுத்தம் செய்வது தாமதமாகிறது.
- பொடாரங்காடு - பஞ்சாயத்திலிருந்து மாநகராட்சியில் புதிதாக இணைந்த பகுதி. உடனே சரி பண்ணி விட முடியாது. எனினும் இது குறித்து தீவிர நடவடிக்கை எடுக்கிறேன்.
- அ.தி.மு.க. ஜெயித்த வார்டுகளை பாரபட்சமாய் நடத்துவதாய்க் கூறுவது அப்பட்டமான பொய். ஒரு டாக்டரான நான் குப்பை அள்ளுவதிலும், சாக்கடை அமைப்பதிலும் அரசியல் பார்ப்பேனா? அது தவிர அ.தி.மு.க வார்டுகள் பத்துமே பஞ்சாயத்தாய் இருந்து மாநகராட்சியில் புதிதாய் இணைந்தவை என்றே உடனே அவற்றை சிட்டி கெட்டப் புக்குக் கொண்டு வர இயலாது யாருக்குமே செய்யாத அளவிற்கு ஒரு வார்டுக்கு 70 லட்ச ரூபாய் பராஜெக்ட் ஓ.கே. பண்ணியுள்ளேன். மற்றொரு வார்டுக்கு பெரிய மார்க்கெட் கட்ட வேலைகள் நடந்து வருகிறது. இந்த இரண்டு வார்டுமே உங்களுக்கு பேட்டி கொடுத்த அ.தி.மு.க. கவுன்சிலர்களின் வார்டுகள்தாம்!
- வீட்டு வரி நிர்ணயிப்பது குறித்து சில குழப்பங்கள் இருந்தன. இப்போது தீர்மானித்து விட்டோம். விரைவில் வசூலிக்கப்படும். சதுர அடிக்கு ஒரு ரூபாய், சிறிய வீடுகளுக்கு ஐம்பது பைசா, குடிசைகளுக்கு 25 பைசா என்கிற ரீதியில் வசூலிக்க உள்ளோம்.

புது குடிநீர் இணைப்பு தருவதில் சில நிர்வாகச் சிக்கல்கள் உள்ளன. எனினும் பணம் செலுத்தியவர்களைக் காக்க வைப்பது முறை

யல்ல. விரைவில் இணைப்பு தரப்படும்.

• ஒரு நாளைக்கு 20 ரூபாய் சம்பாதிக்கும் ஏழைகூட தன் பிள்ளையை மெட்ரிகுலேஷனுக்கு அனுப்ப நினைக்கும் காலம் இது. பிள்ளைகளே இல்லாமல் மாநகராட்சிப் பள்ளியை மட்டும் திறந்து வைத்து ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது வேஸ்ட்தானே?! சென்னை மாநகராட்சி அறிவித்திருப்பதைப் போல் இங்கும் மாநகராட்சி நர்சரிப் பள்ளி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

மதுரை

"உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டதில் ஒரே சந்தோஷம். பல வருடங்களாக பல்லாங்குழியாகக் கிடந்த சாலைகளில் 'ஏனோதானோ'த்தனம் தெரிந்தாலும், பிரதான சாலைகள் அருமையாகப் போடப் பட்டுள்ளன. அதிலும் பனகல் ரோட்டைப் புகழாதவர்கள் யாருமே இருக்க முடியாது"

– மதுரை மாநகராட்சி பற்றி கருத்து கேட்டபோது மணி என்ற இளைஞர் தந்த புகழுரைதான் இது. புகழ்ந்து முடித்த மறு விநாடியே "ஆனால்..." என்று இழுத்தார். என்ன 'ஆனால்...?'

"சாலையின் இருபுறங்களிலும் மண் தேங்கி சாலையே பாதியாகிப் போய் விடுகிறது. இதனால் நெரிசல் அதிகமாவதோடு, மணல் வாரி விட்டு விபத்துகளும் அதிகம் நடக்கின்றன. மதுரை சாலைகளில் டூ வீலரில் பயணிப்பது பாலைவனப் புயலில் பயணிப்பதற்கு சமம். மாநகராட்சியிலிருந்து அந்த மணலை அள்ளுவதற்குத் தொடர்ந்து ஏற்பாடு செய்தால் கோடி புண்ணியமாகப் போகும். மாநகராட்சியில் ஆள் பத்தாது என்ற பதில் வருமானால் பள்ளி மாணவர் அமைப்புகள் மூலமோ, சமூக நோக்கு அமைப்புகள் மூலமாகவோ செய்ய முயற்சிக்கலாம். அதுவும் முடியவில்லை என்றால் தொலைக்காட்சிகளில் 'இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குபவர்கள்' என்று விளம்பரம் செய்கிற மாதிரி 'இந்த சாலையை உங்களுக்காகப் பராமரிப்பது' என்று விளம்பர போர்டு வைக்க அனுமதித்து அதன் மூலம் கூட சாலைகளைப் பராமரிக்கலாம்!" என்றார் மணி.



• சக்தி பெருமாள்



• மணி



• செல்வம்

அந்த இளைஞர் இவ்வளவு சீரியஸாகவும், இவ்வளவு நீளமாகவும் பேசியதன் அர்த்தத்தை மதுரை சாலைகளில் நாம் பயணித்தபோது நேரடியாக உணர முடிந்தது. சாலையின் இரு புறங்களிலும் ஒரு பிளாட்ஃபார்ம் அளவிற்கு மணற்குவியல்கள்...! பனகல் ரோடு பளபளப்பது ஒருபுறம் என்றால், போட்ட மறுவாரமே சிதைந்து நிற்கும் ஆரப்பாளையம் ரோடு மறுபுறம்!

"ஆரப்பாளையம் சாலை இப்படி ஆனதற்குக் காரணம் – மழை பெய்யும்போது சாலை போடும் பணியைச் செய்ததுதான்! தண்ணீருக்கும், தாருக்கும் ஆகவே ஆகாது என்பதை அந்த காண்ட்ராக்டர் எப்படி உணராமல் போனாரோ தெரியவில்லை. வேலைகளில் வேகத்தைவிட விவேகம்தானே முக்கியம்?!" என்றார் அப்பகுதி முன்னாள் கவுன்சிலர் கருணைதாசன். எம்.ஜி.ஆர். கழகப் பிரமுகரான அவர், தொடர்ந்து "வருவாயை பெருக்கக்கூடிய வழி வகைகளை மாநகராட்சி உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். விளம்பர போர்டுகள், பேனர்கள் மூலம் வருவாயைப் பெருக்க முயற்சிக்க வேண்டும். பல ஆண்டுகளாய் மக்கள் கேட்டு வரும் மெஜுரா கோட்ஸ் அருகேயுள்ள ரயில்வே கேட் மீது ஓவர் பிரிட்ஜ் கட்டப் போவதாக அறிவிப்பு வந்தவண்ணம் இருக்கிறதே தவிர வேலை ஆரம்பிப்பதாய்த் தெரியவில்லை. சபாநாயகர் இப்பிரச்னையில் தீவிர முயற்சி எடுப்பதாக அறிகிறேன். அந்தப் பாலம் கட்டப்பட்டால்

"மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் 38 கோடி ரூபாய். ஆனால் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கே 24 கோடி ரூபாய் செலவாகி விடுகிறது. மீதிப் பணத்தில்தான் வளர்ச்சிப் பணிகளைப் பார்க்க வேண்டும்."



• மேயர் குழந்தைவேலு



இப்பகுதி மக்களுக்குப் பெரிய விமோசனமாக அமையும்'' என்றார்.

அவர் குறிப்பிட்ட ரயில்வே கேட் பொது மக்களிடம் மிகப் பெரிய வெறுப்பை சம்பாதித்து வைத்துள்ளது. ஜங்ஷனுக்கு மிக அருகில் இருப்பதால் ஷண்ட்டிங், இஞ்சின் மாற்றம், ரெகுலர் ட்ரெயின்கள் நிற்பது... என்று ஒரு நாளைக்கு சராசரியாக ஒன்பது மணி நேரம் அடைக்கப்பட்டு விடுகிறது. பக்கத்திலேயே மாற்றுப் பாதை (சுரங்கப் பாதை) ஒன்று இருந்தாலும் கன ரக வாகனங்கள் வளைந்து செல்வது இயலாத காரியம். தவிர சிறு மழை பெய்தாலும் அதன்பின் அந்தப் பாதையில் படகு மட்டும்தான் செல்ல முடியும்! அப்போது அந்தப் பாதையில் பஸ்களும், பிற வாகனங்களும் இந்த 'கேட்'டில்தான் மாட்டியாக வேண்டும்.

''சாலையை விடுங்க. சாக்கடை வசதி அதை விட முக்கியமில்லையா? அதுதான் முதலில் சரி செய்யப்படணும். ஞானஒளிவுபுரம், விசுவாசபுரி எல்லாம் மதுரையில் முக்கியப் பகுதிகள். ஆனால் பாதாளச் சாக்கடை கிடையாது. திறந்தவெளிச் சாக்கடை பல சமயங்களில் நிரம்பி தெருவுக்கு வந்து விடுகிறது. இந்த மேயர் சிறப்பாகவே செயல்படுகிறார். எங்கள் பகுதியில் பாதாளச் சாக்கடை கொண்டு வருவார் என்று நம்புகிறோம்'' என்றார் செல்வமாணிக்கம் என்ற இளைஞர்.

இந்தச் சாக்கடை பிரச்னை அருள்தாஸ்புரம், தத்தனேரி, செங்கோல் நகர் போன்ற பகுதிகளில் அதிகம். மேலும் மழை பெய்தால் வீட்டைச் சுற்றி, நீர் தேங்கி நின்று விடுகிறது என்ற குறை கூறுகிறார்கள் அப்பகுதி மக்கள்.

''எப்போதும் அரசை மட்டுமே பொது மக்கள் குறை கூறுவது வழக்கமாகி விட்டது. அவர்களுக்கும் சமூகப் பொறுப்பு உள்ளது. நீரை வெளியேற்றக்கூடிய கால்வாய்களில் வீடு கட்டி ஆக்ரமிப்பு செய்துள்ளார்கள். பிறகெப்படி நீரை அகற்றுவது? கண்மாய்களிலும் ஆக்ரமிப்பு செய்துள்ளார்கள். கண்மாயில் நீர் தேங்காமல் என்ன செய்யும்? எனது வார்டில் பெரும் பகுதி பஞ்சாயத்திலிருந்து மாநகராட்சிக்குப் புதிதாக வந்துள்ளது. எனவே தேவைகள் அதிகமிருப்பது வாஸ்தவம் தான். மேயரும் அதை உணர்ந்து மற்ற வார்டுகளைவிட என் வார்டுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இது வரை இருபது லட்ச ரூபாய்க்கு பணிகள் நடந்து முடிந்துள்ளன. இன்னும் இருபத்தேழு லட்ச ரூபாய்க்குப் பணிகள் துவங்கியுள்ளன'' என்றார் அப்பகுதி (1வது வார்டு) கவுன்சிலரான பேராசிரியை சக்தி பெருமாள்.

பெரும்பாலும் புறநகர் விரிவாக்கப் பகுதிகளெல்லாமே சாக்கடை பிரச்னைகளிலும் குடிநீர் பிரச்னைகளிலும் சிக்கித் தவிக்கின்றன. ''என் வார்டில் லீலாவதி குடிநீர் குழாய் அமைக்கும் பிரச்னையில் கொலை செய்யப்பட்டதால், தெருக் குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்புப் பணிகள் ஓரளவு திருப்திகரமாக நடந்து முடிந்து விட்டன. வில்லாபுரம் பகுதியைப் பொறுத்த வரை சாலைகள்தான் குறைபாடு. அதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் சரியாகி விடும். மதுரை மேயர் கட்சிப் பாகுபாடு இல்லாமல் செயல்படுவது ஆரோக்கியமான விஷயம்'' என்றார், லீலாவதி கொலைக்குப் பிறகு ஜெயித்து கவுன்சிலரான செல்லம் (இ. கம்யூ).



புறநகர்ப் பகுதியில் குப்பைகள் சரிவர அள்ளப்படாமல் குவிந்து கிடக்கின்றன. மாநகரின் முக்கியப் பகுதிகளில் நாளொன்றுக்கு இருமுறை குப்பை அகற்றப்பட வேண்டும் என்று விதி இருந்தும் ஒருமுறை மட்டுமே அகற்றப்பட்டு வருகிறது. நூறு மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் 'போதுமானதல்ல' என்கிறார்கள் ஊழியர்கள். மாட்டு வண்டி பயன்படுத்துவதையே சாடுகிறார், த.மா.கா. கவுன்சிலரான மீனா செல்வராஜ்.

''21ம் நூற்றாண்டை நெருங்கியும் இன்னமும் மாட்டு வண்டியைப் பயன்படுத்துவதே வெட்கப்பட வேண்டிய விஷயம். குப்பையை ஒருபுறம் அள்ளிக் கொண்டு போக... மறுபுறம் அந்த மாடு போட்டுக் கொண்டு போகும் சாணம் அள்ள ஆளில்லாமல் ரோட்டில் அசிங்கமாகக் கிடக்கிறது. மோட்டார் பொருத்திய ட்ரை சைக்கிள் என்றால் வேலையில் வேகம் இருக்கும். எல்லாப் பகுதியையும் கவர் பண்ண நேரம் கிடைக்கும்'' என்கிறார் இவர். இது குறித்து மாமன்றக் கூட்டத்திலும் குரல் கொடுத்துள்ளார்.

அண்ணாநகர், கே.கே.நகர் மக்கள் மிகவும் நொந்து போய் சொன்ன குறை வண்டியூர் கண்மாய்க்கரையில் அமைக்கப்பட்டு, படகுத் துறை, குழந்தைகள் ரயில், வண்ண விளக்குகள், சிற்

றுண்டிச் சாலை என்று வளர்ந்த மாநகராட்சி பூங்கா தற்போது சுடுகாடு மாதிரி ஆகி வருவதை! அப்பூங்காவை தற்போது நிர்வகித்து வரும் வாக்கர்ஸ் கிளப்பின் செயலர் வி.எஸ்.ராஜேந்திரனை சந்தித்தபோது ''மாநகராட்சிதான் முதலில் பூங்காவை நிர்மாணித்தது. அதன் பிறகு சுற்றுலாத் துறை அந்தப் பூங்காவைத் தத்தெடுத்து, கண்மாயில் படகுத் துறை மற்றும் குழந்தை ரயில், சிற்றுண்டிச் சாலைகளை அமைத்தது. மதுரையில் கடற்கரை இல்லாத குறையை ஓரளவு இந்தப் பூங்கா தீர்க்கிறது என்று சந்தோஷம் கொஞ்ச நாள் கூட நீடிக்கவில்லை. கண்மாயில் தண்ணீர் கொஞ்சம் வற்றியதும் படகை நிறுத்தினார்கள். அடுத்து ரயிலையும் எடுத்து விட்டார்கள். கூட்டம் குறைந்ததால் சிற்றுண்டிச் சாலையும் மூடப்பட்டது. பூங்காவை 'அம்போ'வென விட்டு விட்டது சுற்றுலாத் துறை. பிறகு நாங்கள் முயற்சி எடுத்து கலெக்டர் மூலமாக நிர்வகிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றோம். 'பொது மக்களிடம் ஒரு ரூபாய் டிக்கெட் போட்டு நீங்களே மெயின்டெயின் பண்ணுங்க'ன்னு சொன்னாங்க. ஆனால் போர்வெல்லும், பவர் கனெக்ஷனும் உள்ள சிற்றுண்டிச் சாலையின் சாவி சுற்றுலாத் துறை வசம் உள்ளது. எனவே, நீர் பாய்ச்சவோ, இரவில் விளக்கு போடவோ முடியாது. இந்நிலையில் ஒரு ரூபாய் வசூல் பண்ணினால் யார் வருவார்?

• உயிரிழக்கும் பூங்கா



மதுரை மேயரை சந்தித்தோம். பூங்கா பிரச்னையையே முதலில் முன் வைத்தோம். ''அந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதுதான். ஆனால் தற்போது அது சுற்றுலாத் துறை வசமுள்ளது. மீண்டும் எங்களிடம் இடத்தை ஒப்படைக்கும்படி சுற்றுலாத் துறைக்கு எழுதியுள்ளோம். அவர்கள் ஒப்படைத்த பிறகுதான் மாநகராட்சி தலையிட முடியும்'' என்றார் மேயர் பெ. குழந்தைவேலு.

அடுத்தடுத்து மக்களின் குறைகளை அவர் முன் வைக்க... அதற்கு மேயர் அளித்த விளக்கங்கள்:

"எல்லா சாலைகளையுமே பளகல் சாலை போன்றே தரத்துடன் அமைக்கவே திட்டமிட்டுள்ளோம். ஆரப்பாளையம் சாலையில் இன்னொரு அடுக்கு போட வேண்டியுள்ளது. அதற்குள் நாளிதழ்கள் விவரம் தெரியாமல் எழுதி விட்டன. சாலைகளில் மண் தேங்குவது பெரிய பிரச்னைதான். அரை பாடி லாரிகள் மணலை சிந்திக் கொண்டே போவதாக புகார் வந்துள்ளது. எனவே இனி அரை பாடி லாரிகள் ஓட்டைகள் ஏதும் இல்லாமல், மேலே தார் பாய் போட்டு மூடிதான் மணலை நகருக்குள் கொண்டு வர வேண்டும் – என்று அறிவிக்க உள்ளோம். எல்லா சாலைகளிலும் தொடர்ந்து மணலை அகற்ற ஆட்கள் போதுமான அளவில் இல்லை. தொடர்ந்து மாணவர்களைப் பயன்படுத்தினால் பெற்றோரும், நாளிதழ்களும் எதிர்ப்பு கிளப்ப வாய்ப்புள்ளது. நீங்கள் கூறுவதுபோல் மணலை அகற்ற விளம்பரதாரர்கள் முன் வந்தால் சாலையின் இருமுனைகளிலும் அவர்கள் போர்டு வைத்துக் கொள்ள மாநகராட்சி இலவச அனுமதி தரத் தயாராயுள்ளது.

''மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் 38 கோடி ரூபாய். ஆனால் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கே 24 கோடி ரூபாய் செலவாகி விடுகிறது. மீதிப் பணத்தில்தான் வளர்ச்சிப் பணிகளை பார்க்க வேண்டும். ஐந்து கோடி ரூபாய் வரி பாக்கி உள்ளது. அதை வசூலிக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளோம். வீட்டு வரியை ரிவைஸ் பண்ண உள்ளோம். எனவே வருவாய் கூடும்.

"மேஜுரா கோட்ஸ் அருகேயுள்ள பாலம் கட்டுவது குறித்து டெண்டர் அறிவித்தாகி விட்டது. டிசம்பரில் பணி துவங்குகிறது. ஞானஒளிவுபுரம் பகுதியில் பாதாளச் சாக்கடைக்கு காண்ட்ராக்ட் கொடுத்து விட்டோம். இம்மாத இறுதியில் பணி துவங்குகிறது. எல்லீஸ் நகரிலும் விரைவில் சுகாதாரப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

"நூற்றுக்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகளை தடாலடியாய் ஒழித்து விட முடியாது. படிப்படியாகத்தான் குறைக்க முடியும். குறைப்போம்.


"ஒருநாள் விட்டு ஒரு நாள் ஒரு மணி நேரம் குடிநீர் விநியோகமாகிறது. இது போதுமானதாக இருப்பதாக அறிகிறேன். மாடக்குளம் மற்றும் வண்டியூர் கண்மாய்களை மாநகராட்சி வசம் தரும்படி விண்ணப்பிக்க உள்ளோம். கிடைத்தால் குடிநீர் பிரச்னை மேலும் குறையும்."

மாநகரின் பல பகுதிகளில் மாநகராட்சி கழிப்பறைகள் மூடியே கிடப்பது பற்றியும், மாநகரில் நிலவும் வோல்டேஜ் பிரச்னை குறித்தும் கேட்டபோது "வோல்டேஜ் பிரச்னைக்காகதான் 12 ட்ரான்ஸ்ஃபார்மர்கள் புதிதாய் நிறுவியுள்ளோம். புதிதாக நான்கு துணை மின் நிலையங்கள் நிறுவ மின் வாரியம் இடம் கேட்டது. நாங்களும் கொடுத்துள்ளோம். அவை வந்து விட்டால் வோல்டேஜ் பிரச்னை முற்றிலும் தீர்ந்து விடும்.

— கிரண் நியூஸ்,

படங்கள்: **பி. ராஜாமணி.**

(கோவை, தூத்துக்குடி ரிப்போர்ட்கள் அடுத்த வாரம்!)



ஸைசலேன்ஸ்...

முன்னனுபவம் அதிகம் இல்லாத (அல்லது மறந்து போயிருக்கும்) அன்பர்களுக்கு மழையைச் சமாளிக்க சில டிப்ஸ்: (இதைப் படிக்கிற நேரம் மழை நின்று போயிருந்தால் அடுத்த வருஷத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.)

குடை :

● வை. கோவுக்கு மட்டு மல்ல; மழைக்காலத்தில் நமக்கும் குடையின் தயவு வேண்டும். ஆகவே மழை அடிக்காத காலத் தில் அந்தக் கறுப்பு பாதுகாப்புப் படையினரைக் கடாசி விடா மல் இருக்க வேண்டியது அவ சியம். கண்டு கொள்ளாமல் அதை ஒரு மூலை யில் போட்டு விட்டால், பூச்சிகளுக்குப் பசி யெடுத்து உள்ளே பூரா சாப்பிட்டு, விரித்தால் உலகைக் காட்டிவிடும். மேலும் கம்பிகள் முறுக்கிக் கொண்டு சரிவர திறந்து மூட இயலா மல் சதி செய்யும். குடையை உபயோகிக்காத நேரங்களில், முழுவதுமாக உலர்ந்த பிறகு மடக்கி அதனுள் சில நாப்தலின் உருண்டைகளைப் போட்டு வையுங்கள். வாரம் ஒரு தரம் திறப்பு விழா செய்து திரும்பவும் மூடி வையுங்கள். ஏதாவது ரிப்பேர் தெரிந்தால் உடனே குடை ரிப்பேரர்களுக்கு வாழ்வு கொடுத்து, வாங்கி வையுங்கள்.

● பேய் மழையில், காற்றில் குடை யின் தலை பிரிந்து டிஷ் ஆண்டெனா மாதிரி வானம் பார்த்து விடுவது இயற்கை. வெளியே கிளம்பும் போதே ட்வைன் நூலால் குடையின் கம்பி முனைகள் சிலவற்றுக்கும் கைப் பிடிக்கும் தாலிகட்டி விடுங்கள்; பறக்காது! (அது இழுத்துக் கொண்டு பாய்கிற வேகத்தில் நீங்களே பறந்து விட்டால் நாம் பொறுப்பல்ல!)

ரெயின் கோட் :

● குடையை விடவும் தீவிர மாகப் பராமரிக்கப்பட வேண்டிய ஐட்டம் இது. ரெயின் கோட்டை நிழலில் உலர்த்துங்கள். காய்ந்து விட்டது போல் தோன்றினா லும் அதன் அக்குள் பகுதிகளை ஓர் ஆராய்ச்சியாளரின் கண்ணோட்டத்தில் கவனி யுங்கள். நன்கு உலராமல் மடித்து வைத்தால் அங்கே பூஞ்சைக் காளான்கள் பூக்கத் தொடங்கிவிடும்.

● ரெயின் கோட்டின் உட்புறம் பவுடர் தூவி வைத்தால், நாறாது. ஈரம், மண்துகள்கள், சேறுடன் ரெயின் கோட்டை மடித்து வைத் தால் (அதுவும் இடுக்குகளில்) அடுத்த மழைக்கு எடுக்கும் போது பொல பொலவென தோல் உதிர்ந்து, பார்க்கவே பரிதாபமாயிருக்கும்.

டூ விலர்கள் :

மொப்பெட் என்கிற மூன்றுசூறு வாகனர் களுக்கு மழை ஒரு விரோதி. ஆங்காங்கே சாலையில் கிணறுகள் உற்பத்தியாகி, தண்ணீர் தேங்கி, நமது வாகனம் அதில் குளித்தால், உடனே மூர்ச்சையாகி விடும். பிறகு கொட்டும் மழையில் ஸ்பார்க் பிளக்கைக் கழற்றி அதற்கு சமாஸ்ரயனம் செய்ய மெக்கானிக் மகானுபா வர்களைத் தேடிப் போவதற்குள் (தள்ளிக் கொண்டு!) கல்யாணியைப் போல வாழ்க்



மழை பெய்யுது!

கையின் ஓரத்துக்கே ஓட வேண்டி வரும்! என்ன செய்யலாம்?



- எங்காவது தண்ணீர் தேங்கியிருந்தால் வண்டி எஞ்சினை அணைத்து விட்டு, புகை போக்கியிலும் முன்புறம் ஸ்பார்க் பிளக் இருக்கிற ஏரியாவிலும் ஒரு பிளாஸ்டிக் கவரால் மூடி விடவும். பிறகு தள்ளிக் கொண்டு, கடலைத் தாண்டவும். பிறகு கவரை எடுத்துவிட்டு அடுத்த கடல் வரும் வரை ஓட்டலாம்.
- இதைவிடச் சுலபமான வழி, மழையில் வண்டியை எடுக்காமல் மாநகரப் பேருந்தை மட்டுமே நம்பி வெளியே இறங்குவது.

செய்தித்தாள்கள் :

ஒலிம்பிக் தட்டு எறியும் போட்டிக்குப் போகாமல், வீடுகளில் பேப்பர் வீசும் பையன்களுக்கு மழையில் வீடு போய்ச் சேர்வதே பெரிய விஷயம். கஸ்டமர்கள் செய்தித் தாள்களைப் படிக்க வேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல; போட்டுவிட்டால் போதும். ஈரத் தரையில் பேப்பர்கள் ஊறுத்த அப்பளம் மாதிரி 'ஜொய்ங் ஜொய்ங்' என்று கிடந்தால், பையனைச் சபிப்பதை நிறுத்தி விட்டு, ஆகிற காரியத்தைப் பார்க்க வேண்டும்.

- கேஸை மூட்டி, தோசைக் கல்லைப் போடவும் (நான் - ஸ்டிக்காக இருப்பின் மிக சௌகர்யம்.) நன்கு சூடானதும் எடுத்து வைத்து அதன் மேல் ஈர பேப்பரைப் போடவும். தோசை மாதிரியே அப்படி இப்படி திருப்பித் திருப்பி ஒரு பத்து நிமிடம் போட்டால் ஈரம் உறிஞ்சப்பட்டு, எழுத்துக்கள் தெளிவாகக் கிடைக்கும்.

(நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுக் காய வைத்த பேப்பரைப் பிரிக்கும் போது காஸ் சிலிண்டர் விலை ஏறிய செய்தி கண்ணில் பட்டால் எம்மைச் சபிக்க வேண்டாம்!)

ஷூ :

ஷூ அணிவதைத் தவிர்க்க முடியாதவர்கள், தோல் செருப்பு அணிபவர்கள், மழையில் நனைந்து பூரிமாதிரி உப்பின காலணிகளோடு வீடு வருவார்கள். நீரில் ஊறிய தோல் ஷூக்களை எப்படிக் காப்பாற்றுவது?

- வீட்டுக்கு வந்ததும் ஷூக்களை உலர்ந்த துணியால் நன்கு துடைக்கவும். பிறகு பழைய செய்தித்தாள்களைச் சுருட்டி ஷூவுக்குள் அடைத்து, மேல் புறமும் பேப்பரைச் சுருட்டி வையுங்கள். மறு நாள் பிரிக்கும் போது 90 சதம் நீர் உறிஞ்சப்பட்டிருக்கும்!

பால் :

மழை நாட்களில் ஆவின் வண்டிகளை அதிகம் நம்ப முடியாது. என்ன செய்வது காப்பிக்கு?

- சில தனியார் பால் நிறுவனங்கள்



காலணி வாங்குவதற்கு ஏற்ற நேரம் மாலைப் பொழுதுதான். ஏனென்றால் நாள் முழுவதும் நாம் நடந்து கொண்டே இருப்பதால் நம் பாதங்கள் லேசாக வீங்கி இருக்கும். அப்போதுதான் காலணிகள் காலுக்கு ஏற்றதாக அமையும்.

ஆதாரம் : 'ஹிந்து'

தகவல் : க. மாரியப்பன்

வந்திருக்கின்றன. ஆவின் போலவே பிரைவேட் பாக்கெட் பால்கள் கிடைக்கும். சூப்பர் மார்க்கெட்டுகளில் வாங்கி, முன் கூட்டியே குளுகுளு பெட்டியில் வைத்து விடவும்.

● *பால் பவுடர் பாலில் சுவை குறைவு என்றாலும் ஒன்றும் இல்லாததற்கு அது தேவலை.*

● *பால் கலக்காத கடும் காப்பி சாப்பிடலாம். (டேஸ்டாகவே இருக்கும்)*

● *காப்பி சாப்பிடுவதையே நிறுத்தி விடலாம். (பொடி விற்கிற விலையில்...!)*

மின் தடை :

ஒரு தூறல் போட்டாலே எம்சஎஸ் புண்ணியவான்கள் சப்ளையை நிறுத்தி விடுவார்கள். ஆகவே இவ்விஷயத்தில் முன் யோசனை அவசியம்.

● *டார்ச் லைட்டுகளைத் தயாராக (செல்லுடன்) வைத்திருங்கள். சார்ஜ் விளக்குகள் இருந்தால் சார்ஜ் பண்ணி வைக்கவும்.*

● மெழுகுவர்த்தி, தீப்பெட்டியை ஒரு குறிப்பிட்ட இடத்தில், எல்லோருக்கும் அறிவித்துவிட்டு வைக்கவும். எடுக்க சௌகர்யம்.

● மெழுகுவர்த்தி உருகி வீணாகாமல் இருக்க, ஒரு கப் அல்லது அகலில் வைத்துக் கொளுத்தினால், உருகி வழியும் மெழுகே மீண்டும் எரிந்து செலவு மிச்சம் பிடிக்கும்!

● ஓவர்ஹெட் டாங்கில் தண்ணி ஒரு முறைக்கு இருமுறை சரி பார்த்து நிரப்பி வையுங்கள். மின் கேபிளுக்குள் தண்ணி புகுந்து கழுத்தறுக்கும் வெட்டு (wet) தினங்களில் சமாளிக்கலாம்.

கொசு : *(மின் தடை தொடர்ச்சி)*

● மழை பெய்தால் குட்டை தேங்கும். குட்டையில் கொசு முளைக்கும். கொசு ஆளைக் கடிக்கும். கடியிலிருந்து தப்ப மின் விசிறி, கொசு மேட் வேண்டும். கரண்ட் போனால் இவை இல்லை. ஆகவே அர்ஜுனா! மழை பெய்து கரண்ட் போனதும் உடனே கதவு ஜன்னல்களை மூடிவை என்று கீதையில் கிருஷ்ணர் சொல்லாவிட்டாலும் இப்போது நாம் சொல்கிறோம்.

காய்கறி :

● *மழைக்காலத்தில் காய்கறி விலையெல்லாம் கண்டபடி ஏறிவிடும். அழுது கொண்டே அவற்றை வாங்குவதைவிட (அது அழுகி வேறு போயிருக்கும்!) கூடுதலாக அரை கிலோ பச்சைப் பயறு வாங்கி வைத்தால் ஊற வைத்து முளை கட்டி, பச்சையாகவோ, சமைத்தோ பயன்படுத்தலாம். முன்னதாக வத்தல், வடாம் போட்டு வைத்து, பொரித்துக் கொறிக்கலாம். அப்பளம், சிப்ஸ் என்று கடையில் வாங்கி வைத்து தொட்டுக் கொண்டு சமாளிக்கலாம். (சில சமயம் இவை உங்கள் கணவர்/மனைவி சமையலை விடவும் சுவை தரக்கூடும்.)*

குடிநீர் :

மெட்ரோ குடிநீர் சப்ளை (ஒரு வேளை கிடைத்தால்!) கலங்கலாக இருக்கிறதா? மழைக் காலத்தில் மட்டும் 'அடடா, கிணறு பாசி பிடித்து இருக்கிறதே! தூர் வாரியிருக்கணும்' என்று திடீர் ஞானோதயம் வருகிறதா? அந்தக் குடிநீரைப் பயன்படுத்தத் தயக்கமா?

● *கிடைக்கிற குடிநீர் எதுவானாலும் காய்ச்சி, வடிகட்டி (பழைய விஷயம்தான்; ஆனாலும் இதற்கு மாற்று இல்லையே?) குடிக்கவும். வாட்டர் ஃபில்டர்கள் வைத்திருப்பவர்கள் அதைச் சுத்தமாகக் கழுவி, வாசனை ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.*

● *தண்ணீரைக் கொதிக்க வைக்கும்போது கொஞ்சம் துளசி இலைகளைச் சேர்த்துப் போட்டுக் கொதிக்க வையுங்கள். வாசனை ஒரு பக்கம்; கிருமி நாசினி மறுபக்கம்!*

துணிகள் :

சூர்ய கடாட்சம் இல்லாமல் துணிகள் காயாது. காயவில்லை என்பதால் மேலும் மேலும் துணிகளை எடுத்துப் பயன்படுத்தித் துவைத்தால் வீடு முழுதும் ஈரத் துணி தோரணம்தான்! இரண்டு மூன்று செட்டுக்கு மேல் புழக்கத்தில் விடாதீர்கள். என்ன மழையானாலும் இரவு ஃபேனின்றித் தூங்க முடியாது. எனவே முக்கால் காய்ந்த துணிகளை பெட்ரூமில் உலர வைத்துக் கொண்டால் விடிந்ததும் லேசாக அயர்ன் செய்து பயன்படுத்தலாம்.


சட்டையில் கறை :

லாரி, கார், ஆட்டோ, பஸ்கள், பாதசாரிகளுக்கு மழைக்காலத்தில் சந்தனாபிஷேகம் செய்வது வழக்கம். வெறும் சேறு மட்டுமல்லாமல் ஏற்கெனவே உமிழப்பட்ட வெற்றிலை, பான் கறைகளும் கலந்து அவை நம் சட்டையில் மாடர்ன் ஆர்ட் வரைந்தால், என்ன சோப்பு போட்டாலும் போகாது.

● *உப்புக் கரைத்த தண்ணீரில் ஒரு மூடி எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்து, அதில் தோய்த்து, கறையைக் கழுவிப் பாருங்கள். 95% இது நல்ல பலனைத் தரும்.*

தொகுப்பு : **மேகதூதன்**

(பக்கம் 66 லிருந்து 71 வரை மேலும் மழை பெய்யுது!)





1997 நவம்பர் 16
ஈசுவர கார்த்திகை 1
மலர் : 56
இதழ் : 16

கல்கி


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஆபரேஷன் வெற்றி! நோயாளி..?

புரட்சிகரமான முடிவொன்றை எடுத்திருக்கிறார் தமிழக முதல்வர்! ஆரம்ப சுகாதார மையங்களுக்கு ஆகக் கூடிய செலவைத் தூக்கி தனியார் துறை தொழில் நிறுவனங்களின் தலையில் வைத்திருக்கிறார்! அவையும் அந்தப் பொறுப்பை இன்முகத்துடன் ஏற்றுவிட்டன. இந்த யோசனையை முதல்வர் தெரிவித்ததுதான் தாமதம், நூறு ஆரம்ப சுகாதார மையங்களை நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு தத்து எடுத்துக் கொண்டு விட்டன தமிழ்நாட்டின் முன்னணித் தொழில் நிறுவனங்கள்! இவை தவிர, ஐந்து தாலுகா ஆஸ்பத்திரிகள், ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனை, ஒரு விபத்து சிகிச்சை மையம் ஆகியவையும் தத்து எடுக்கப்பட்டுள்ளன. இந்த 'தத்துப் பிள்ளை'களைப் பராமரிப்பது இனி இந்தத் தனியார் நிறுவனங்களின் பொறுப்பு.

சுகாதாரத்துக்கென மாநில அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் 833 கோடி ரூபாய் போதவில்லை என்பதால் இப்படி தனியார் துறையின் உதவியை நாடியிருக்கிறது தமிழக அரசு. இந்த புத்திசாலித்தனத்தை மெச்சி ஜோராக ஒருமுறை கை தட்டுவதற்குப் பதில், சில கோணல் புத்திக்காரர்கள் வேறு விதமாய்க் கணக்குப்




பண்ணுகிறார்கள்.

'இந்தத் தனியார் நிறுவனங்கள் கண்ணை மூடிக்கொண்டு கணக்குப் பார்க்காமலா செலவு செய்வார்கள்..? தங்களுக்கு ஆகக்கூடிய கூடுதல் செலவை ஈடுகட்ட தங்கள் தயாரிப்புகளின் விலையை அல்லவா கூட்டுவார்கள்...? அந்தச் சுமை நமது தலையிலல்லவா விடியும்..?' என்று கேட்கிறார்கள்.

கொஞ்சமேனும் பொதுநல நோக்கு இல்லாத பாவிகள் இவர்கள்! சுமந்து சிவந்த தோளுடைய நமக்குச் சுமை இன்னும் அதிகமானால் என்ன- குடியா முழுகிவிடும்? இந்தத் திட்டத்தின் மூலம் அத்தனை தனியார் நிறுவனங்களும் விளம்பரம் பெறப் போகின்றன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டாமோ..? அப்படி விளம்பரம் பெற உதவியுள்ள அரசின் திட்டத்தை வாழ்த்த வேண்டாமோ..?

'அனேக தனியார் தொழில் நிறுவனங்கள், ஏற்கெனவே தங்கள் வட்டாரத்தில் தனிப்பட்ட முறையில் சமுதாயப் பணிகளைச் செய்து வருகின்றனவே... இப்படி அரசாங்கத்தின் தலைவலிகளையும் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டுமா..?' என்று அனாவசிய கவலைப்படுகிறார்கள், அசடுகள் சிலர். இந்த ஏற்பாட்டினால் தொழில்துறை முழுக்கவே ஆரோக்கியம் ததும்பப் போகிறது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்! எப்படி..?

இன்றைக்கு அரசாங்கத்தின் திட்டத்துக்குத் தோள் கொடுத்தால் நாளைக்கு ஏதேனும் சலுகையோ, உதவியோ தேவைப்படும் நேரத்தில் தலையைச் சொறிந்து கொண்டு நிற்காமல், ரைட் ராயலாகக் கேட்டுப் பெறலாம் அல்லவா..? இதைவிட



ஆரோக்கியமான முன்னேற்றம் என்ன இருக்க முடியும்!

தனியார் துறையினர் கட்டடத்தைக் கட்டித் தரலாம்; கட்டில் வாங்கிப் போடலாம்... அரசாங்க டாக்டர்கள், சுகாதார ஊழியர்களின் ஆத்மார்த்தமான ஈடுபாட்டை அவர்கள் உறுதிசெய்ய முடியாதே...! மருந்துகள் வாங்குவதில் உள்ள ஊழல்களை யெல்லாம் ஒழிக்க முடியாதே! ஊழியர்கள் பொறுப்புணர்ச்சியுடன் இயங்காதவரை தனியார் அமைப்புகளின் முதலீடும் முயற்சியும் வீணாகத்தானே போகும்...? கூடவே அவற்றின் பெயரும் அல்லவா ரிப்பேர் ஆகிப் போகும்? இந்த இரண்டுங்கெட்டான் நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக திட்டத்தை 'உல்டா' பண்ணலாமே என்று சில மேதாவிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அதாவது சுகாதார மையத்தின் கட்டடம், கட்டில்கள், மருத்துவ உபகரணங்கள்-இவை அரசின் சொத்தாக இருக் கட்டும்... இவற்றுக்கு மருத்துவ ஊழியர்களை நியமித்து, நிர்வாகம் செய்வதைத் தனியார் பொறுப்பில் விட்டுப் பார்க்கலாம். பரீட்சார்த்தமாகச் சில இடங்களில் செய்து பார்த்து, பிறகு விஸ்தரிக்கலாம்.... என்பது இந்த புத்திசாலிகளின் 'யுரேகா' கண்டுபிடிப்பு!

இப்படிப்பட்ட விபரீதமான கற்பனைகளில் ஈடுபட்டு உருப்படியான யோசனைகளைக் கூறுகின்ற அசடர்களுக்காகவே தமிழக அரசு மனவள மையங்கள் நிறுவி, தனிக் கவனத்துடன் சிகிச்சை அளிக்க முன் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கருணையுடன் எடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு, தாராளமாய் நிதி உதவ மேலும் சில தொழில் நிறுவனங்கள் முன் வராமலா போய் விடும்!

"இந்திய கிரிக்கெட் வீரர்கள் தாம் விளையாடும் மேட்ச் தோற்பதற்காகப் பணம் வாங்குகிறார்கள். எனக்கே பணம் கொடுக்க சிலர் முயற்சித்தனர்! ஆனால் நான் வாங்கவில்லை" என்று வெடி குண்டைப் போட்டு இந்திய கிரிக்கெட்டையே கலக்கியவர் மனோஜ் பிரபாகர். அவர் சொன்ன குற்றச்சாட்டை அலட்சியப்படுத்தாமல் நீதிபதி சந்திரசூட் தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் நியமிக்கப்பட்டது. நீதிபதி சந்திரசூட், பிரபாகர் உட்பட பிரபல கிரிக்கெட் வீரர்கள், பத்திரிகைக்காரர்கள், முன்னாள் இந்திய கிரிக்கெட் மானேஜர் அஜித் வடேகர் உட்படப் பலரை விசாரணை செய்து கிரிக்கெட் போர்டிடம் தனது ரிப்போர்ட்டைக் கொடுத்தார். நீதிபதி அளித்த ரிப்போர்ட்டில் யாரும் பணம் வாங்கியதாகத் தனக்கு தெரியவில்லை என்று கூறியுள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் போர்டைத் தாக்கிய மனோஜ் பிரபாகர், பெங்களூர் வந்தபோது சந்தித்து அவரிடமே விளக்கம் கேட்டோம். 'தாம் கூறிய குற்றச்சாட்டு அப்படியேதான் இருக்கிறது' என்று இன்னமும் உறுதியாக நம்புகிறார் பிரபாகர்! இனி பேட்டி.

கல்கி : நீங்கள் கூறிய குற்றச்சாட்டை இல்லையென்று நீதிபதி சந்திரசூட் மறுத்திருக்கிறாரே, அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

மனோஜ் பிரபாகர் : நான் சொன்ன குற்றச்சாட்டு அப்படியேதான் உள்ளது. அந்தக் குறிப்பிட்ட ஆட்டத்தில் (இந்திய/பாக் அணிகள் இலங்கையில் மோதிய சமயம்) இந்திய அணி தோற்பதற்காக எனக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை தருவதாகச் சில வீரர்கள் ஆசை காட்டினார்கள். ஆனால் நான் ஆசைப்படவில்லை. எனவே நான் பணம் வாங்கவில்லை. நீதிபதியிடம் நடந்ததை அப்படியே கூறிவிட்டேன். அதை நம்புவதும் நம்பாததும் அவரின் உரிமை. அதற்காக நடந்ததை இல்லையென்று சொல்லிவிட முடியுமா? இன்று நான் கூறியதை யாரும் நம்பாவிட்டாலும் நாளை எல்லோரும் நம்பத்தான் போகிறார்கள்.

கல்கி : சரி. இப்போதாவது எங்களிடம் (பத்திரிகைக்காரர்கள்) சொல்லலாமே? தங்களுக்குப் பணம் கொடுக்க வந்த வீரர்கள் யார் என?

பிரபாகர் : வேண்டாமே! அவர்கள் இன்னும் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஏதோ என்னைத்தான் அணியிலிருந்து எடுத்து விட்டார்கள். அவர்களாவது விளையாடட்டுமே.

கல்கி : அப்போது, நீங்கள் புகார் கூறிய வீரர்கள் இன்று இந்திய அணியில்தான் இருக்கிறார்களா?

பிரபாகர் : யெஸ்! அவர்கள் இன்றும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப் போனால் என்னிடம் விளையாடிய 'கேமை' இன்னமும் சிறப்பாகவே விளையாடுகிறார்கள்! அவர்கள் மைதானத்திற்குள்ளும் விளையாடுகிறார்கள். மைதானத்திற்கு வெளியேயும் விளையாடுகிறார்கள்.



கல்கி : எந்த நாட்டு சட்டப்படியும், குற்றம் செய்தவரை, தெரிந்து, அடையாளம் காண்பிக்காமல் இருப்பதும் குற்றம்தான். அப்படியிருக்க, பெரிய வெடி குண்டைப் போன்ற புகாரைச் சொல்லிய தாங்கள், யார் அந்த வீரர்கள் என்பதைச் சொல்லாமல் மறைப்பதும் குற்றம் என்று தங்களுக்குத் தெரியுமா?

பிரபாகர் : நான் எதையுமே மறைக்கவில்லையே! நீதிபதி சந்திரசூட்டிடம் யார்

மனோஜ் பிரபாகர் பரபரப்பு பேட்டி!

நான் ஒரு போராளி!

அந்தக் கறுப்பு ஆடுகள் என்பதை விவரமாகக் கூறி உள்ளேன். உங்களிடம்தான் (பத்திரிகைக் காரர்களிடம்) கூற மறுக்கிறேன். ஏனெனில் நீங்கள் திரித்துப் போடுகிறீர்கள். எனவேதான் கூற மறுக்கிறேன். ஏன், நீங்கள்தாம் படா கில்லாடிகள் ஆயிற்றே! அந்த நீதிபதியிடமே கேட்டு அந்த வீரர்களின் பெயரை வெளியிடலாமே! என் வாயால் வருவதை விட நீதிபதியின் வாயால் அந்தக் கறுப்பு ஆடுகள் யார் எனத் தெரிந்தால் இன்னும் நன்றாயிருக்குமே...

கல்கி : நீங்கள் இந்திய அணியில் விளையாடிய காலத்து வீரர்களில், குறிப்பிட்ட ஐந்தாறு வீரர்கள்தாம் இப்போது விளையாடுகிறார்கள். அதிலும் அனுபவசாலியான வீரர்கள் இன்னும் கம்மி. எனவே யார் அந்த வீரர்கள் என்று எளிதாக அடையாளம் கண்டு பிடிக்க முடியாதா, என்ன?

பிரபாகர் : (சிரித்தவாறே) அது உங்கள் சாமர்த்தியம்! என்ன, கண்டு பிடித்து விட்டீர்களா? எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்! (நாம் யூகித்தவர்களைச் சொல்ல, சிரித்துக் கொண்டே எந்த முகபாவமும் காட்டாமல் "நான் சொல்லவில்லை. நானே நான் சொன்னதாக நீங்கள் போடக் கூடாது!" என்று கேட்டுக் கொள்கிறார். ஆனாலும் ஒப்புக் கொண்டது போலவே முகபாவம்! வாசகர்கள் கண்டுபிடிக்க 'க்ளூ', பேட்டியின் கடைசியில்.)

கல்கி : நீங்கள் இந்திய அணியில் விளையாட வாய்ப்பு அளித்தால் மறுபடியும் விளையாடத் தயாரா?

பிரபாகர் : நான் தயார்தான். நான் இன்னமும் ரஞ்சிப் போட்டியில் டில்லி அணிக்கும், துலிப் போட்டியில் வடக்கு மண்டலத்திற்கும் கடந்த வருடமும் விளையாடினேன். இந்த வருடமும் விளையாடப் போகிறேன். எனது ஆட்டம் தேர்வு கமிட்டியைத் திருப்தி செய்தால் நான் தேர்வு செய்யப்படுவேன். ஆனாலும் இலங்கை அணிக்கு எதிராக தேர்வு செய்யப்படுவேன் என்று நினைக்கவில்லை. ஏன் எனில், ரஞ்சிப் போட்டிகளும், துலிப் போட்டியும் டிசம்பரில்தான் நடக்க உள்ளது. எனவே வருகிற ஜனவரியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக விளையாட வாய்ப்புக் கிடைக்கலாம்.

கல்கி : உங்களுக்கு கிரிக்கெட் போர்டுடனும் மற்ற வீரர்களுடனும் ஏன் அடிக்கடி தகராறு வருகிறது?

பிரபாகர் : அடிப்படையில் நான் போராளி. எப்பவும் எதற்காகவும் சமரசம் செய்யத் தயாராகவில்லை. இதுதான் என் பலம்! இதுவே என் பலவீனம்! இதனால் மற்றவர்களுடன் என்னால் அட்ஜஸ்ட் செய்ய முடியவில்லை. இலங்கை அணி ஜெயசூர்யா எனது பந்து வீச்சை ஒரே ஒரு மேட்சில் விளாசி அடித்ததற்காக என்னை அணியிலிருந்தே நீக்கினார்கள். ஆனால் ஜெயசூர்யா அடிக்காத பௌலர் உலகில் யாராவது இருக்கிறார்களா? இன்று ஜெயசூர்யாவிற்குப் பந்து போடவே உலகில் உள்ள எல்லா பௌலர்களும் பயப்படும் நிலையில் என்னை நீக்கியது மிகப் பெரிய கொடுமை! சரி, ஒரு மேட்ச் அல்லது ஒரு தொடரில் நீக்கினார்கள் என்றால் சரி. எனக்கு அடுத்த வாய்ப்பு தரவே இல்லையே! வினோத் காம்ப்ளிக்கு மட்டும் எத்தனை வாய்ப்புக்கள் தருகிறார்கள்? ஏன் எனில், காம்ப்ளி, சச்சினின் நண்பர் அல்லவா?

அந்தக் கறுப்பு ஆடுகள் யார்?
சில க்ளூக்கள்:

1. சங்கீதம் பாடும் நடிகையை இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்டவர்.
2. முன்னாள் விக்கெட் கீப்பர்.
3. கும்ப்ளேவின் பதவியில் தற்சமயம் உள்ளவர்.

பேட்டி : **பழுவேட்டரையர்**

உணர்வுகள்; உறவுகள்...



பொறாமைக்கு முடிவு கட்டுங்கள்!

காளஹஸ்தி என்று ஒரு வினை வித்துவான். தஞ்சாவூர் மகாராஜாவின் அரண்மனையில் இருந்தார். மகாராஜா பூஜை செய்யும்போது வீணை வாசிப்பார். வெகு நன்றாக வாசிப்பார். தம்மைவிடச் சிறப்பாக வீணை வாசிப்பவர் வேறு யாரும் இல்லை என்கிற கர்வம் கூட அவருக்கு உண்டு!

மைசூர் மகாராஜா ஒருமுறை, தமது அரண்மனைக்கு வந்து சில நாள் வீணை வாசிக்கும்படி காளஹஸ்தி அய்யரைக் கேட்டுக் கொண்டார். மகாராஜாவின் வேண்டுகோளைத் தட்ட மனமில்லை. அதனால் தஞ்சாவூர் மகாராஜாவிடம் அனுமதி கேட்டார். தாம் பூஜை செய்யும் சமயத்தில் காளஹஸ்தி அய்யரின் வீணையைக் கேட்க முடியாமல் போய்விடுமே என்கிற வருத்தம்தான் தஞ்சாவூர் மகாராஜாவுக்கு. இருந்தாலும் 'சரி போய் வாருங்கள்!' என்று அவரை மைசூருக்கு அனுப்பி வைத்தார்.

அப்புறம் தமது அமைச்சரைக் கூப்பிட்டு, தமது பூஜையின்போது காளஹஸ்தி அய்யரின் வீணை நாதத்தைக் கேட்க முடியாதே என்கிற வருத்தத்தைத் தெரிவித்தார் மகாராஜா. 'அதனால் என்ன! அவருடைய மகன் இருக்கிறாரே, அவரை அழைத்து வந்து வீணை வாசிக்கச் சொன்னால் போயிற்று!' என்றார் அமைச்சர். மகாராஜாவும் சந்தோஷத்தோடு அழைத்து வரச் சொன்னார்.

டாக்டர் எஸ். விஜயகுமார்

காளஹஸ்தி அய்யரின் மகனும் மிக நன்றாக வீணை வாசித்தான். மகாராஜா மிகவும் ரசித்தார். காளஹஸ்தி அய்யர் இல்லாத குறையே தெரியவில்லை மகாராஜாவுக்கு!

சில நாட்கள் கழித்து, தஞ்சாவூருக்குத் திரும்பி வந்தார் காளஹஸ்தி அய்யர். மகாராஜாவிடம் வந்து, இனி பழையபடி பூஜையின்போது வந்து வீணை வாசிப்பதாகவும் நடுவில் சில நாட்கள் தாம் வாசிக்க முடியாமல் போனதற்கு வருத்தமும் தெரிவித்துக் கொண்டார்.

'நீங்கள் வருத்தப்படவே வேண்டாம். நீங்கள் வாசிக்காத குறையை உங்கள் குமாரன் தீர்த்து வைத்து விட்டான். மிக நன்றாக வாசித்தான். உண்மையில், உங்களைவிட நன்றாகவே வாசித்தான். இனி நீங்கள் வந்துதான் வாசிக்க வேண்டும் என்கிற அவசியமே இல்லை. தினசரி உங்கள் குமாரனையே வந்து வாசிக்கச் சொல்லுங்கள்!' என்றார் மகாராஜா.

காளஹஸ்தி அய்யருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தமது மகன் வீணை வாசித்தானா? அவனுக்குத் தாம் வீணை வாசிக்கச் சொல்லித்தரக்கூட இல்லையே! எப்படி?

'நீ மகாராஜாவின் பூஜையில் வீணை வாசித்தாயா?'- வீட்டுக்கு வந்ததும் மகனிடம் கேட்டார்.

'ஆமாம்'

'எப்படி? நான்தான்

♦ ஒருவன் தனக்கு அளவற்ற உற்சாகம் இருக்கும் எந்தத் தொழிலிலும் வெற்றி பெற முடியும்.

– சார்லஸ் ஷ்வாப்

தகவல்: கே.ஆர். ரவீந்திரன்

உனக்குச் சொல்லித் தரவில்லையே?'

'நீங்கள் வாசிப்பதைப் பார்த்து நானாகவே கற்றுக் கொண்டேன், அவ்வளவுதான்!'

'அப்படியா! எங்கே, வீணை வாசித்த அந்தக் கையைக் காட்டு!' என்றார் காளஹஸ்தி அய்யர்.

மகன் தனது கையைக் காட்டியபோது, அவனது இடதுகை நடுவிரலை நறுக்கென்று ஒரு கடி,கடித்துத் துப்பி விட்டார் அய்யர்.

இடதுகை நடுவிரல் இல்லாமல் வீணை வாசிக்க முடியாது.

– இது 'பொறாமைக்கு அயலும் இல்லை; உறவும் இல்லை' என்கிற தலைப்பில் தமிழ்த் தாத்தா உ.வே.சா. எழுதிய ஒரு சம்பவம்.

பொறாமை என்கிற உணர்வு ஒரு மனிதனை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கும் என்பதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் இருக்க முடியாது. 'என்னை ஒருவனும் மிஞ்சி விட முடியாது' என்று நினைத்திருந்தார் வீணை வித்துவான். மகன் விஞ்சிக் காட்டியதும் தமது 'நான்' என்கிற எண்ணம் பாதுகாப்பற்றதாகிவிட்டதாக நினைத்தார். அதனால் தமது 'நானை' மீண்டும் பாதுகாப்பான நிலைக்குக் கொண்டு வர வேண்டுமானால் தமது மகன் மீண்டும் வீணை வாசிக்கக் கூடாது என்று நினைத்தார். விளைவு? மிருகத்தனமாக நடந்து கொண்டார்! இதுதான் பொறாமையின் உச்ச கட்டம்.

நடைமுறை வாழ்க்கையில் கூட நிறையப் பார்க்கலாம். அலுவலகத்தில் உள்ள சக ஊழியருக்குப் பதவியுயர்வு கிடைக்கும்போது, அதை எல்லோருமே அந்த ஊழியரின் திறமைக்குக் கிடைத்த பரிசு என்று நினைக்க மாட்டார்கள். 'அடப் போப்பா! அவன் எப்பப் பார்த்தாலும் மானேஜருக்கு அல்லது முதலாளிக்கு ஜால்ரா போட்டுக்கிட்டே இருப்பான். அதனாலதான் கெடச்சிருக்கு!' என்பார்கள் சிலர். காரணம், அந்த ஊழியரின் உழைப்பை ஒப்புக் கொள்ள இவர்களின் 'நான்' இடம் கொடுக்க மறுப்பதுதான். இவர்களும் நிதானமாக யோசித்துப் பார்த்தால் அந்த ஊழியர் எப்படியெல்லாம் அலுவலகத்துக்காக உழைத்தார் என்பது தெரியும். தாமும் அதுபோல் உழைத்தால் தமக்கும் பதவியுயர்வு கிடைக்கும் என்பதை உணரலாம். ஆனாலும் செய்ய மாட்டார்கள். விளைவு? இவர்கள் அதே நாற்காலியைத் தேய்த்துக் கொண்டே இருக்க வேண்டியதான்!

சில தந்தைமார்களைப் பார்க்கலாம். சிறு வயதில் மிகவும் சிரமப்பட்டிருப்பார்கள். சாப்பாட்டுக்கே ரொம்பவும் கஷ்டப்பட்டிருப்பார்கள். பிறகு உழைத்து படிப்படியாக முன்னேறி இன்று நல்ல வசதியில் இருப்பார்கள். இந்த நிலையில் தாம்தான் சிறு வயதில் நன்றாகச் சாப்பிட முடியவில்லை; நன்றாக உடுத்த முடியவில்லை! குழந்தைகளாவது நன்றாக அனுபவிக்கட்டும் என்று சிலர் நினைப்பார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு உதவியும் செய்வார்கள்.

இன்னும் சிலரோ, 'நானெல்லாம் சின்ன வயசுல ரெண்டே பேண்ட், சர்ட்தான் வெச்சிருந்தேன் தெரியுமா? உனக்கு இப்போ வித விதமா டிரஸ் கேட்குதா?' என்பார்கள். காரணம், தாம் சிறுவயதில் அனுபவிக்காததை தமது பிள்ளைகளே ஆனாலும் அவர்கள் அனுபவிப்பதா என்கிற பொறாமையுணர்வு அடிமனத்தில் இருப்பதுதான்.

ஒரு குடும்பத்தில் இரண்டாவது குழந்தை பிறந்தவுடன், முதல் குழந்தைக்குப் பொறாமை வந்து விடும். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி மாத்திரமல்ல; வீட்டுக்கு வருகிறவர்களே, என்னை கவனிக்கவே மாட்டேன் என்கிறார்களே என்கிற எண்ணம் வளர்க்கிற பொறாமை அது.

ஆனால் நிஜத்தில் அந்தக் குழந்தை நினைப்பது போலவா பெரியவர்கள் நடந்து கொள்கிறார்கள்? இல்லை. முதல் குழந்தை பிறந்தபோது எல்லோரும் அதைத்தான் கொஞ்சினார்கள். முதல் குழந்தையைப் போல் தான் இரண்டாவது குழந்தையையும் கொஞ்சுகிறார்கள். இதை அந்த முதல் குழந்தைக்குப் புரிய வைப்பது தான் முக்கியம்.

'பார்த்தியா, பாப்பாவால தானாவே சாப்பிட முடியலை. நீயும் பாப்பா மாதிரி இருந்தபோது உனக்கும் இப்படித்தான் ஊட்டி விட்டோம். இப்ப நீ வளர்ந்துட்டே. அதனால சமர்த்தா சாப்பிடற. பாப்பாவும் உன்னை மாதிரி வளர்ந்திட்டா சாப்பிடும். எங்கே, பாப்பாவுக்கு நீயே ஊட்டி விடு பார்க்கலாம்!' என்று அந்த முதல் குழந்தையையும் பாப்பாவின் மேல் திசை திருப்பி விடுங்கள்! அப்போது அதற்குப் பாப்பாவின்மேல் பொறாமை ஏற்படாது. நிஜத்தை அலசிப் பார்க்கிற மனப் பக்குவம் வந்து விட்டால்; பெரியவர்களுக்கும் பொறாமை வரவே வராது.

படம்: பாலாஜி பிரபு

குஜ்ரால் இந்தியா

('எடின்பார்க்' காமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, நீண்ட விமானப் பயணம் முடித்து, களைப்புடன், வீட்டுக்கு வருகிறார் பிரதமர் குஜ்ரால்)

ஷீலா குஜ்ரால் : வாங்க, வாங்க! எத்தனை நாளாச்சு உங்களைப் பார்த்து? போகும்போது உங்க தாடில நாலு கறுப்பு முடி இருந்தது. இப்ப அதுவும் வெள்ளை ஆயிடுச்சி. ப்ச். விடுங்க. 'சாமானியன் உயர்கிறான்'னு போன வாரம் ஒரு கவிதை எழுதியிருக்கிறேன். பாக்கறீங்களா?

குஜ்ரால் : கவிதை... ஓ, ஸாரி. நீ எழுதுவே இல்லை? கொண்டா, கொண்டா. முதல்ல அதைப் படிச்சிட்டு, கோட்டைக் கழட்டறேன்.

(டெலிபோன் அடிக்கிறது. முலயம்சிங் லைனில் இருப்பதாக உதவியாளர் சொல்கிறார்)

குஜ்ரால் : ஹலோ முலயம், ஹவ் ஆர் யூ?. எடின்பார்க் மாநாட்டில் எல்லாரும் நம்மைத்தான் புகழ்ந்து தள்ளினாங்க. எல்லாத்துக்கும் காரணம் நம்ம கூட்டணி ஜனநாயகம்தான்னு எடுத்துச் சொன்னேன். ஹி... ஹி... கூட்டணி இன்னும் இருக்கில்லே?

முலயம் *(எரிச்சலுடன்)* **:** போதும் நிறுத்துங்க. கூரை ஏறி கோழி பிடிக்க முடியலை... பெரிசா பேசறீங்க. உ.பில ஜனாதிபதி ஆட்சி கொண்டார முடியலை...

குஜ்ரால் : நான் என்னங்க பண்றது? அவரு ரிஜெக்ட் பண்ணி திருப்பி அனுப்பிச்சிட்டாரே!

முலயம் : அவரு ரிட்டன் பண்ணா நீங்க ரீ-ரிட்டன் பண்ண வேண்டியதுதானே? இப்ப பாருங்க. என் கட்சியே ஆட்டம் கண்டுடுச்சி. நானும் கவுந்துட்டா பிற்பட்டவங்களுக்கு அப்புறம் யார்தான் பாதுகாப்பு?

குஜ்ரால் : என்னது, நீங்களும் கவிழ்றதா? உங்களையும் கல்யாண்சிங் விலைக்கு வாங்கப்போறாரா?

முலயம் : அசிங்கமா பேசாதீங்க. என்ன இருந்தாலும் நீங்க கல்யாண்சிங் மறுபடி ஆள அனுமதிச்சது தப்பு.

குஜ்ரால் : நான் என்ன அனுமதிக்கறது. நீங்க எல்லாரும் சேர்ந்துதானே முடிவு பண்ணீங்க?

முலயம் : நான் வேண்டாம்னுதானே சொன்னேன். நீங்க கேக்கலை... இப்ப என்னாச்சு? மதச்சார்பற்ற கட்சிகள் உ.பில பலவீனமாயிடுச்சி. கேசரியும் சுர்ஜித்தும் உங்கமேல 'நறநற'ன்னு இருக்காங்க. சீக்கிரம் கவுந்துருவீங்க பாருங்க.

குஜ்ரால் : என்னை ஒண்ணும் மிரட்ட வேணாம். அவங்களை நான் சமாளிச்சிப்பேன். நீங்க தேறுகிற வழியைப் பாருங்க.

(கோபமாக போனை வைத்துவிட்டு கோட்டைக் கழற்றத் தொடங்கும் போது மறுபடி போன் அடிக்கிறது. எதிர் முனையில் கேசரி)

குஜ்ரால் : அடடே பி.எம் ஸாப்... சே. கேசரி சாப், சௌக்கியமா? நல்ல நேரத்துக்கு போன் பண்ணீங்க. உங்களுக்கு விருந்து ரெடியாயிட்டே இருக்கு. எப்ப வரீங்க? கார் அனுப்பவா?

கேசரி : சும்மா இருய்யா. இப்படி கவுத்துட்டு விருந்தாமில்ல, விருந்து! ஏற்கெனவே உ.பில காங்கிரஸ் ஸ்ட்ரெச்சர்ல இருந்தது. இப்ப ஏகப்பட்ட பேர் கட்சி மாறிட்டதுல நானும் என் டிரைவரும் தான் அநேகமா மிச்சம் இருக்கோம். இப்ப என்னை எல்லாரும் கேள்வி கேக்க ஆரம்பிச்சிருவாங்களேய்யா. உன்னை...

குஜ்ரால் *(சற்று வழிந்து)* **:** ஹி.. ஹி.. ஜனாதிபதி கிட்ட உங்களுக்கு இல்லாத செல்வாக்கா? இளின்டனே கூட அப்பப்ப உங்ககிட்ட சஜஷன் கேட்டுக்கறதா கேள்விப்பட்டேன்? ஆனா, இந்த முறை எப்படியோ கோட்டை விட்டுட்டீங்க. பரவாயில்லை. நெக்ஸ்ட் தபா பார்த்துக்கலாம்.



கேசரி : சில்லறை வியாபாரிங்க மாதிரி, மாநில கட்சிக்காரங்களைக் கூட்டி வெச்சுப் பேச றீங்க. நான் ஒருத்தன் 140 பேரை வெச்சிட்டு இருக் கேன். என் கருத்துக்களை மதிக்கத் தெரியலை உங்களுக்கு. நான் நினைச்சேன்னா...

குஜ்ரால் *(இடைமறித்து)* : சேச்சே! என்ன இப்படி சொல்றீங்க? எடின்பரோ மாநாட்டுலேயே கேசரி துணைன்னு சொல்லிட்டுத்தான் பேச ஆரம்பிச்சேன் தெரியுமா? உங்க வீட்டுக்கு என்னை மாதிரி 109 முறை வந்தவங்க வேற யாரா வது உண்டா? உங்க மச்சினி, மச்சானுங்க கூட வந்திருக்க மாட்டாங்க. 17 தடவை பிரேக் ஃபாஸ்ட், 28 முறை லஞ்ச், 47 முறை டின்னர் உங்களோட சாப்பிட்டிருக்கேன். ஒரு தடவை பரோட்டாவுக்கு கொடமொளகா கூட்டு சைட்-டிஷ்ஷா தந்தீங்களே, சூப்பர்!

கேசரி : இருக் கட்டும், இருக் கட்டும். குஜராத்துல பார்த்தீங்களா? வகே லாவைத் தூக்கிட்டேன். ஏன்

வருகிறார்!

தெரியுமா? உங்களுக்கு ஒரு பாடமா இருக்கட்டும்னுதான்!

குஜ்ராஸ் : பாடம் படிக்கிற வயசுங்களா இது...? *(மனசுக்குள்)* ம், நேரம்!

கேசரி : என்னது? காதுல விழல!

குஜ்ரால் : ஒண்ணுமில்லை. உங்க பெருந் தன்மை புல்லரிக்க வைக்குதுன்னு சொன்னேன். வெச்சிறவா?

(ஆஹா, சமாளிச்சுட்டேன் என்று உற்சாகமாக விரலில் அடித்தபடி மீண்டும் கோட்டைக் சுழற்றத் தொடங்குகிறார். மறுபடி போன் அடிக்கிறது.)

குஜ்ரால் : நமஸ்தே. யாரது?

மறுமுனை : இந்த நாட்டின் கோடிக்கணக் கான விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரம் சது ரானந்த் மிஸ்ரா பேசறேன்.

குஜ்ரால் : அட, காம்ரேட், நீங்களா! சௌக் கியமா? உங்க தோழர் இந்தர்ஜித் குப்தா சௌக் கியமா?

மிஸ்ரா : முதல்ல என் விஷயத்துக்கு வாங்க. உங்க புத்தியைக் காமிச்சுட்டீங்க இல்லை? மேல் தட்டு புத்தி! அந்த முதலாளிங்களோட கைக்கூலி சிதம்பரம் போட்டுக் குடுத்ததை நம்பிட்டீங்க இல்லை! விவசாயத்தைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? நாத்து நட்டிருக்கீங்களா? களை எடுத் திருக்கீங்களா? கொஞ்சி விளையாடும் வஞ்சிப் பெண்களுக்கு...

குஜ்ரால் : ஸ்டாப், ஸ்டாப். போற போக்குல இந்த வேலையெல்லாம்தான் நான் செய்ய வேண்டியிருக்கும்.

மிஸ்ரா : நிதி அமைச்சகம் விவசாய அமைச்ச கத்தைக் குறை சொல்லவே கூடாதுன்னு ஒரு



ஆர்டினன்ஸ பாஸ் பண்ணுங்க. இல்லாட்டி நான் ராஜினாமா பண்ணிடுவேன்.

குஜ்ரால் : நீங்க ஏற்கெனவே ராஜினாமா பண்ணிட்டதா ஞாபகம்.

மிஸ்ரா : ஏன் படுத்தறீங்க? நான் லெட்டர் குடுத்தது உண்மைதான். அதை நீங்க கோட் பாக் கெட்ல வைக்கறப்போ, கீழ விழுந்துரிச்சி. நைசா நானே திருப்பி எடுத்துக்கிட்டேனே!

குஜ்ரால் : ஐயோ, அப்ப நான் ஜனாதிபதிக்கு அனுப்பியது...?

மிஸ்ரா : சலவைக் கணக்கு பேப்பரா இருக்கப் போவுது. சரியா பாருங்க.

(லைன் கட் ஆகிறது.)

குஜ்ரால் *(கவலையுடன் மனைவியைத் தேடி உள்ளே போனபடி)* : ஷீலா, ஷீலா! அந்தக் கவிதை யைக் கொண்டா! அடுத்த கழுத்தறுப்பு வர்றதுக் குள்ள படிச்சிடறேன்.

குஜ்ராலின் உதவியாளர் *(ஓடி வந்தபடி)* : சார், மறந்துட்டீங்களா? கி.பி. 41ம் நூற்றாண்டில் உலக மக்கள் தொகைங்கற தலைப்புல உகாண்டாவில 600 நாடுகள் மாநாட்டுக்குக் கிளம்ப நேரமா யிடுச்சி.

குஜ்ரால் : அட, வரேம்பா! ஷீலா உன் கவிதை யைப் பேசாம உகாண்டாவுக்கு ஃபேக்ஸ் பண்ணி டறியா? நான் அங்க போயி பார்த்துக்கறேன்?

(கோட்டைக் கூடக் சுழற்றி மாற்றாமல் அப் படியே புறப்படுகிறார்.)

கற்பனை : **ப்ரியன்**

நீலா வேட்டை

மிச்சம் இருக்கிறது. நம்பிக்கை துரோகத்துக்கு நரகம் நிச்சயம். சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போவது வடிகட்டின அயோக்கியத்தனம். உன்னைத் தேடிப் பிடிக்க அலைந்த வகையில் மட்டும் பனிரெண்டாயிரம் செலவாகி இருக்கிறது. நீ தருவாயா? உங்கூட்டுக்காரன் தருவானா?

வேட்டியை மடித்துக் கட்டி, துவந்த யுத்தத்துக்குத் தயாரான ப்ரொட்யூசரை உட்காரச் சொல்லி, ஒரு தம்ளர் தண்ணீர் கொடுத்தான் அகிலாவின் புருஷன்.

"சார், யாரையும் ஏமாத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அகிலா நிச்சயம் உங்கள் படத்தை முடித்துக் கொடுப்பாள். ஆனால், அதோடு சரி. பிறகு நடிக்கிற உத்தேசம் இல்லை."

"எக்கேடும் கெட்டுப் போறாள். ஆனால், இதை முடிக்கச் சொல்லு. எழுவது லட்சம் கடன் வாங்கிப் போட்டிருக்கேன்யா. இது தொலைஞ்சால், ஒரு குடும்பமே கூண்டோடு எரிஞ்ச பாவம் சும்மா விடாது!"

கண்ணைத் துடைத்துக் கொண்டவரை அணைத்து, ஆறுதல் தந்தான் ஹரி.

கொஞ்சம் தெம்பு கண்டவராக எழுந்து, "சரி, நான் கொஞ்சம் தண்ணி சாப்பிட்டுப் படுக்கறேன். அலைச்சல் முடியலை!" என்று வெளியே போனவரைத் தொடர்ந்து ஹரியும் எழுந்தான்.

"சார், ஒரு நிமிஷம்!" ரகசியக் குரலில் இழுத்து நிறுத்தினாள் அகிலா.

சொல்லி வைத்தாற்போல், "பத்து நிமிஷத்துல வரேன்" என்று அவள் புருஷனும் வெளியே போனது, ஒத்திகை பார்க்கப்பட்ட விஷயமாக ஹரிக்குப் பட்டது. மன மூலையில் விபரீதம் ஒலித்தது.

அக்பர் ஆணையிட்டார். அந்தக் குன்றை ஆட்கள் சூழ்ந்து கொண்டார்கள். நான்பட்ட உழைப்பில், கழுத்து வலிக்கும் உயரக் கற்சுவர்களும் தூண்களும் அகலத் தாழ்வாரங்களும் ஆடல் மேடைகளும் மூலைக்கொரு படுக்கை அறையுமாகப் பார்வையில்பட்ட பதேபூர் சிக்ரி. பிராகாரக் குறுகல் சந்துகளில் கலகலக்கும் வளையல் கடைகள். சல்லாத் துணிகளின் மறைப்பில், ரகசியக் குரலில் கெட்ட வியாபாரம். சைக்கிள் மணி அடித்து, பானிபூரி. அப்புறம் உருண்டை மிதக்கும் கார மோர். அதைக் குடித்துத்தான் வந்தது வினை என்று அகிலாவின் புருஷன் சொன்னான்.

நட்சத்திர ஓட்டல் அறையில் கலைந்து படுத்து இருந்தாள் அகிலா. பக்கத்தில் அவள் கரம் பற்றிய கணவான். முன் வழுக்கையும் வைரக்கல் மோதிரமுமாக மோதும் துபாய் செழுமை. திருநீர்மலையில் கண்ணாலம் கட்டி, காஷ்மீருக்கு ஹனிமூன் போகிறவழியில் தில்லியில் இறங்கி, ஒரு நாள் நல்லெண்ண விஜயமாக அக்பரின் கோட்டையைப் பார்க்கப் போயிருக்கிறார்கள்.

"வேணும்னு கேட்டான். குடிச்சதும்தான் தெரிஞ்சது, அது அபின் கலந்த மோர். மயக்கமும் வாந்தியுமா துவண்டு போயிட்டாள்."

கவலையைக் கண்ணில் காட்டி, கதை சொல்லும் கணவன். அபின் மோர் குடித்த அகிலா. கல்யாண விஷயத்தை மறைத்து விட்ட பாவத்துக்கு இதையாவது அவள் ஒரு பத்திரிகையாளர் கூட்டம் கூட்டித் தெரிவிக்கலாம்.

போகட்டும். மறுபடி அவள் எப்போது சென்னை வரப் போகிறாள்? ஒருவார வேலை

பா. ராகவன்

"சொல்லு" என்றான் ஹரி.

படுத்து இருந்தவள், சற்று எழுந்து உட்கார முயன்று, முடியாமல் பக்க வாட்டில் சரிந்து, வேதனையில் முகம் சுளித்து, பின் பேச ஆரம்பித்தான்.

"தப்பா எடுத்துக்காதீங்க சார். நான் கட்டாயம் வந்து ஆகணுமா?"

அவன் அதிர்ந்



தான். "நான் பேசலை. நீ ப்ரொட்யூசரிடம் சொல்லு."

"சார், ப்ளீஸ்.. எனக்கு விருப்பம் இல்லை சார். பிறந்ததுலேருந்து நான் சந்தோஷமே பார்க்கலை. வரம் குடுக்கற சாமி மாதிரி இவர் கிடைச்சிருக்கார். நடிப்பு வேணாம்னு ஒரே கண்டிஷன்தான் சொன்னார். இந்தப் படம் முடிச்சுக் குடுக்கறதை மறுக்க மாட்டார். ஆனாலும் மனசளவில் நான் ரொம்ப விலகிட்டேன். போயிடணும்னு தோணுது. எத்தனை பார்த்துட்டேன்! உங்களுக்குத் தெரியாதது இல்லை. உடம்பைக் கூட இவருக்குப் புதுசாகக் கொடுக்கலை. ஆஃப்டரால், இந்த ஒரு சந்தோஷத்தை முழுசா குடுக்கலாம்னு நினைக்கறேன். என்னை விட்டுடுவீங்களா?"

அகிலா அழுது கொண்டு இருந்தாள். அவன் பேசவில்லை. அவரவர் நியாயங்களின் பின்னால் எத்தனை வலியும் வேதனையும் கொட்டிக்கிடக்கிறது? அகிலா இத்தனை வெளிப்படையாகப் பேசக் கூடும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. அவனைப் புரட்டிப் போட்டுவிட்ட அந்த ஒரு பிரயோகம். தேர்ந்த நடிகைதான். ஆனால் இந்த நிமிஷம் அவள் நடிக்கவில்லை என்று அவன் நினைத்தான். ஆனால்

4

எழுபது லட்சங்களைப் போட்டு விட்டுப் பரிதவித்துக் கொண்டிருக்கிற தயாரிப்பாளரை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது. மறுத்தாலும், இவளைக் கடத்திப்போய் நடிக்கவைப்பது பிரமாதமில்லைதான். ஆனால் நகங்களால் பிடுங்கி, மொட்டை மலர வைப்பதைக் காட்டிலும் காலில் போட்டுத் தேய்த்து விடலாம்.

நல்லது. நீ வர வேண்டாம்; நான் பார்த்துக் கொள்கிறேன் என்று ஹரி சொன்னான்.

"சார்...!"

"சந்தோஷமா இரு. துபாய்லே படம் ரிலீஸ் ஆனால், பார்த்துட்டு லெட்டர் போடு."

"என் போர்ஷனை நீக்கிடுவீங்களா?"

"மாட்டேன்."

"பின்?"

"ஏதோ பண்ணிக்கறேன். தட்'ஸ் மை ஹெட் ஏக். நீ கவலைப்பட வேண்டாம்."

அவள் ஒரு கணம் கண்மூடி அமைதியாக இருந்தாள். பின் சொன்னாள்:

"இன்னும் எட்டு மாசத்தில் எனக்குக் குழந்தை பிறக்கும். நிச்சயம் அதற்கு உங்கள் பெயர் வைப்பேன்."

வலிந்து புன்னகை பூத்து அவள் கையைப் பற்றிக் குலுக்கினான். கடவுளே, எத்தனை அழுத்தமும் தீர்மானமும் தாண்டவமாடும்



சொற்களைத் தெளிக்கிறாள்? இவள் கண்களில் மின்னும் பிரகாசத்தின் முன்னால் என் கண்கள் கூசுகின்றன. அகிலா என்று இல்லை; இனி குழந்தை பற்றி யார் பேசினாலும் என் விழிகள் மூடிக் கொள்ளப் போகின்றன. என் ஊனம், பூதாகாரமாக வியாபித்து என்னைச் சாப்பிடப் போகிறது. அதன் கூரிய நகங்கள் குத்திக் கிழிக்கிற வேகத்தில் நான் நார்நாராகப் போகிறேன்...

''வந்துருவாளாய்யா? வந்துருவாளாய்யா?'' என்று வழி முழுக்கக் கேட்டுக் கொண்டே வந்தார் ப்ரொட்யூசர். பூம் பூம் மாடு போலத் தலையாட்டிக் கொண்டே இருந்து விட்டு, விமானம் சென்னையில் தடம் பதித்ததும் "வராட்டாலும் கவலை வேணாம் சார். நான் முடிச்சுடறேன்" என்றான் ஹரி.

"முடிக்க முடியுமா?"

"முடியும். பாருங்கள்!" என்று சொல்லி விட்டு, வீட்டுக்குப் போனான்.

நாகர்கோவில் கருத்தரங்கம் முடிந்து, ரஞ்சனி வந்து இருந்தாள். அவனைப் பார்த்ததும், "எங்கே போயிட்டீங்க, எதுவும் சொல்லாமல்? ரெண்டு நாளா யாரைக்கேட்டாலும் தெரியலைன்னு பதில். தவிச்சுப் போயிட்டேன். தெரியுமா?"

"ஸாரி. யார்கிட்டவும் சொல்லிட்டுப் போக அவகாசமில்லை. டெல்லி போயிருந்தேன், ப்ரொட்யூசருடன். அகிலாவுக்குக் கல்யாணம் ஆயிடுச்சி. தெரியுமில்லையா?"

"ஆமாம், பேப்பரில் பார்த்தேன்."

"அதான். சொல்லாமல் காணாமப் போயிட்டாள். தேடிப் போயி, தெருத் தெருவா அலைஞ்சிட்டு, ஒருவழியா திரும்பி வந்தோம்."

"கிடைச்சாளா? என்ன திடீர் கல்யாணம்?"

அவனுக்கு அலுப்பாக இருந்தாலும் இந்த ரீதியில் பேச்சு தொடர்வது நல்லது என்று தோன்றியது. தொடர்ந்து இருந்து வரும் உறுத்தல்கள். மேலும் ஒரு வார காலப் புறக்கணிப்புக்கு ரஞ்சனியின் எதிர்க் கணை எப்படி இருக்கப் போகிறது என்று தெரியாது. தவிரவும் தன் மனதில் வேர்விடத் தொடங்கியிருக்கும் சந்தேகச் சிற்று. ஸ்டீபன். அவன் ஏன் நாகர்கோவில் போனான்? இதெல்லாம் கூட முக்கியமில்லை. ஒரு சொல்லில் அவளைக் கலைத்துவிட்டுப் போன பிறகு மறுபடி சந்திப்பது இப்போதுதான். இனி கேள்விகளும் விளக்கங்களும் சமாதானங்களுமாகக் கழியப் போகிறதா வாழ்க்கை?

"குளிச்சிட்டு வரீங்களா, சாப்பிடலாம்?"

அவன் எழுந்து கொண்டான். அலுப்போடு குளியல். சலிப்போடு சாப்பாடு. மௌனத் திரையுடன் மத்தியானத் தூக்கம். கண் விழித்த போது, காப்பியுடன் வந்தாள் ரஞ்சனி.

அருகில் அமர்ந்து, ''ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

"ஒன்னுமில்லை."

''அகிலா போயிட்டாளேன்னு கவலையா?''

''அதெல்லாமில்லை.''

''பின்னே?''

"நத்திங். விடு. உன் டூர் எப்படி இருந்தது?"

''ஃபைன். கருத்தரங்கத்தை விட ஊர் சுத்தினது நல்ல அனுபவம். ராமவர்மபுரம் போய் சுந்தரராமசாமியைப் பார்த்துட்டு வந்தேன். நைஸ் மேன்.''

கருத்தரங்கச் செய்திகள். கன்னியாகுமரி கினைமேட்., திற்பரப்பு அருவியில் மோதிரம் நழுவியது. கடுகெண்ணெய் வாசமுடன் மூச்சைப் பிடித்துக் கொண்டு ரசம் சாதம் விழுங்கியது. ரஞ்சனி வரிசையாக எல்லாம் சொன்னாள். ஆனால் திட்டம் மாறி, ஸ்டீபன் தன்னுடன் வந்தது பற்றி மட்டும் ஏன் வாய் திறக்கவில்லை?

மறைக்கிறாளா? மறைக்க வேண்டிய அவசியம் என்ன? அல்லது தற்செயலாக விடுபட்டுப் போனதா? ஸ்டீபன். தோழமையின் எல்லைகள் பற்றி முதல்முதலாகச் சந்தேகம் தோன்றுகிறது, இவன் விஷயத்தில். இன்று நேற்றுப் பழக்கம் இல்லை. எத்தனை வருஷங்கள்! சொல்லி இருப்பானா? வெறும் ஆறுதல் வேண்டி? அதற்கு மேல்? 'அழாதே ரஞ்சனி, ப்ளீஸ்! நான் இருக்கேன் இல்லை?'- தோளில் சாய்த்து ஆறுதல் சொல்லும் ஸ்டீபனின் உருவம் மனத்தில் விஸ்வரூபமெடுக்க, சட்டென்று தலையைச் சிலுப்பிக் கொண்டான் ஹரி. கடவுளே, என் கற்பனை ஏன் எல்லைகளைக் கடந்து எகிறிப் பாய்கிறது? இது உண்மையாக அல்லாத பட்சத்தில் ரஞ்சனிக்குத் தெரிந்தால் அவளுக்குள் எத்தனை சின்னவனாகி விடுவேன்?

''நீங்க என்ன அரசியல்வாதியா... எதுக்காக முன் ஜாமீன் கேட்கறீங்க?''

''ஆசிரமம் ஒன்னு தொடங்கலாம்னு இருக்கேன்!''

– அம்பை தேவா





''அதுவா! தீபாவளி இனாமுக்காக தலை சொரிஞ்சு சொரிஞ்சு ஒரு பக்கத் தலையே வழுக்கையா போயிடிச்சு!''

– சீர்காழி வி. ரேவதி

"ஹரி, என்ன ஆச்சு உங்களுக்கு? ஆர் யு நாட் ஃபீலிங் வெல்?"

தோளை உலுக்கிக் கலைக்கிற ரஞ்சனி.

"ம்? நத்திங். ஒரு வாரமா நான் வீட்டுக்கே வரலை. ஸாரி."

"ஸோ, வாட்? உங்கள் ஜோலி எனக்குப் புதுசு இல்லையே?"

புன்னகையில் தோரணம் கட்டும் ரஞ்சனி.

"கமான். லிவ் மி எ கிஸ். எவ்ளோ நாள் ஆயிடுச்சு?"

'அதை'ப் பற்றி ஏன் கேட்கமாட்டேன் என்கிறாய்? அவன் உன்னுடன் வந்தது பற்றி ஏன் சொல்லமாட்டேன் ஏன்கிறாய்? உனக்கு இவை சாதாரணமா? உன் கண்ணுக்குள் எதை மறைக்கிறாய்? உடை, உடைத்து விடு.

அவன், உள்ளுக்குள் அலறிக் குரல் கொடுத்தான். வெளியே சின்னப் புன்னகை காட்டி, விரைந்து எழுந்தான். ஸ்டீபனைப் பார்த்துவிட வேண்டும்.

அவசரமாக வெளியே போவதாகச் சொல்லிவிட்டு, காரை எடுத்து சாலைகளைக் கடந்து, ஸ்டீபன் வீட்டைத் தொட்டான்.

"வா ஹரி. எத்தனை நாளாச்சு, நீ வந்து?"

''இந்தப் பக்கம் ஒரு வேலையாகப் போறேன். சட்டென்று உன் ஞாபகம் வந்ததால் வண்டி நின்று விட்டது."

"என்னைப் பார்க்கணும்னேகூட வரலாம். இல்லியா?"

தெரிந்து, எதிர்பார்த்துத்தான் கேட்கிறானா? மறுபடி ஓலமிடத் தொடங்கிய மனத்தை அடக்கி, உள்ளே போனான் ஹரி.

"ஹவ் வாஸ் யுவர் ட்ரிப்?"

– சட்டென்று விஷயத்தைப் பிடித்தான்.

"ஓ. ஃபைன். திடீர்னு அங்கே ஒரு வேலை. தவிர்க்க முடியாத இடத்துலேருந்து அழைப்பு. வேறென்ன, கரை வேஷ்டி ஆசாமி ஒருத்தர் ஹோட்டல் கட்டறார். அதுக்காகக் கூப்பிட்டு அனுப்பினார். முன்னாடியே தெரிஞ்சிருந்தா ரஞ்சனியோடவே போயிருப்பேன்."

இவன் ரஞ்சனியுடன் போக வில்லையா?

''அதனாலென்ன? அங்கே சந்திச்சிருக்கலாமில்லையா?"

"ஓயெஸ். போன் பண்ணி ஆளைப் பிடிக்கப் பார்த்தால், திற்பரப்பு ஃபால்ஸுக்குப் போயிருக்கிறதாகச் சொன்னார்கள். சரின்னுட்டு, நான் அங்க போறதுக்குள்ள அவ ட்ரூப் அங்கேயிருந்து கிளம்பியாச்சு. இப்படியே நாலு தடவை ட்ரை பண்ணி, பிரயோஜனமில்லாமல் போச்சு. நான் அங்க வந்தும் சந்திக்க முடியாததைச் சொன்னால், ரஞ்சனி திட்டப் போறாள்."

ஹரிக்கு அவமானமாக இருந்தது. எத்தனை கேவலமாக யோசித்திருக்கிறேன்! மனிதனின் உள்முகங்களைக் கவித்துவமாகப் படம் பிடிக்கிற டைரக்டர். புடலங்காய். என் குறையை மறைக்க எத்தனை சுலபமாக அடுத்தவர் மேல் பழி தேடி நாயாய் அலைகிறேன்? டிபிகல் ஹிப்பாக்ரட்.

"ஒரு நிமிஷம் இரு ஹரி. காப்பி கொண்டு வரேன்."

ஸ்டீபன் எழுந்து போனான். அவன் பொழுது போகாமல் அறையை மேய ஆரம்பித்தான்.

கீழே கிடக்கிற கட்டில். மேலே சுழலும் உஷா. அலமாரியில் அடைந்து கிடக்கிற லா.ச.ரா., ஜானகிராமன், ஹெமிங்வே, ருஷ்டி. சன்னலோர மேசையில் சுருள் சுருளாக ப்ளூ ப்ரிண்ட்கள். கண்ணாடிக் கோப்பையில் ஸ்கெட்ச் பேனாக்கள். பரவிய தாள்களின் மேல் சிதறிய புகையிலைத் தூள். குப்பைக் கூடையில் கசக்கிப் போட்ட ஹன்ஸ் பாக்கெட்டுகள். சட்டென்று தட்டுப்பட்ட டைரியிலிருந்து மூக்கை நீட்டும் போட்டோ. நின்று சிரிக்கிற ஸ்டீபன். அவன்மேல் சரிந்திருந்த ஒரு சேலைப் பூங்கா. கால் தடுக்கி விழுகிற கணத்தை, உறைய வைத்திருந்த வித்தகம் ஒரு சினிமாக்காரனுக்கு சிலிர்ப்பூட்டக் கூடியது.

ஆனால் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பெண்ணின் முகம் முற்றிலும் பின்புறம் திரும்பியிருந்தாலும் அவனுக்கு மிகவும் தெரிந்த உருவம் அது. மேலும் ஒரு பிறந்த நாளுக்கு அவன் வாங்கித் தந்த சேலை அது. ரஞ்சனியுடையது.

கூடாது, கூடாது என்று ஓலமிட்ட மனத்தை யார் அடக்குவது? அவன், மிகவும் பதற்றத்துடன் அதை மறுபடி டைரியில் செருகி, ஒரு சூறாவளிபோல் உள்ளுணர்வால் திரும்பிப் பார்த்தான்.

ஸ்டீபன் நின்று கொண்டிருந்தான். கையில் ஆவி பறக்கும் காப்பி. முகத்தில் கிருஷ்ண பரமாத்மா மாதிரி ஒரு மந்தகாச முறுவல்.

பார்த்துவிட்டானா?

(தொடரும்)



மணி KVB மாலா

மாதாந்திர டெபாசிட் திட்டம்

KVB மணிமாலா – இதில் ஒவ்வொரு மாதமும் நீங்கள் டெபாசிட் செய்யும் சிறு தொகையானது, ஒரு சுமையாகவே தெரியாது. ஆனால் அது வளர்ந்து வளர்ந்து நாங்கள் வழங்கும் வட்டியுடன் சேர்ந்து மிகப் பெரும் தொகையாகப் பின்னர் உங்களுக்குக் கிடைக்கும்.

KVB மணிமாலா. மிகச் சிறிய விஷயம் என்றாலும், உங்கள் வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

Anugrah 2477/97

KVB

Since 1916

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.


கரூர் - 639 002

A.D. நவநீதன்
சேர்மன்

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி

கதை — 1

பிந்து - 1



பிந்து, மரத்தடியில் போட்டிருந்த கள்ளிப் பெட்டியின் மேல் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

அப்பா, காய்கறிகளைத் தண்ணீரில் கழுவிக் களைந்து, தட்டுகளில் போட்டுக் கொண்டிருந்தார். அருகே அம்மா. கீரைகளைக் கட்டுக் கட்டாகக் கட்டிக் கொண்டிருந்தாள். அம்மா கேட்டாள்.

''கத்தரி, வெறும் சொத்தையா இருக்கே. எறிஞ்சுடலாமா?''

"மூடிக்கிட்டு இரு. உன் அப்பன் கொடுத்த சீதனம் இல்லை" என்றார் அப்பா.

பிந்துவுக்கு எரிச்சலாக இருந்தது. இந்த அப்பா எப்பவுமே இப்படித்தான். அப்பா சிரித்தே அவள் பார்த்ததில்லையே.

அம்மா வேலையை முடித்துக் கிளம்பினாள்.

"வரியாடி?"

"நீ போ... அவ, படிக்கிறவளை என்னத்துக்கு எழுப்பறே?"

வியாபாரம் தொடங்கிற்று. எடை போடுவதும், பேரம் பேசுவதுமாக, இருந்தார் அப்பா.

"நல்ல கத்தரிக்காயா?" என்றாள் ஆடிட்டர் சம்ஸாரம். ஏமாறுவதற்கு என்றே ஜனித்த பிறப்பு, அந்த அம்மாள். ஸ்பஷ்டமாக முகத்தில் எழுதி இருந்தது, களை.

''பிஞ்சு. காம்பிலே நீர் கசியுது பாருங்க மாமி. எவ்வளவு போடட்டும்?'' அப்பா மாமியைப் பேச விடாமல், காயைத் தொட விடாமலும், அரைக் கிலோவைப் போட்டார்.

அந்த மாமி போய்ச் சேர்ந்தாள். போகும் வரைக்கும் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தாள், பிந்து. மனம் பாடத்தில் லயிக்கவில்லை. பாவை, வெண்டை, அவரை என்று எத்தனை இருக்கிறது. இந்த ஜனங்கள் ஏன் இப்படி ஏமாறுகிறது?

தூரத்தில், தமிழ் மிஸ் வந்து கொண்டிருந்தாள். பிந்து எழுந்து நின்று கொண்டாள். மிஸ் இவளைப் பார்த்து, "படிக்கிறியாடி, படி, படி" என்றாள். "சரி மிஸ்" என்றாள் பிந்து.

தமிழ் மிஸ், தன் கண்ணாடியின் வழியாகக் காய்கறிகளை வலம் வந்தாள். அட கஷ்ட காலமே!

"கால் கத்தரி, கால் புடலை, தக்காளி, பச்சை மிளகாய்... போடுங்க..."

"மிஸ்... பாவைக்காய் நல்லா இருக்குங்களே..."

"படிக்கிறவளுக்கு இங்கே என்னடி கண்ணு? செருப்பாலே அடிப்பேன்."

"விடுங்க கடைக்காரரே... நீங்க போடுங்க..."

அழுகல் கத்தரிக்காயை வாங்கிப் போகும், தமிழ் மிஸ்ஸையே பார்த்துக் கொண்டு நின்றாள் பிந்து. அப்பா மேல் எரிச்சல் எரிச்சலாக இருந்தது.

விளையாட்டு பீரியட் மணி அடித்தது. பிந்து, ஆசிரியர்கள் அறைப் பக்கம் போய் எட்டிப் பார்த்தாள். தமிழ் மிஸ் நோட் திருத்திக் கொண்டிருந்தாள். நிழல் தெரிய, திரும்பிப் பார்த்தாள்.

"என்னடி பிந்து?"

"ஒன்றுமில்லை மிஸ்..."

தமிழ் மிஸ் கண்ணாடியை எடுத்துவிட்டு வெறும் கண்களால் இவளைப் பார்த்தாள்.

"சொல்லு."

பிந்து அழத் தொடங்கினாள். தேம்பித் தேம்பி அழுதாள். பதறிப் போய்க் கேட்டாள் மிஸ்.

"சொல்லுடி..."

"அப்பா உங்களுக்குப் போயி அழுகல் கத்தரிக்காயைக் கொடுத்துட்டாங்களே..."

மிஸ், பிந்துவை அணைத்துக் கொண்டாள். சற்று நேரம் பொறுத்துச் சொன்னாள்.

"வீட்டுக்குப் போனதும்தான் தெரிஞ்சது. நீ பாவைக்காய்னு சொன்னதும் புரிஞ்சது. பரவாயில்லை. இதுக்காக அழலாமோ? நீ சொத்தையாகாமே இருக்கியே அது போதும். இப்படியே இரு..."

பிந்துவுக்கு நிம்மதியாக இருந்தது.

பிரபஞ்சன்

நடக்குமென்பார் நடக்கும்!



மேஷம் :

(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த வாரம், மங்களகரமான காரியங்கள் குடும்பத்தில் நடக்கும் அல்லது வெளியூர்ப் பயணங்களால் உற்சாகம் பிறக்கும். கம்ப்யூட்டர், பொறியியல் துறையினருக்கும் எழுத்தாளர்களுக்கும் ஒரு புதிய பாதை தெரியும். பண நடமாட்டம் தாராளம். சிறு சிறு பிரச்னைகள் வரும்னாலும் அதையெல்லாம் ஊதித்தள்ளிட்டு சந்தோஷமா இருப்பீங்க. வார இறுதியில் பெண்கள், உடல் நலத்தில கவனமா இருக்கணும்.

ரிஷபம் :



(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

சிலருக்கு ஏற்படும் திடீர்த் திருப்பத்தினால், அவங்க புகழும் கௌரவமும் உச்சாணிக் கொம்புக்கே செல்லும் வாரம் இது. திருமணம், புது வீடு போன்ற சுப காரியங்களுக்கான பிள்ளையார் சுழி போடுவீங்க. அதனால விருந்தினர் கூட்டமும் அதிகரிக்கும். வெளி நாடுகளிலிருந்து நல்ல சேதி வரக்கூடும். வக்கீல்களாயிருந்தால் எல்லா கேஸுலயும் ஜெயம்தான். தவிர்க்க முடியாத செலவுங்க வரும்னாலும் பணப்புழக்கம் ஈடு செஞ்சிடும். வாகனங்களை ஓட்டிச் செல்லும் ஆண்களும் கால் அடுப்பு, மின்சாதனங்களைக் கையாளும் பெண்களும் கொஞ்சம் கவனமாக இருக்கணும்.



மிதுனம் :

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)

பிரச்னைகள் வரக்கூடிய வாரம் தான் என்றாலும் சாமர்த்தியமாச் சமாளிப்பீங்க. நண்பர்கள் உதவுவாங்க. ஷேர் வாங்க நினைச்சா ஜாக்கிரதை அவசியம். தொடர்ந்து பெய்யும் மழையால், விவசாயிகளுக்கு நஷ்டமில்லை; லாபமே. உத்தியோகஸ்தர்களுக்கு ரொடீன் வாரம்தான். விளையாட்டு வீரர்களுக்கு வெற்றி நிச்சயம். தொழிலதிபர்கள், தொழிலாளிங்ககிட்ட கவனமாக நடந்துக்கணும், இல்லைன்னா முரண்டு பிடிப்பாங்க. குடும்பத்தில் சுபகாரியங்களுக்கான அறிகுறிகள் தெரியுதுன்னாலும் பெற்றோரின் உடல் நலனில் கவனம் வையுங்க.

கடகம் :



(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

பொறுப்பான உயர் பதவிகளில் இருப்பவங்க எச்சரிக்கையா இருக்கணும். இல்லைன்னா யாரோ செஞ்ச தப்பெல்லாம் உங்கள் மீது விழுந்துடும். கலைஞர்களுக்கு சாதாரண பலன்தான். கொடுக்கல், வாங்கல், பங்கு மார்க்கெட் எதுவானாலும் கவனம், கவனம். பிரயாணமா? வேண்டவே வேண்டாம். புதியவர்களைச் சந்திக்க நேர்ந்தால் எச்சரிக்கையாப் பழகுங்க. நம்பினால் மோசம் போக வாய்ப்புண்டு. உயர் அதிகாரிகளால் உத்தியோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். தொழில் செய்வோருக்கு லாபமே. மனைவியின் உடல் நலத்தில் கவனம் காட்டுங்க. நீங்களும் நாக்கைக் கட்டுப்படுத்த முடியாமல் கண்டதையும் சாப்பிடாதீங்க, வயிற்றுக் கோளாறுக்கு வாய்ப்பு நிறைய!

சிம்மம் :



(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

எதிலும் நிதானமாகச் செயல்படணும். கிரகங்களின் சஞ்சாரம் அப்படி. யாரையும் சட்டென நம்பிவிடுகிற மனம் உங்களுக்குங்கறதால முன்னெச்சரிக்கை அவசியம். மிக முக்கியமான விஷயம். யாகாவாராயினும் நா காக்க! இல்லைன்னா பிரச்னைதான். எடுத்த காரியங்களும் நினைத்த படி நடக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைச்சாலும் சிலருக்கு வேண்டாத இடங்களுக்கு டிரான்ஸ்ஃபர் வரலாம். பங்கு மார்க்கெட் பக்கம் தலை வைச்சுக் கூடப்படுக்க வேண்டாம். ஆஞ்சநேயரை அவசியம் வழிபடுங்க.


கன்னி :



(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பார்களே, அது உங்களுக்குத்தான். புதிய முயற்சிகளில வெற்றி காண்பீங்க. குடும்பத்திலுள்ள பெரியவர்களால் நன்மை பெறுவீங்க. குடும்பமே மகிழ்ச்சியில் திளைக்

கும். வியாபாரிகள் கஸ்டமர்களிடம் சிரிச்ச முகத்தோடு பழகுவது அவசியம். கோபம் வரும் என்றாலும் அடக்கிக் கொள்வது உத்தமம். சிலருக்கு இடமாற்றம் அல்லது வீடு மாற்றம் நிகழும். வாரக் கடைசியில் பணத்தட்டுப்பாடு இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிரத்தையும், உடல் நலனில் அக்கறையும் காட்டுவது அவசியம்.



துலாம் :

(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)


சமுதாயப் பணி மாதிரி ஆக்கப் பணிகளில் உற்சாகத்தோடு செயல்பட்டுச் செல்வாக்குப் பெறுவீங்க. வெளிநாட்டிலிருந்து நல்ல சேதி வரும். கணவன் - மனைவி உறவு அமர்க்களமாய் இருக்கும். குடும்பத்தில் நல்ல காரியங்களுக்கான அறிகுறிகள் நிறைய. சகோதர - சகோதரிகளாலும் நன்மை வரும். கலைத் துறையினரும் எலக்ட்ரானிக் துறையில் உள்ளவர்களும் வளர்ச்சி காண்பாங்க. ஏற்றுமதி - இறக்குமதியிலும் லாபமே. ஷேர் மார்க்கெட் மற்றும் உடல் ஆரோக்கிய விஷயங்களில் மாத்திரம் எச்சரிக்கையா இருக்கணும்.



விருச்சிகம் :

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)


நீங்கள் சற்றும் எதிர்பார்க்காத வகையில நன்மைகள் தேடி வரும். புதிய அறிமுகங்களாலும் நன்மை வரும். வாரத் துவக்கத்தில் உணர்ச்சி வசப்படும்படியான சூழ்நிலை உருவாகும்கிறதால நிதானத்தைக் கடைப்பிடியுங்க. கொடுக்கல் - வாங்கலைத் தவிர்த்திடுங்க. குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் தலை தூக்கும். தொழிலதிபர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் பணிகளில் அதிக சிரத்தை காட்டுவதே நல்லது. வயிறு சம்பந்தமான தொல்லைகளுக்கு வாய்ப்புகள் அதிகம். மாணவர்கள் படிப்பில் அக்கறை காட்டணும். அரசியல்வாதிகள் மௌனம் காப்பது உத்தமம்.



தனுசு :

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

முதல் இரண்டு நாட்களைத் தவிர மற்ற நாட்களெல்லாம் யோகம் தான்; எடுத்த காரியம் யாவிலும் வெற்றிதான்! பிரயாணங்களும் நன்மையே தரும். நண்பர்கள் பந்துக்கள் என்று அனைவருமே உதவியா இருப்பாங்க. அரசியல்வாதிகளும் சிந்தனையாளர்களும் ஏற்றம் பெறும் வாரம். நிர்வாகப் பணியில் உள்ளவங்களுக்குப் பாராட்டு மழை நிச்சயம். வீடு, மனை வாங்கினாலும் பலன் உண்டு. பெற்றோர் உடல் நலனில் மாத்திரம் கொஞ்சம் அதிக அக்கறை காட்டணும்.



மகரம் :

(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

நல்ல ஆரம்பத்தோடு கூடிய வாரம் இது. எதிர்பார்ப்புகளில் பல நிறைவேறும். கலைத்துறையினர் முதல் வியாபாரிகள் வரை சகலருக்கும் வெற்றிதான். நல்லவங்க அறிமுகத்தால் வாழ்க்கை வளம் பெறும். உத்தியோகத்தில் உள்ளவங்களுக்கு அதிக பொறுப்புகள் வரும். ஆண்கள், வாகனம் ஓட்டும் போதும் பிறரிடம் பேசும் போதும் நிதானத்தைக் கடைப்பிடிக்கணும். பண விஷயத்திலும் கறாரா இருங்க. தேக நலனிலும் அக்கறை காட்டுங்க. துர்க்கை வழிபாடு நல்லது.




நா காக்கணும். நிதானமா இருக்கணும். அப்புறம் கொஞ்சம் டயம் சரியா இல்லாததால, காரியங்கள் நினைத்தபடி நடக்காது. சிம்ம ராசிக்காரரான ஜெயலலிதா இப்ப கொஞ்சம் கவனமா இருக்கணும்.

கும்பம் :

(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)


வெற்றிப் பாதையின் ஆரம்பம் தெரிகிற வாரம் இது. சினிமா, நாடகம், சங்கீதம், ஓவியத் துறையினருக்கு அதிர்ஷ்ட தேவதையின் அருள் பார்வை ஏராளம். கூடவே லக்ஷ்மி கடாட்சமும் உண்டு. கொடுக்கல் - வாங்கலில் எச்சரிக்கை தேவையென்னாலும் ரியல் எஸ்டேட், வீடு, நிலம் போன்றவற்றில் லாபம் வரும். பெண்களே, நீங்கள் இந்த வாரம் நகைங்களா வாங்கிப்போட்டு அழகு பார்ப்பீங்க. கூடவே, புது மாடல் டீவி, ஃப்ரிட்ஜ், கிரைண்டர் வாங்கற அதிர்ஷ்டமும் வரும். சிலர் அப்படியே கோயில் குளங்களுக்கு போய் வருவீங்க.



மீனம் :

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

தொட்டது துலங்கும் வெச்சது வளரும்பாங்களே, அது உங்களுக்குத் தான் போங்க! எந்தத் துறையில் இருந்தாலும் நன்மையே பெறுவீங்க. குடும்பமே குதூகலத்தில் துள்ளும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய மாறுதல் வர வாய்ப்புண்டு. சரிந்து வரும் ஷேர் மார்க்கெட்டில் கூட நீங்க ஓரளவு லாபமே பாப்பீங்கன்னா பார்த்துக்கங்களேன்!



12.11.97 முதல் 18.11.97 வரை



10

வீரப்பனும்



பொது மன்னிப்பு கொடு. அல்லது இருபத்தைந்து கோடி கொடு. இரண்டில் ஏதாவது ஒன்றைத் தந்து ஒன்பது பேரை மீட்டுப் போகலாம் என்று வீரப்பன் இம்முறை சொன்னான்.

இரண்டுமே சாத்தியமில்லை என்று மணிக்கணக்காகப் பேசிப் புரிய வைப் பதற்குள் நான் பட்டபாடு கொஞ்ச நஞ் சமல்ல. ஒரு வழியாக அவனது இருபத் தைந்து கோடி கோரிக்கையை ஐந்து கோடியாகக் குறைத்த பின்னர்தான் பிணைக் கைதிகளுள் யாரேனும் ஒரு வரையாவது மீட்டுப் போகிற உத்வேகம் வந்தது.

''அஞ்சு கோடி குடுப்பாங்க. அது பிரச்னை இல்லை. ஆனால் இவங்க நல்லா இருக்காங்கன்றதை அரசாங்கம் நம்பணுமில்லையா?''

''நீங்கதான் பாக்கறீங்களே, நல்லாத்தானே இருக்காங்க?''

''எங்க! தோ இவரு சாகக் கிடக்கிறாரே!'' என்று ராஜுவைச் சுட்டிக்காட்டினேன்.

''நான் போய், திரும்பி வர்றதுக்குள்ள இவர் செத்துப் போயிட்டால்?''

''செத்தா சாவட்டும்!'' அலட்சியமாக பதில் வந்தது அவனிடமிருந்து.

''இது அக்கிரமம். நீங்க ஒம்பது பேரை பத்திரமா திருப்பி அனுப்புவீங்கன்ற நம்பிக் கைல தான் அரசு அஞ்சுகோடி தர முன் வருவாங்க. இப்படி அலட்சியமா பேசினா எப்படி? ஒண்ணு சொல்றேன். இந்த ராஜுவை மட்டும் என் கூட அனுப்பிடுங்க'' என்றேன்.

வீரப்பன் யோசித்தான். ஆனால், சேத்துக்

குளி கோவிந்தன், "வேணாம், குடுக்காத! இவரு இப்படியே ஓம்பது முறை வந்து பேசிப்பேசி ஒவ்வொரு ஆளா கூட்டிட்டுப் போயிடுவாரு!" என்றான்.

இது ஏதடா புது ரோதனை என்று கலங்கி, "அப்படியெல்லாம் இல்லை. நீங்க இந்த ஒரு ஆளை அனுப்புங்க. நான் நல்ல பதிலோட திரும்பி வரேன்!" என்று கெஞ்சிக் கூத்தாடி, அவனை மயக்கி, மசியவைத்து ராஜுவை மட்டும் மீட்டுக் கொண்டு ஊர் திரும்பினேன்.

நாடும்!



முதல்வரைச் சந்தித்து விஷயத்தை விளக்கிவிட்டு, "சார்! அவன் அஞ்சு கோடி கேக்கறான். அதைக் குடுக்கறதோ, குடுக்காம இருக்கறதோ உங்க பிரச்னை. ஆனால், நான் பணத்தோட போக மாட்டேன். போனா 'எத்தனை கமிஷன்?'னு என்னைக் கேட்பாங்க. என்னை விட்டுடுங்க. இந்த ஒரு ஆளை மீட்டுட்டு வந்ததோட என் வேலை முடியுதுன்னு நினைக்கறேன்" என்றேன்.

மறுநாள் பத்திரிகையாளர் சந்திப்பிலும் இதையே தான் வலியுறுத்திச் சொன்னேன்.

பின்னால், வீரப்பன் அந்த எட்டு பேர் உயிருக்கு ஆகஸ்ட் 15 அன்று கெடு வைத்ததும் முதல்வர் சில சலுகைகளை மறுபடி அறிவித்து, நான் வேறு வழியின்றி மீண்டும் காட்டுக்குப் போய்ப் பேசியதையும், கர்நாடக முதல்வரின் ஓர் அறிக்கை வரிகள் ('வீரப்பன் அந்த 8 பேரைக் கொன்றால் கொன்றுவிட்டுப் போகட்டும்; அவர்கள் குடும்பத்தாருக்கு ஏதாவது நஷ்டஈடு கொடுத்தால் தீர்ந்தது விஷயம்!') எனக்கு உறுதுணையாக இருந்து அதை வைத்தே 'நீ ஏன் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ளக்



'நக்கீரன்' கோபால்

எல்.கே.ஜி. ஆசை

நாடக விமர்சனம்

டீ.வி. நியூஸ் வரதராஜன் முதல் காட்சியிலேயே நாலு வயதுக் குழந்தைக்குத் தந்தையாகத் தோன்றுகிறார்.

அந்தக் குழந்தைதான் நாடகத்தின் மையம். தன் குழந்தை என்ஜினியர் அல்லது டாக்டராக வேண்டுமென்ற கனவோடு (கூடவே 'ஸ்போர்ட்ஸ்மேன் கனவும்' இலவச இணைப்பு) காலை முதல் இரவு வரை ட்ரில் வாங்கும் பெற்றோர். அவர்களிடம் பணம் கறப்பதிலேயே குறியாக உள்ள பள்ளி நிர்வாகம். பொதிமாடாய்ப் புத்தகங்களைச் சுமக்க வேண்டிய கட்டாயம் (ஆட்டுக்கல்லை நகர்த்த அனைவரும் சிரமப்பட, ஸ்கூல் பையைச் சுமந்தபடி வரும் குழந்தை அந்தப் பையைக் கழற்றி வைத்துவிட்டு அனாயாசமாக அந்த ஆட்டுக்கல்லை நகர்த்தி வைப்பதாக ஒரு காட்சி!). இப்படி சிக்கி வதைபடும் இன்றைய பள்ளிக் குழந்தையின் நிலையைத்தான் நாடகம் விவரிக்கிறது.

வருங்காலக் கனவுகளை வளர்த்துக் கொண்டு மகனைக் கசக்கிப் பிழியும் மனைவியைப் பார்த்து ''இவன் ஒரு டெண்டுல்கரா இருக்கணும். விஜய் அமிர்தராஜா இருக்கணும். ராமானுஜமா இருக்கணும்னெல்லாம் ஆசைப்பட்டால் அவன் எப்போதான் நம்ம மகன் பிரகாசமாக இருக்கப் போறான்?'' என்று கதாநாயகன் கத்தும்போது பார்வையாளர்களான அப்பா–அம்மாக்கள் கொஞ்சம் சங்கடத்துடன் சுய அலசலில் ஈடுபடுகிறார்கள்.

கதை, வசனம் 'வேதம் புதிது' கண்ணன். கைதட்டல் எழுப்பும் வசனங்களில் மற்றொன்று– ''ஜெயில் கைதி கூட எப்ப தன் யூனிபார்மைக் கழட்டுவோம்னு துடிப்பான். அவனாவது தப்பு செஞ்சவன். ஆனா எப்ப தன் ஸ்கூல் யூனிபார்மைக் கழட்டுவோம்னு குழந்தை துடிக்குதே, அந்த அளவுக்கு அதை வறுத்தெடுக்கிறோம்.''

திருநெல்வேலி 'பாஷை' பேசுபவராக சீராக நடிக்கிறார் நித்யா.

நாடகம் முழுதும் வரும் நான்கு வயதுக்

கூடாது!' என்று வாதாடி அந்த எட்டுப் பேரையும் மீட்டு வந்தது பற்றியெல்லாம் இந்தக் கட்டுரைத் தொடரின் முதல் அத்தியாயத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

ஒன்பது உயிர்களை மீட்டிருக்கிறோம் என்கிற திருப்தியும் நிறைவும் இருந்தாலும் மறுபுறம் வலியும் வேதனையும் இல்லாமல் இல்லை. இந்தக் காரியத்தைச் செய்ததற்கு எத்தனை விதமான விமர்சனங்களைச் சந்திக்க வேண்டி இருந்தது!

'வீரப்பனுக்கு மணியார்டர் கொண்டு போகிற தபால்காரர் கோபால்' என்றார்கள்.

'இது ஒரு நாடகம்' என்றார்கள்.

நான் கேட்கிறேன். அரசும் கோபாலும் வீரப்பனும் வேண்டுமானால் நாடகம் ஆடலாம். காட்டு மிருகங்கள் கூடவா நாடகத்தில் பங்கு பெறும்? ஒரு தரம் போய் வந்தால்தான் அந்தச் சிரமம் புரியும்.

அதனால்தான் சொல்கிறேன்... வீரப்பனை நான் ஒன்றும் பங்களாவில் பூட்டி வைத்து பேட்டி காணவில்லை. 6000ச.கி.மீ. காடு என்பது எல்லோருக்கும் பொதுவான திறந்தவெளி. முடிந்தால் யார் வேண்டுமானாலும் போய் வரட்டுமே!

இந்த முறை அவன் பண்டிப்பூரில் ஆறு பேரைக் கடத்தியபோது நான் மீண்டும் விடாப்பிடியாகக் காட்டுக்குப் போக மறுத்த காரணம் இதுதான்!

'எத்தனை சிரமப்பட்டு அவனை மனிதனாக்கிவிட்டு வந்தோம். மறுபடி இப்படி ஆகிவிட்டானே!' என்கிற கோபம் தான் முக்கியக் காரணம்.

ஆனால் நான் போகாமல் அவனே அவர்களை விடுவித்து விட்டானே! அவனை மனிதனாக்குகிற முயற்சியில் எங்களுக்கு இறுதியில் வெற்றி கிடைத்து விட்டதாகத் தானே இதற்கு அர்த்தம்?

'பணம் விளையாடுகிறது', 'திட்டமிட்ட நாடகம்' என்றெல்லாம் சொன்னவர்கள் இப்போது என்ன சொல்வார்கள்?

அவனைக் கிட்ட இருந்து பார்த்தவன், ஆராய்ந்தவன் என்கிற முறையில் சில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

132 கொலைகளை வீரப்பன் செய்தான். எல்லாமே தான் அல்லது தன்னைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டபோது தற்காப்புக்காகவும் பழிவாங்கும் விதமாகவும் செய்யப்பட்ட கொலைகள்.

செய்த குற்றங்கள் எதையுமே அவன் மறைப்பதில்லை; பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறான்.

அவன் கேட்கிற பொது மன்னிப்பு சட்டப்படி சாத்தியமில்லை என்பது படித்தவர்களுக்குப் புரியும். படிக்காத பாமரனான அவனால் அந்த சட்டச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.


ஆனால், தன் தவறுகள் அவனுக்குப் புரிகின்றன. ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் திருந்தி வாழலாம் என்று எதிர்

குழந்தைக்கு எந்த வசனமும் இல்லாதது இடிக்கிறது. ஒரு எஃபெக்டுக்காக இரு வேறு இடங்களில் நடக்கும் காட்சிகளை மாறிமாறிக் காட்டும்போது தொய்வு ஏற்படுகிறது.

சிறுவனின் வீட்டுக்கு டாக்டர் வரும்போது இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முடியாமல் அமையும் தொடர்–சூழல்கள் நாடகத்தனமாக(!) இருக்கின்றன.

என்றாலும் ஒவ்வொரு வீடும் சந்திக்கும் பிரச்னையைத் தொட்டுக் காட்டுவதாலும், உலுக்கும்படியான திருப்புமுனையாலும் (தினசரி டென்ஷன் காரணமாக குழந்தையின் மூளை நரம்புகள் பாதிக்கப்படுகின்றன), உருக்கும் கிளைமாக்ஸாலும் யுனைடெட் விஷுவல்ஸ் குழுவினர் 'பாராட்டு பெறுகிறார்கள்.

– அருண் சரண்யா



பார்க்கிறான்.

அவனுடைய அந்த உணர்வுகளுக்கு அவன் எதிர்பார்க்கிற சரியான வரவேற்பு, தீர்வு கிடைக்காதபோது, அவனுக்குத் தெரிந்த முறையில் மீண்டும் மீண்டும் கடத்தலில் ஈடுபடுகிறான்.

சமீபகாலத்தில் கடத்தியவர்களைத் தானே விடுவிக்கவும் செய்திருக்கின்றான்.

நூற்றுக்கணக்கான போலீஸார் வருஷக் கணக்கில் அங்கே முகாமிட்டு உல்லாசமும் கேளிக்கையுமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள், வீரப்பன் வேட்டை என்ற பெயரில். இருமாநில அரசுகளும் இது வரை செலவழித்த கோடிகளைக் கணக்கிட்டால் தலை சுற்றும்! அத்தனையும் மக்கள் பணம்; வரிப்பணம். எதற்காக இப்படி விரயமாக வேண்டும்?

'பிரச்னை தீரவேண்டும்' என்பது எண்ண அளவில் இல்லாமல் செயலளவில் இருந்தாலொழிய இதற்கு விடிவு இல்லை! சமரசம் இல்லை என்கிற பட்சத்தில் அதிரடிப்படையினரை எச்சரித்து, முடுக்கி விட்டு, ஒரு கெடுவுக்குள் விஷயத்தை முடிக்கச் செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு. அப்போது தான் அந்த மலைவாழ் அப்பாவி கிராம வாசிகளுக்கு ஒரு விடிவு பிறக்கும்.

இறுதியாக ஒரு விஷயத்தைச் சொல்லி இக் கட்டுரைத் தொடரை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்பது பேரை நான் மீட்டுவந்தபோது பாராட்டியவர்கள் அநேகம்; குறை கூறி, கேலி பேசி அந்தச் செயலையே கொச்சைப்படுத்தியவர்களும் அநேகம்.

அப்படிக் கொச்சைப்படுத்தப்பட்டது கண்டு மன வேதனை அடைந்த என்னை, மீண்டும் நிமிர வைத்தவர் ஒருவர் உண்டு. அவருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

"கோபால், நீங்கள் செய்திருப்பது சாதாரண காரியமல்ல. ஒன்பது பேரை மட்டும் நீங்கள் காப்பாற்றவில்லை; லட்சக்கணக்கான தமிழர்களையும்தான்!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நீங்கள் காட்டுக்குள் நுழைந்த சமயம் நான் மைசூரில் ஷூட்டிங்கில் இருந்தேன். 'வீரப்பன் அவர்களைக் கொன்றுவிட்டால் பெரிய அபாயம். அவர்கள் அத்தனை பேரும் கர்நாடகாக்காரர்கள். ஆகவே இங்கே மைசூரிலுள்ள தமிழர்களை இவர்கள் கொன்று குவித்து விடுவார்கள்' என்று மக்கள் பயந்து, மிரண்டு கொண்டிருந்தார்கள்.

அவர்களின் அந்த பயத்தை அருகில் இருந்து பார்த்தவன் என்ற முறையில் சொல்கிறேன். நீங்கள் லட்சக்கணக்கான கர்நாடகா வாழ் தமிழர்களின் உயிரையும் ஒரு சேரக் காப்பாற்றியிருக்கிறீர்கள்!"

இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்!

இந்த ஒரு பாராட்டு போதும் எனக்கு!

(முற்றும்)

ஓம் விஷ்ணுவே நம: என்று சொல்கிற போது, 'வேதத்தில், கர்ம காண்டத்தில் சொல்லப்பட்ட விஷ்ணுவுக்கு நமஸ்காரம். அவனை நான் வணங்குகிறேன். அவன் பொருட்டே இந்த ஆத்மா...' என்று அர்த்தமாகிறது.

இதை பகவானே விளக்கிச் சொல்கிறான். எப்போது என்று கேட்டால், விதுரருடைய கிரஹத்துக்கு அவன் எழுந்தருளும்போது.

விதுரனுடைய கிரஹத்துக்குப் புறப்பட்டுப் போகிறான் பரமாத்மா! பீஷ்ம துரோணாதிகளெல்லாம் அவனுக்காகப் பூர்ண கும்பத்தை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். துரியோதனன்தான் ரொம்ப அதிகமான ஆவலுடன் காத்திருக்கிறான்.

எப்போதுமே உலக வழக்கம் இதுதான்: எல்லாவற்றையும் சுத்தம் செய்து

32

குறை

எடுத்து வைத்துக் கொண்டு காத்திருந்தால் எதிர்பார்த்த நபர் வர மாட்டார்! எதுவுமே இல்லாத ஒருவர் வீட்டிலே எதிர்பாராது வந்து நிற்பார் அதிதி! அந்த கிரஹத்தில் உள்ளவர்கள் திணறிப் போவார்கள்.

அப்படித்தான் பரமாத்மாவும், அர்ப்பணம் செய்வதற்கு எதுவுமே இல்லாத வீட்டிலே, விதுரர் வீட்டிலே-போய் நிற்கிறார்.

விதுரர் பாவம்! ஆசனத்தைப் போட்டுத் தடவி தடவிப் பார்க்கிறார். ஒரு வாழைப் பழத்தை உரித்து, பழத்தைக் கீழே போட்டு விட்டுத் தோலை பகவானிடம் கொடுக்கிறார்! அவனும் விதுரனுடைய பக்தியைப் பார்த்து அந்தத் தோலை ஆனந்தமாகச் சாப்பிடுகிறான். விதுரருக்கு இதைப் பார்த்த பிறகும் பகவான் தோலைச் சாப்பிடுகிறானே என்று தெரியவில்லை; சாப்பிடுகிறவருக்கும் அதன் சுவை வித்தியாசமாகத் தெரியவில்லை..!

ஆகையினாலே, வஸ்துவை பகவான் பார்ப்பதில்லை, பக்தியைத்தான் பார்க்கிறான் என்பது தெரிகிறது அல்லவா!

ஆயிரம் அண்டா சர்க்கரைப் பொங்கல் பண்ணி வைத்துக் கொண்டு, "இவ்வளவையும் நான்தான் பண்ணினேன்" என்கிறார் ஒருத்தர்.

அதைக் கேட்பவர் ஒத்து பாடுகிறார்:

''இவ்னோ நெய் குத்தி வேறெங்கே பண்ணுவார்கள்..? இங்கேதானே நடக்கிறது...''

போச்சு! இப்படிப் பேசினால் அந்த சர்க்கரைப் பொங்கலை



முக்கூ

பகவான் திரும்பிப் பார்ப்பானோ? நிச்சயம் பார்க்க மாட்டான்!

நாம் ஒன்றுமே செய்ய வேண்டாம். ஓர் அஞ்சலி சமர்ப்பித்தாலே போதும். அதை பகவான் ஏற்கிறான். வஸ்துவை அவன் பார்ப்பதில்லை; பக்தியைத்தான் பார்க்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

ல்லை



லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



விதுரர் கொடுத்தார் என்பதற்காக தோலையே சாப்பிட்டு சந்தோஷம் அடைந்தவன் அவன்!

விதுரரோடு அங்கே கௌரவர்கள் அவைக்குப் போகிறான் பரமாத்மா.

துரியோதனன் கேட்கிறான்:

''பீஷ்ம துரோணாதிகளெல்லாம் உனக்காகக் காத்திருக்கிறார்கள்... சக்ரவர்த்திகளெல்லாம் காத்துக் கொண்டிருக்கையில், எங்களையெல்லாம் தாண்டி, நீ சாமான்ய புத்தியைக் காட்டி, இப்படிப் போய் ஒரு சாமான்ய கிரஹத்திலே சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறாயே...!'' என்கிறான். எப்பேர்ப்பட்ட துஷ்டன் அவன்! என்ன அகங்காரமுடன் பேசுகிறான் பாருங்கள்!

அவனுக்குப் பகவான் சாவதானமாக, நிதானமாக பதில் சொல்கிறான்:

சுத்தம் பாகவதஸ்யான்னம்
சுத்தம் பாகீரதி ஜலம்
சுத்தம் விஷ்ணுபத த்யானம்
சுத்தம் ஏகாதசி வ்ரதம்

–அழகான சுலோகம்! பகவானே சொன்னது. அவன் எதையெதை சுத்தம் என்று சொன்னானோ அதையெல்லாம் நாம் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

துரியோதனனுக்கெதிரிலே சொன்ன விஷயம் அது. நாமெல்லாம் துரியோதனனைப் போல் அவ்வளவு தப்பு பண்ணவில்லையே... அது நமக்கே தெரியும். அதனால் பகவான் நமக்குக் கட்டாயம் அனுக்கிரஹம் பண்ணுவான்– அவன் சொற்களை நாம் பிடித்துக் கொள்வோமேயானால்...

சுவாமி தேசிகன் திருப்புட்குழி எம்பெருமான் விஜயராகவனைப் பார்த்து இதைத்தான் கேட்கிறார்: 'ஹே விஜயராகவா! நீ சரணாகத ரக்ஷணம் பண்ண வேண்டும் என்கிற தீர்க விரதம் உடையவன். உன்னாலே என்னை விடமுடியாது... 'விபீஷணன் என்ன... அந்த ராவணனே வந்தாலும் அபயம் அளிப்பேன்' என்று சொன்னவன் அல்லவா நீ...! நான் என்ன அந்த ராவணன் அளவுக்குத் தப்பு பண்ணியவனா...? ராவணனையே ரக்ஷிக்கிறேன் என்று சொன்ன உன்னால் என்னை விடமுடியுமா என்ன..?'' என்று கேட்கிறார் சுவாமி தேசிகன்.

அந்த மாதிரிதான் நாமும்... துரியோதனன் அளவுக்கு அக்கிரமங்கள் நிச்சயமாக நாம் பண்ணவில்லை. அதனால் பகவான் சொன்ன சுத்தம் பாகவதஸ்யான்னம் என்கிற சுலோகத்தின்படி நடந்தால் நமக்கு நிச்சயம் பலன் உண்டு.

'சுத்தம் பாகவதஸ்யான்னம்...' என்ன பொருள் இதற்கு? பாகவதோத்தமர்கள் உண்ட சேஷம் தூய்மையானது என்று பொருள். சேஷம் என்றால் எச்சில் பதார்த்தம் இடையாது!... ஒரு பாத்திரத்திலிருந்து அன்னத்தை எடுத்துப் பரிமாறிய பிறகு, பாத்திரத்தில் மிச்சமிருக்கிறதே... அதைத்தான் சேஷம் என்பது.

பாகவதோத்தமர்கள் உண்ட சேஷத்தை நாம் சாப்பிட்டால், எவ்வளவுதான் பாப புத்தி இருந்தாலும் அதை நீக்கிவிடும். பாவத்தைச் செய்யத் தூண்டுகிற கெட்ட எண்ணம் உள்ளே இருக்கிறது பாருங்கள். அந்தக் கெட்ட வாசனையைப் போக்கிவிடும், பாகவத சேஷம். இந்த அன்னத்துக்கு எவ்வளவோ சக்தி இருக்கிறது என்பதால் நாம் இதை விரும்பிச் சாப்பிட வேண்டும்.

குலசேகர ஆழ்வாருக்கு ஒரு ஆசை... என்ன ஆசை...?

'எம்பெருமான் ஈசன் எழில்வேங்கட
மலைமேல்
நம்பகமாய் நிற்கும் தவமுடையேன்
ஆவேனோ...?'

'அவன் எழில் மலையில், அவன் அந்த ரங்கத்தில், அவன் கோயிலில் ஒரு கம்பமாக நிற்பேனே...' என்கிறார்.

ஒரு கம்பமாக நிற்கும் ஜன்மா அவருக்குப் போதுமாம். 'படியாய்க் கிடந்து உனது பவள வாய் காண்பேனோ...' என்று சொன்னவர் தானே!

திருப்பதியிலே கர்ப கிரஹத்துக்கு முன்னால் ஒரு படி– குலசேகரன் படி என்றே அதற்குப் பெயர். 'அந்தப் படியாய் இருப்பேனே' என்கிறார் அவர்.

நாம் சிரமப்பட்டு 'கியூ'விலே நின்று கிட்டத்தில் போனால், பகவானை சேவிக்கப் போகிற சமயத்திலே 'ஜருகு ஜருகு' என்று வெளியே அனுப்புகிறார்கள். சேவிக்க விடுவதில்லை... பார்த்தார் ஆழ்வார்... படியாகவே கிடந்து உன் பவள வாய் காண்பேனே என்று முடிவுசெய்து விட்டார். அங்கே போய் அசேதனமாகப் படுத்துக் கொண்டு விட்டால் யார் ஜருகு ஜருகு என்று விரட்ட முடியும்! எல்லோரும் கதவைச் சாத்திக் கொண்டு போகட்டுமே... போன பிறகும் அவன் கதா பல்லவத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்...!

திருப்பதி போய் வந்தேன் என்று நாம் கண நேர தரிசனத்தைப் பெருமையாகச் சொல்கிறோம். அங்கேயே இருக்கும் கல் எத்தனை நேரம் பகவானை சேவிக்கிறது! பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறது! அதனால்தான் அந்

"இங்கே கடல் போல் திரண்டிருக்கும் கூட்டத்தைக் கண்டு என் மனம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது."

"தலைவரே அடக்கி வாசிங்க. அவ்வளவு பேரும் நம்ம அமைச்சர்கள்."

– ஜெ. கண்ணன்

தத் திருமலையில் ஏதேனும் ஒன்றாகப் பிறக்க ஆசைப்படுகிறார் ஆழ்வார். சுனையிலே மீனாகப் பிறந்தால் பாகவத ஸ்பரிசம் ஏற்படுமே... 'ஏதேனும் ஆவேனோ...? கம்பமாய்ப் பிறப்பேனோ...?'

ஏன் கம்பத்தைத் தேர்ந்தெடுத்தார்...?

கம்பத்திலே நரசிம்ஹன் இருக்கிறான். ஸ்தம்ப பிம்பன் என்றே அவனுக்கொரு பெயர். அதனால்தான் கிரஹங்களிலெல்லாம் பூர்வ காலத்திலே நிறைய கம்பங்கள் வைத்து வீடு கட்டினார்கள்.

இஞ்சிமேட்டு அழகிய சிங்கர், கம்பத்துப் பக்கம் கால் வைத்துப் படுக்க மாட்டார்! அதன் உள்ளே நரசிம்ஹன் இருக்கிறான் அல்லவா...!

கிரஹங்களில் நம்மை அறியாமலே கம்பத்தைச் சுற்றி வரும்போது பகவானைச் சுற்றி வலம் வருகிற பலன் ஏற்படுகிறது... இதை உத்தேசித்துத்தான் நிறைய கம்பங்கள் வைப்பார்கள்.

கோயில் உள்ளேயும் கம்பங்கள் உண்டு. 'கோவிந்தா' கோவிந்தா' என்று பக்தர்கள் கியூவிலே நின்றபடி கம்பத்தில் சாய்ந்து பெருமூச்சு விடுகிறார்கள்.

'அடடா! பக்தர்களெல்லாம் உன் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டு வருகிற போது, அவர்கள் சாய்ந்துகொள்ள ஓர் உறு துணையாக நான் நிற்பேனே' என்பது ஓர் அர்த்தம், குலசேகர ஆழ்வார் பாட்டுக்கு.

இன்னொரு அர்த்தம்..?
தோசை கண்டேன்
வடை கண்டேன்
புளியோதரையும் கண்டேன்...
கம்பத்தில் துடைக்கவும் கண்டேன்!

பகவானை சேவித்து, பிரசாதத்தை வாங்கி உண்பவர்கள் கையலம்ப சுவாமி புஷ்கரிணியைத் தேடிக் கொண்டா போகிறார்கள்? பக்கத்திலேயுள்ள கம்பத்திலே கையைத் தடவிவிடுகிறார்கள்!

அந்தக் கம்பம் மௌனமாய் இருக்கிறது. நாமானால் கேட்டுவிடுவோம்... "ஏன் சுவாமி இப்படி மேலே துடைக்கிறீர்?" என்று. ஆனால் கம்பம் கேட்குமா! 'பாகவத சேஷம் கிடைக்கிறதே' என்று சந்தோஷமாய் அதை ஏற்கிறது கம்பம்!

'சுத்தம் பாகவதஸ்யன்னம்' என்றது இதைத்தான்!

எப்படி பாகவத சேஷத்தைச் சாப்பிட்டால் நம் நல்ல புத்தி வளருமோ, அதே போல் துஷ்டர்களுடைய வீட்டிலே நாம் உண்பதால் நேர் எதிர் விளைவு உண்டாகும்.

இதற்கு ஒரு கதையிருக்கிறது:

ஒரு கிரஹத்திலே அதிதி ஒருவரைச் சாப்பிட அழைத்தார்கள். வந்தவர் சாப்பிட்டு முடித்துப் புழக்கடைப் பக்கம் போனார். வீட்டுக்காரர் அவரை உட்கார வைத்துச் சம்பாவனை பண்ண வேண்டும் என்று சம்ப்ரமமான ஏற்பாடுகள் செய்திருந்தார்.

புழக்கடையில் கையலம்பப் போனவரோ வரவேயில்லை! எட்டிப் பார்த்தால் அவரைக் காணோம்! அவரை மாத்திரமல்ல... கொல்லையில் கட்டி வைத்திருந்த பசுவையும் காணோம்!

பசுவை அவசர அவசரமாகத் தேடுகிறார்கள் வீட்டிலே! அதற்குள் வாசலில் ஒருத்தர் வந்து சேர்ந்தார்.

"என்ன சுவாமி! உங்கள் கிரஹத்திலே இன்றைக்கு என்ன விசேஷம்? கோதானம் பண்ணியிருக்கிறீர்கள் போலிருக்கிறதே..." என்றார்.

"விசேஷம் எதுவுமில்லையே... தானம் எதுவும் நான் பண்ணவில்லையே...?"

"அப்படியானால் ஊர்க்கோடியில் உங்கள் பசுவை ஒருத்தன் பிடித்துக் கொண்டு போகிறானே..?! அது உங்கள் வீட்டுப் பசுதான்..."

கூட நாலு பேரை அழைத்துக் கொண்டு ஊர்க் கோடிக்கு ஓடினார் அந்த வீட்டுக்காரர். போனால், பசுவையும் கன்றையும் ஓட்டிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார் விருந்துக்கு வந்தவர்!

கிடுகிடுவென்று நாலு பேராகப் போய் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். "ஐயா! சாதத்தைப் போட்டுவிட்டுக் கையலம்பி வருவீர்கள் என்று காத்திருந்தால் இப்படி பசுவைப் பிடித்துக் கொண்டு போய்விட்டீரே... இதற்கு என்ன அர்த்தம்!" என்று கேட்டார்.

உடனே அந்த அதிதி 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டார். அங்கேயே வயல்காட்டிலேயே உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டார்!

என்ன சொல்லி அழுதார் அவர்?

"ஒரு தப்பும் பண்ணாத நான் இன்றைய தினம் பசுவைத் திருடினேன் என்று சொன்னால், ஒரு வேளை உங்கள் கிரஹத்திலே சாப்பிட்டதனால் இந்த புத்தி வந்ததோ..? இந்த ஒரு நாளிலேயே இப்படி புத்தி மாறியது என்றால் இன்னும் நாலு நாட்கள் உட்கார்ந்து சாப்பிட்டிருந்தால் நான் எவ்வளவு பெரிய திருடனாக மாறியிருப்பேனோ? என்னென்ன அக்கிரமங்களெல்லாம் பண்ணும்படியாகியிருக்குமோ? எனக்குச் சாதம் போட்டு கெடுத்துவிட்டீரே...!" என்றார்!

(தொடரும்)

பிந்து - 2

அப்பா சொன்னது மிகவும் கவர்ச்சிகரமான அன்பளிப்புதான். எனினும், பிந்துவுக்கு அது வேண்டி இருக்கவில்லை. இந்த வருடம், வகுப்பிலேயே முதல் மதிப்பெண் வாங்கினால், அவளுக்குச் சைக்கிள் - சின்னக் கன்றுக்குட்டி மாதிரியான சைக்கிள் - பரிசு என்றார் அப்பா.

சைக்கிள் என்று சொன்னதும் துள்ளிக் குதிக்க வேண்டிய பிந்து, சும்மா நிற்பது, மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டு நிற்பது, அப்பாவுக்கும், ஏன், அம்மாவுக்கும் கூட ஆச்சர்யம்.

"என்னடி பெரிய யோசனை?" என்று கேட்டாள் அம்மா, சிரித்தபடி.

"எனக்கு சைக்கிள் வேணாம்" - தலையை இப்படியும் அப்படியும் அசைத்தாள், எழுதிய வரியை ரப்பரைக் கொண்டு மேலும் கீழும் அழிப்பது போல. அப்பாவுக்குச் சிரிப்பு.

"வேற என்னடி வேணும்?"

"குதிரை. எனக்கு ஒரு குதிரை வேணும்."

அப்பாவும் அம்மாவும் இப்போது நிறைய சிரித்தார்கள்.

"குதிரையா?"

"ஆமாம். நிஜமான குதிரை. நாலு கால்லே ஓடற குதிரை. புல் தின்கிற குதிரை."

"அடே... குதிரையை வச்சிட்டு என்ன பண்ணுவே?"

"பீச்சுக்கு அழைச்சுட்டுப் போயி, குழந்தைகளை ஏத்திக்கிட்டு, சுத்தி வரப் பண்ணுவேன்."

அப்பா விழுந்து புரளாத குறையாகச் சிரித்தார்.

பிந்து, பள்ளிக்கூடம் போகும் வழியில்தான், ஜானி வீடு இருந்தது. அந்த இடத்துக்குப் போனாலே, பச்சைப் புல் வாசனை வரும். வீட்டு வாசலில், குதிரை கட்டி இருக்கும். அது, பெரிய கூந்தல் மாதிரி வாலைத் தொங்க விட்டுக் கொண்டு, புல் தின்னும். சமயங்களில் 'ஹி... ஹி' என்று சிரிக்கும். எத்தனை அவசரமாக இருந்தாலும் பிந்து, அந்த இடத்தில் இரண்டு நிமிஷமாவது நிற்பாள். நின்று, குதிரையை விழுங்க வேண்டும் அவளுக்கு. சிவந்த, கொள்ளு நிறம் அதுக்கு. கொள்ளைத் தின்று பெற்ற நிறமா? குதிரை ஒரு ஆச்சர்யம் என்றால், அதன் அருகில் நின்று கொண்டு தடவிக் கொடுத்தபடி, வெகு அலட்சியமாக இவளைப் பார்க்கிற அந்தப் பையன், இன்னொரு ஆச்சர்யம். ஹும். குதிரை இல்லாத வீட்டில் பிறந்தோமே என்கிற வருத்தம் அவளுக்கு ஏற்பட்டது, சட்டென்று...

அன்று கணக்கு வகுப்பில், அந்த விந்தை நிகழ்ந்தது. கரும்பலகையில் இருந்த கணக்குக்கு, அவர்கள் விடை கண்டுபிடிக்கப் போராடிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜானி, வகுப்பில் நுழைந்தான். ஐயோ... அதே குதிரைக்காரப் பையன்தான். குதிரையின் பக்கத்தில் தைரியமாக நிற்கிறவன். கடற்கரையில், மாலை வேளைகளில், குழந்தைகளை ஏற்றிக் கொண்டு திரிகிறவன். அவன், அவள் படிக்கிற பள்ளிக்கூடத்தில், அவள் படிக்கிற அதே வகுப்பில் சேர்கிறதாவது?

அதிர்ஷ்டம்தான். கணக்கு வாத்தியார், ஜானியுடன் வந்த பெரியவரிடம் இருந்த சீட்டை வாங்கிப் பார்த்தார்.

"பாய்... நல்ல காரியம் பண்ணினீங்க... படிக்கிற பையனைக் குதிரை மேய்க்க விட்டுடுங்களேன்னு, எனக்கு ரொம்ப வருத்தம். இப்பவாவது வந்து சேர்ந்தீங்களே..."

கணக்கு சார், அந்தப் பையனை, பிந்துவுக்கு நேர் அடுத்த பெஞ்சில் வலப்புறமாக அமரவைத்தார்.

"போர்டுல இருக்கிற கணக்கை எழுதிக்கடா, ஜானி" என்றார் சார்.

ஓரக் கண்ணால் பிந்து, அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன், மஞ்சள் பையிலிருந்து, ஒரு நோட்டை எடுத்து, பிறகு பென்சிலை எடுத்தான். அது சீவாத, புத்தம் புதுப் பென்சில்.

அவள், தன் பென்சிலை எடுத்து, அவன் பக்கம் நீட்டினாள். ஜானி திரும்பிப் பார்த்தான். பென்சிலை வாங்கிக் கொண்டான். லேசாகச் சிரிப்பது போல இருந்தது. பிந்து பெருமையுடன், மல்லிகாவின் பக்கம் பார்த்தாள். மல்லிகா ரொம்பவும் ராங்கிக்காரி. அதோடு ஹைட்-வெயிட். புத்தம் புது கடிதார், பாவாடை, தினம் ஒரு கார்... எல்லா சாரிடமும் டியூஷன். அதனால், அவளது கர்வம் நிரம்பி வழிந்தது. தானும், ஜானியும் சிநேகமாகி விட்டது, மல்லிகாவுக்குப் பொறாமையை ஏற்படுத்தும் என்பதை நினைக்கும்போதே பிந்துவுக்குச் சந்தோஷம். மல்லிகா, இவள் பார்ப்பதைக் கண்டு, இரட்டைச் சடையில், இடச் சடையை வலப்பக்கம் போட்டுக்



கொண்டு, வேண்டுமென்றே எங்கோ பார்த்தான். மல்லிகா, இல்லிகா, சில்லிகா...

பள்ளிக்கூடம் விட்டு, ஜானியுடன் திரும்பினான், பிந்து. வீடு வந்தவுடன், குதிரையைத் தடவிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதை அவனிடம் சொன்னான். வீடு நெருங்கியதும், ஜானி, பிந்துவை, குதிரையின் அருகில் நிறுத்தினான். புல் வாசனை, குதிரையின் வாசனை இரண்டுமே அவனுக்குப் பிடித்தது.

பிந்து மேசையைத் திறந்து, தீப்பெட்டியை எடுத்தான். பெரிய சைஸ் தீப்பெட்டி. அதில் பொன் வண்டு. வர்ணம் பூசிக் கொண்ட வண்டு.

"என்னம்மா சாப்டியா?" என்று அதனிடம் கேட்டான். அது பதில் சொல்லி இருக்க வேண்டும். பிந்துவுக்கு அதன் பாஷை தெரியும். அவன் போட்ட சோற்றுப் பருக்கை பாதியாக இருந்தது.

அப்பா குதிரை வாங்கிக் கொடுத்த பிறகு, பொன் வண்டுக்கு விடுதலை கொடுத்து விடுவது என்று இருந்தாள் அவள். அம்மா, காப்பி கொண்டு வந்து மேசை மேல் வைத்தாள்.

"இந்த வண்டைக் கட்டிக்கிட்டு, என்னத்துக்கடி அந்தப் பாவம். விட்டுடுன்னு சொன்னா கேட்க மாட்டேங்கறே."

"அப்போ குதிரை வாங்கிக் கொடு. இதை ஜானிகிட்டே கொடுத்துடறேன்."

"வாங்கித் தர்றேன். குதிரை மேய்க்கிறது ஒன்றுதான் குறை. அசடு."

இருட்டிக் கொண்டு வந்தது.

"டீ... பிந்து. நாடார் கடைக்குப் போயி, நாலு முட்டை வாங்கிட்டு வாயேன்"

பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள், பிந்து. ஜானி வீட்டைக் கடந்துதான் நாடார் கடை. தூரத்தில் அவன் வீட்டில் ஒரு கார் நிற்பது தெரிந்தது. அருகில் போகும் போதுதான், குதிரைக்குப் பக்கத்தில் மல்லிகா, ரெட்டைச் சடை, நிற்பது தெரிந்தது. ஜானியும் நின்றான். குதிரையின் மேல் கையைப் போட்டுக் கொண்டு, பேசிக் கொண்டிருந்தாள், மல்லிகா.

"அம்மா முட்டை வாங்கிட்டு வரச் சொன்னாங்க" என்று தானாக ஜானியிடம் சொன்னாள், பிந்து.

ஏதோ, தெருவில் போகிறவர்கள் பேசுகிற பேச்சைப் போல, ஜானி, அவளை அலட்சியப்படுத்திவிட்டு, மல்லிகாவிடம் ஏதோ தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தான். மல்லிகா, இவளை இகழ்ச்சியாகப் பார்ப்பது போல இருந்தது. அவள் ஓடத் தொடங்கினாள். மனக்குள் ஜானி, கீனி, கூனி என்று வைது கொண்டாள்.

அன்று மாமாவும் மாமியும் வந்திருந்தார்கள்.

அம்மா, மாமாவிடம் சொன்னாள்.

"அண்ணா, கேட்டியா. பிந்து குதிரை வளர்க்கப் போறாளாம். குதிரை."

"பேஷ்" என்றார் மாமா.

"ஏன் குதிரை? கழுதை வளர்க்கலாமே! வித்தியாசமா இருக்கும்."

சிரிப்பு.

பிந்து, முகம் சிவக்கச் சொன்னாள்.

"இல்லை மாமா. எனக்குக் குதிரையும் வேணாம். கழுதையும் வேணாம்."

"என்னதாண்டி வேணும்?"

அவள் பதில் சொல்லாமல் மாடிக்கு ஓடி, மேசையைத் திறந்தாள். பொன்வண்டை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள்.

பிரபஞ்சன்



- டிரைவர்களின் சோகம்...!
- அரசின் தடுமாற்றம்...!
- மக்களுக்குத் திண்டாட்டம்...!

வெள்ளோட்டம் பார்க்கும் வெள்ளைக் கொடி ஆட்டோக்கள்

'கோவை ஆட்டோவில் ஏறினால் அரசனும் ஆண்டியாகி விடுவான்...' என்று நாலைந்து வருடங்களுக்கு முன் ரோட்டரி கிளப் போன்ற சமூக நல அமைப்புகள் ஏதோ ஓர் அமைப்பின் பெரிய விழாவின்போது பெரிய பெரிய பேனர்கள் வைத்திருந்தார்கள். ஆனால் அதிசயத்தில் - ஏன் ஆச்சர்யத்தில்கூட ஆழ்த்தியது, கோவை தினசரிகளில் வந்த சமீபத்திய செய்தி ஒன்று!

ஆட்டோ டிரைவர்களில் ஒரு சாரார் ஆட்டோவிற்கு மீட்டர் போட்டு ஓட்டப் போவதாகவும், அதற்கு அடையாளமாக வண்டியில் வெள்ளைக் கொடி கட்டியிருக்கும் என்றும், அதற்கு பயங்கர எதிர்ப்பு உள்ளதாகவும், அரசு இதற்குத் தக்க ஆதரவும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என்கிற மாதிரியும் செய்தியின் சாரம் அடுக்கடுக்காய் நீண்டது.

கோவை ஆட்டோ டிரைவர்களாவது, மீட்டர் போட்டு ஓட்டப் போவதாவது?

இது விஷயமாய் என்னதான் நடக்கிறது (அது என்ன பாதுகாப்பு... பயங்கர எதிர்ப்பு... ஆதரவு...?) என்று ஆராய கோவை நகரின் ஆட்டோ வட்டாரத்தை ஒரு 'விசிட்' அடித்தோம்...

'ஆட்டோ தொழிலாளர் நல்வாழ்வு அமைப்பு' என்று வெறும் ஏழு பேரோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பின் முடிவிற்கு 1055 ஆட்டோ டிரைவர்கள் கையெழுத்திட்டுள்ளனராம்...! இதைச் சார்ந்த நான்கு இளைஞர்களை நாம் சந்தித்தபோது இந்த அமைப்பு ஆரம்பித்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை என்றார்கள். இதன் தலைவர் அசோக் குமார், "இப்போ புது பர்மிட், 2000 நைட் சர்வீஸ் பஸ், மினி வேன், அது இதுன்னு சுத்தமா ஆட்டோ ஓட்டமில்லை. பஸ் கட்டணம் உயர்ந்ததும் ஆட்டோவும் ஏத்தியிருப்பாங்கன்னு கிட்ட யாரும் வர்றதில்லை. அதோட அடாவடித்தனம், எக்கச்சக்க வாடகை என்றெல்லாம் எங்களுக்கு ஜனங்ககிட்ட ஏகமாய்க் கெட்ட பெயர்... இந்த லட்சணத்துல அஞ்சாறு பேர் உட்கார்ந்துட்டுப் போற ஆட்டோ வேற கோவையில் விடப் போறாங்களாம்! இந்த நிலைமை



• ஆர். செல்வம்



• சவாரிக்குக் காத்திருக்கும் ஆட்டோக்கள்

ஊர்வலம் நடத்தி இனி கூடிய சீக்கிரம் கிடைக்கப் போற ஒன்னை இவங்க ஏதோ திடீர்னு வந்து சாதிச்ச மாதிரி பிரமை ஏற்படுத்தவே இவங்க வந்த மாதிரி தெரியுது. நானும் 18 வருஷமா ஆட்டோ ஓட்டறேன். ஒருதடவை கூட இப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலை எங்களுக்கு வந்தது கிடையாது. மீட்டருக்கு ஒன்னு, ரெண்டு ஏத்திக் கொடுத்தால்கூடப் போதும். கோயமுத்தூர்ல

• வெள்ளைக் கொடி அணி:
அசோக்குமார் & நண்பர்கள்



நீடிச்சா நாங்க எல்லாம் தூக்கு மாட்டிட்டு தொங்க வேண்டியது தான்...


''இப்படியே இதை விட்டோம்ன்னா கோயமுத்தூர்ல சைக்கிள் ரிக்ஷா ஒழிஞ்ச மாதிரி இதுவும் ஒழியப் போறது நிச்சயம்ன்னுதான் நாங்க ஏழுபேர் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தோம்... எல்லோரும் மீட்டர் போட்டு ஓட்டலாம்... அதுக்கு அடையாளமா வண்டியிலே வெள்ளைக் கொடி கட்டிடலாம்னு முடிவு செஞ்சு ஊர் ஊரா ஆதரவு தேடினதுல 1055 பேர் ஒத்துகிட்டு கையெழுத்துப் போட்டாங்க. தனித்தனியா கலெக்டருக்கு மனு செஞ்சாங்க. பல ஆட்டோ ரிக்ஷா அமைப்புகளையும் அணுகினோம். சில அமைப்புகள் ஒத்துழைத்தாலும் பல அமைப்புகளிடம் எதிர்ப்புதான். சிலர்கிட்டே வெட்டுவேன், குத்துவேன்னு பலமான, பயமுறுத்தலும் கூட! அதுதான் பாதுகாப்பு வேணும்னு கலெக்டருக்கு எழுதினோம். இதுவரைக்கும் கலெக்டரை சந்திக்க முடியலை. கூடிய சீக்கிரம் சந்தித்துப் பேசி எங்க நிலையை விரிவா விளக்குவோம். மீட்டர் போட்டு ஓட்டினாலாவது ஜனங்க எங்க மேல நம்பிக்கை வைப்பாங்க, எங்க தொழிலும் சிறப்பா வரும்ன்னு நம்பறோம்.''

இவர் இப்படிச் சொல்ல, கோவை ரத்தினபுரி ஸ்டேண்ட் ஆர். செல்வம் இதை கத்தமாக ஆட்சேபித்தார்.

''வாடகை இல்லை. மீட்டர் போடாம இனி தொழில் ஓட்டறது கஷ்டம்; உண்மை தான். ஆனா இதைப் பொறுத்தவரை யாரோ ஒரு சிலர் திடீர்னு 'பப்ளிசிட்டி' தேடற முயற்சின்னுதான் சொல்லணும். ஆயிரக்கணக்கானோர் கோஷம் போட்டு, ஆர்ப்பாட்டம் எல்லா ஆட்டோவும் மீட்டர் போட்டு ஓட ஆரம்பிச்சுடும். அதுதான் இப்போதைய சூழ்நிலை.''

''இந்தப் புதிய ஆட்டோ அமைப்பைப் பொறுத்தவரை எங்களுக்கு பத்திரிகை வழிச் செய்தி தவிர நேரடித் தகவல் ஏதும் இல்லை... இவர்களில் யாரும் ஆதரவு தேடி எங்களிடம் வரவுமில்லை...'' என்று எடுத்த எடுப்பிலேயே மறுத்தவர் 'கோவை மாவட்ட ஆட்டோ ஓட்டுனர் தொழிலாளர் சங்கத்தின்' (CITU - உடன் இணைப்பு) மாவட்ட பொதுச் செயலாளர் பி.கே. சுகுமாரன்.

''கோவை மாவட்டத்துல ஆட்டோ டிரைவர்கள் நாலில் ஒரு பங்குக்கு மேல எங்க அமைப்பைச் சேர்ந்தவங்கதான். இவ்வளவு பெரிய அமைப்புகிட்டேயே, ஆதரவு கேட்க வராத இவங்க, வேறெந்த அமைப்புகிட்டப் போய் ஆதரவு கேட்டாங்கன்னு தெரியலை. அதுல வேற எதிர்ப்பு, கொலை மிரட்டல், குத்து வெட்டுன்னு... இதெல்லாம் சும்மா சார்...



உலகிலேயே காய்கறிகளை அதிகமாகச் சாப்பிடுபவர்கள் சீனர்கள்தாம். ஜப்பான் மக்கள் சோயா பீன்ஸில் உடலுக்கு வேண்டிய அனைத்துச் சத்தும் உள்ளது என்பதை உணர்ந்து விடாப்பிடியாகச் சாப்பிடுகின்றனர். ஆப்பிரிக்க நாட்டு மக்களின் முக்கிய உணவு சோளம்.

''வியக்க வைக்கும் அதிசய உண்மைகள்''
நூலிலிருந்து: **பா.குணா**

இவங்க அப்படி வந்திருந்தா நாங்க இப்ப இருக்கிற சூழ்நிலைய பக்குவமாய் பேசி புரிய வச்சிருப்போம்! கலெக்டர்கிட்டே கடைசியா நாங்க பேசினதுல 'பெட்ரோல் விலை உயர்வு வரட்டும், ரேட்டைக் கூட்டி தர்றோம்'ன்னு சொன்னார். இப்ப பெட்ரோல் விலை கூடியாச்சு. கலெக்டர் கூப்பிட்டுப் பேச வேண்டியதுதான் பாக்கி. இத்தனை வருஷ காலம்மா இல்லாம இப்ப இதுக்கு ஒரு தீர்வு வரும்னு உறுதியா நம்பறோம். அதோட இல்லாம 'சென்னையில உள்ள ஆட்டோ கட்டணம் எல்லா நகரங்களுக்கும் பொருந்தாது; அந்தந்த நகர எல்லை, சாலை உச்ச வரம்பு, தூரம் கணக்கிட்டு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே கட்டணம் நிர்ணயித்துக் கொள்ளட்டும்' என்று தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் (இப்போது) குறிப்பிட்டுச் சொன்னார் முதல்வர். அதனை வலியுறுத்தி நாங்கள் மீட்டர் கட்டணம் கூட்டிக் கொடுக்கச் சொல்லி கலெக்டரிடம் பேசியும் வருகிறோம்!'' என்றார் அவர்.

“மீட்டர் போட்டாலும் ஜனங்களுக்கு பயம் விடாதுங்க... மீட்டரெல்லாம் வேண்டாம்... டவுன்ஹாலுக்கு எவ்வளவு... காந்திபுரத்துக்கு எவ்வளவுன்னுதான்... எடுத்த எடுப்புல கேட்பாங்க...''

– என்று ஆரம்பித்த மீட்டர் மெக்கானிக் விக்டர் ஜெயபாலன் ''இப்ப எனக்கு F.C. அன்னெய்க்கு மட்டுந்தாங்க, மீட்டர் ரிப்பேருக்கு வருது. செலவும் (Meter Spares) அதிகமாகும். மீட்டர் போட்டு ஓட்டும்போது சின்னச் சின்ன ரிப்பேர்கள் உடனடியா நிவர்த்தி செய்து விட, செலவும் குறையும். எங்களுக்கும் ரெகுலரா தொழில் ஓடும். ஆட்டோவுல மீட்டர் போட்டு டிரைவர்கள் ஓட்டணும்னா ஜனங்களுக்கு விழிப்புணர்ச்சி வரணும். ஆட்டோ கட்டணம் குறித்து அரசு அட்டை கொடுத்தாலும் பயணிகள் ஆட்டோ டிரைவர்களை நம்பத் தயாரில்லை. மீட்டர் போட்டாலும் டிரைவர்களை (மீட்டருக்கு சூடு. குறிப்பிட்ட இடத்தை சுற்றியலைந்து கொண்டு போதல்) நம்ப மாட்டார்கள். இதற்கொரு மாற்று வடிவை அரசாங்கம் வடிவமைத்துக் கொடுக்காத பட்சத்தில் இது... இப்படியேதான்...!'' என்றார்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. சந்தானம் அவர்களை அணுகியபோது ''இந்த வருடம் பெட்ரோல் விலை உயர்வு அரசு அறிவிக்கட்டும்; பிறகு கட்டண உயர்வு கூட்டித் தருகிறோம் என்று ஆட்டோ சங்க நிர்வாகிகளுடன் சமீபத்திய பேச்சு வார்த்தையின்போது பேசியிருந்தேன். இப்போது அரசு பெட்ரோல் விலை உயர்த்தி விட்டது. தமிழக அரசிடமிருந்து 'ஆணை'யை இப்போது எதிர்பார்த்து உள்ளோம். அது வந்த பிறகு இது குறித்துப் பேசுவது வசதியாயிருக்கும். இந்த முறை அனைத்து தரப்பையும் அழைத்துப் பேசுவதன் மூலம் கண்டிப்பாக மீட்டர் போட்டு, கோவையில் ஆட்டோ ஓடும்'' என்றார் உறுதியுடன்.

என்னதான் அரசுத் தரப்பிலும் டிரைவர்கள் தரப்பிலும் இப்படி இது ஒரு முடிவுக்கு வந்துவிட்ட மாதிரி பேசினாலும், பெட்ரோல் விலை உயர்வு அதைப் பொறுத்துக் கட்டணம் எனும்போது மீட்டர் போட்டு ஓட்டுவதெல்லாம் சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

'இனி சென்னையிலும் கட்டணம் ஏறும்; அங்கு என்ன கட்டண நிர்ணயமோ அதையேதான் தமிழக அரசு மற்ற மாவட்டங்களுக்கும் 'ஆணை' அனுப்பும். கோவை ஆட்டோ டிரைவர்களுக்கு இது ஒப்புதல் தராது. இவர்களுக்காக அரசின் சட்டத்தை கோவை, மதுரை, சேலம் என்று மாவட்ட வாரியாக மாற்றியமைக்கவா முடியும்...?' – இந்த இடத்தில் அரசு தடுமாற நேரும்போது மேலும் இதற்கு இடர்பாடு, கோஷம், போராட்டம், ஊர்வலம்தான். வெள்ளைக்கொடி கட்டி சில ஆட்டோக்கள் மட்டும் எத்தனை நாட்கள் ஓடிவிடும்...?

கோவையைப் பொறுத்தவரை நுகர்வோர் அமைப்பு, பொதுநல அமைப்பு, (ரோட்டரி, லைன்ஸ்) ஆகியவற்றைக் கூட்டிப் பேசி அரசு தீர்வு கண்டால் இது கோவை ஜனங்களுக்குப் பொங்கல் பரிசாக அமையும்... இல்லையென்றால் அப்பாவி ஜனங்களுக்கு மறுபடியும் திண்டாட்டம்தான்.

சந்திப்பு, புகைப்படங்கள்:
கா.சு. வேலாயுதம்

கதை — 3

பிந்து - 3

பிரபஞ்சன்



பிந்துவும், அவளைப் பெண் பார்க்க வந்த சிபியும், சுமார் நாற்பத்தாறு நிமிஷங்கள் பேசினார்கள். அவர்கள் பேச்சின் சாராம்சம், புதுமையானது என்றாலும், வழமையானது என்றாலும், ஒன்று தான்.

அது ஒரு வெள்ளிக்கிழமை மாலை. பறவைகள், மிருகங்கள் மற்றும் மனிதர்கள் தங்கள் கூட்டடையும் நேரமாக அது இருந்தது. ஒரு நீண்ட கோடை வெயிலுக்குப் பிறகு, அந்த மாலை, சற்று மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காற்று, குளிர்ச்சியாக இனிமையாக இருந்தது.

இதுபோன்ற விசேஷங்களுக்கென்றே, இந்தியர்கள் உருவாக்கிக் கொண்ட டி.மு. பலகாரங்கள் பரிமாறப்பட்டன. பரிமாறும் சாக்கில் பிந்துவை, சிபி மற்றும் அவன் கூட்டத்தார்க்கு முன் விட்டனர். உண்டு முடித்தபின், சிபி, பெண்ணோடு தனிமையாகச் சில வார்த்தைகள் பேச வேண்டும் என்றான். மரபு வழியில் ஊறி உப்பிக் கிடந்த, அந்த ஆசாரமான குடும்பத்தில், அஸ்திவாரத்திலேயே வேட்டு வைக்கப்பட்டது போல, வீடு கலகலத்தது. திடுமென, நவீன வாழ்க்கை முறை என்கிற சட்டையை அணிந்து கொண்டு, ஒரு வகையான தாசிச் சிரிப்பை உதிர்த்தபடி பிந்துவின் அப்பா சொன்னார் :

"பேஷா... அதுக்கென்ன? இப்போல்லாம் அப்படி பிள்ளைகள் கேழ்க்கிறது சகஜம் தானே? நாங்கள், பஞ்சாங்கம் இல்லை... சார்வாள், பொண்ணோடு பேசலாம்."

எங்கு மாப்பிள்ளைப் பையனையும் பெண்ணையும் உட்கார்த்தி வைப்பது? உக்கிராண உள், நிமிஷத்தில் ஒழிக்கப் பட்டது. எலிப் புழுக்கை, அறுந்து போன பிரா, கிழிந்த பாவாடை, விட்டெறிந்த கொண்டை உருண்டை, கவர் முழுக்க ஸ்டிக்கர் பொட்டுக்கள் இத்தியாதி சம்பிரங்களுடன் இருந்த உள் ஒதுக்கித் தரப்பட்டது. எதிர் எதிராக இரு நாற்காலிகள்.

வானம், மப்பும் மந்தாரமுமாக இருந்தது. பிந்து, அம்மாவின் பட்டுப் புடைவையை

(ஆகி வந்த பட்டாக்கும்!) உடுத்தி இருந்தாள். அவன் பேண்ட்டும், சிலாக்கும் அணிந்து, கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான். நிமிஷத்துக்கொருமுறை, முகத்தைக் கைக்குட்டையில் துடைத்துக் கொண்டான்.

"மழை வரும் போல் இல்லை?" என்றான் சிபி.

"உம்" என்றாள் பிந்து.

"ஆனாலும் மெட்ராஸ், ரொம்பவும் அழுக்கா மாறிடுச்சு. சகிக்கலை."

"மழை வந்தா சரியாயிடும்."

"எப்படி? மழை வந்தாவா?"

"மெட்ராஸ் கழுவப்பட்டிடுமே."

"ஹி... ஹி..." என்று அவன் சிரித்தான்.

"உனக்கு என்ன 'பேசிக்' பே?" என்றான் அவன் திடுமென்று. சுவாதீனமாக ஒருமையில் அவன் பேசியது அவளுக்குச் சுருக்கென்றது.

"உனக்கு... சாரி... உங்களுக்கு என்ன பே...?" என்றாள் பிந்து. மேல் போட்டிருந்த காலைச் சரிப்படுத்திக் கொண்டு அவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

அடுத்த ஒன், டூ, த்ரீ தொடுப்பவர் கார்த்திகா ராஜ்குமார்

"என்ன கேட்டீங்க? என் 'பே'தானே? எல்லாம் சேர்த்து ஆறாயிரம் வரும்."

"எனக்கு மொத்தமாகக் கூட ஐந்நூறு வரும்."

அவன் அமைதியாக இருந்தான். மேலே பார்த்தான். தாடையைத் தேய்த்துக் கொண்டான்.

"கடைசியா என்ன சினிமா பார்த்தீங்க?"

"எனக்கு நேரம் கிடைக்கிறதில்லை."

"நான்.... ரசிகன். அவர் படம்னா முதல் நாள் முதல் ஷோவில் பார்த்திடுவேன். ஆமாம். பெண்களுக்கு... மேலே 'கிக்'குன்னு சொல்றாங்களே. உங்களுக்கு அவர் பிடிக்காதா?"

"எனக்கு யாரும் 'கிக்' இல்லை. எனக்கு இப்போ நடிக்கிற பல பேரோட பெயர் கூடத் தெரியாது."

"ஏன்? சினிமா பார்க்கக் கூடாதுன்னு சபதமா? ஞாயிற்றுக் கிழமையில போகலாமே?"

"எனக்கு செய்ய நிறைய வேலை இருக்கு. உருப்படியா வேலை."

"அப்படின்னா, சினிமா உருப்படியான வேலை இல்லையா?"

"நான் எனக்குச் சொல்லிக்கிட்டேன்."

அவன் அமைதியாக இருந்தான். வெளியே, வாசலில் காக்கை ஒன்று வந்து அமர்ந்து கொண்டு கர் கர் என்றது. அதை ஏனோ, சிபி ரசிக்க முடியவில்லை. முகம் தெரியாத அந்தக் காக்கையின் மேல் அவனுக்கு மிகவும் கோபம் வந்தது. அவன் சொன்னான்.

"ஒரு முக்கியமான விஷயம். அதைச் சொல்லத்தான் உன்னை – உங்களைத் தனியாக அழைச்சேன். எனக்குக் கடலூரில் வேலை. மாற்றல் கிடைக்காது. நீங்கள் சென்னையில் உத்தியோகம் பார்க்கிறீர்கள்...."

"சொல்லுங்கள்...."

"திருமணம் ஆன பிறகும் நாம் பிரிந்திருக்க வேணுமா? என்ன பண்ணலாம்?"

"நீங்கள் கடலூரில் இருங்கள். நான் சென்னையில் இருக்கேன். என்ன நாலு மணி நேரப் பயணம். வாரக் கடைசியில் நாம் சந்திக்கலாமே. நீங்கள் இங்கே வரலாம். நான் கடலூர் வருவேன்."

"அதன் பேர் கல்யாணமா?"

பிந்து யோசனையில் இருந்தாள். அவன் சொன்னான்.

"வேலைக்குப் போவது பணத்துக்காகத் தானே? என் சம்பாத்தியமும், சொத்தும் நாம் சௌகர்யமாக வாழப் போதும்."

அவள் சொல்ல வேண்டி இருந்தது.

"வேலை, பணத்துக்காக மட்டும் இல்லை. சுயகௌரவத்துக்காக."

"அப்படின்னா? கணவன் அல்லது மனைவி இரண்டு பேரில் ஒருத்தர் சம்பாதித்தால் போதாதா – உங்கள் கருத்துப்படி.. அதாவது நவீனப் பெண்கள் இப்போல்லாம் பேசறாங்களே... அதன்படி.."

பிந்து சிரித்தாள். அமைதியாகச் சொன்னாள்.

"நான் பெண் மட்டும்தான். நவீனம், பழசு எல்லாம் இல்லை. ரெண்டு பேரில் ஒருத்தர், யாரானும் இருக்கலாம் என்றுதான் அப்படிச் சொல்கிறார்கள். வாய்ப்பு இருந்தால் ரெண்டு பேரும் உழைக்கலாம். அதுதான் சரி. குடும்பத்துக்கு என் பங்கும் இருக்க வேண்டும். அதுக்குத்தான் வேலை."

அவன் புன்சிரிப்போடுதான் சொன்னான்.

"எனக்குப் பலரைத் தெரியும். வேலைக்குப் போகிற பெண்கள், குடும்பத்துக்குத் தங்களை முழுசாகத் தருவதில்லை. அதனால் பிரச்னைகள் வருது..."

"எதுக்குத் தாணும். மனுஷ வாழ்க்கை நிறைய தேவைகளை அடக்கி இருக்கு. எனக்குத் தெரிஞ்ச ஒரு 'டான்சர்' கல்யாணப் பண்ணிக்கலை. ஒரு பேராசிரியை, குடும்பம் தனக்குப் பொருந் தலைன்னு விவாகரத்து வாங்கிட்டாங்க. குடும்பம் தவிர்க்க முடியாத, ஒரு அமைப்பா இருக்கு. முடிஞ்சவர்கள் தவிர்த்துக்கிறாங்க. இதெல்லாம், மனம் சார்ந்த விஷயம், இல்லீங்களா? பலாத்காரப் பண்ணி குடும்பத்துக்குள்ளே ஆணையோ பெண்ணையோ தள்ள முடியுங்களா?"

காக்கை, இப்போது பறந்து விட்டிருந்தது போலும். அதன் சப்தம் இல்லை. என்றாலும், ஏதோ ஒன்று, அங்கே அவர்களுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டு கத்துவதாக அவன் உணர்ந்தான்.

"பிந்து... நான் சின்ன வயசில் இருந்தே ஹாஸ்டல்லே படிச்சு வளர்ந்தவன். படிச்சு, வேலை கிடைச்ச பிறகும், தனியாத்தான் இருக்கேன். கல்யாணத்துக்குப் பிறகும் நான் தனிமையில் இருக்கணுமான்னு யோசிக்கிறேன். அதோடு, ஹோட்டல் சாப்பாடு என் வயித்துக்கு ஒத்துக்கலை."

பிந்துவுக்கு இப்போதும் சிரிப்பு வந்தது.

"உங்க தனிமையை புரிஞ்சுக்க முடியுது. ஆனாலும், என் வேலை, மாற்றலுக்கு உட்பட்டது இல்லை, நான் விரும்பினாலும். உங்க தனிமையை மனைவி மூலம்தான் போக்கிக்க முடியும்னு நினைக்கிறது, சரியா? அதோடு, எதுவரைக்கும், எந்த தூரம் மட்டும், ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக வர முடியும்? நாம், தனிதானே? தனியாத்தானே வந்தோம்? ஹோட்டல் விஷயம் - நீங்களே சமைக்கக் கத்துக்கிட்டு இருக்கலாம். அல்லது, உதவிக்கு யாரையாவது வச்சுக்கிட்டிருக்கலாம்."

அவன் தன் விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். பத்து விரல்கள். ஆகவே பத்து நகங்கள். அவன், கெஞ்சுவது போலச் சொன்னான்.

"இதுக்கு என்ன வழி? கல்யாணத்துக்குப் பிறகும், நாம் பிரிஞ்சிருக்கிறது சரின்னு எனக்குப் படலை."

"நீங்களே அதுக்கு ஒரு வழி சொல்லுங்களேன்."

"நீங்க ஏன் உங்க வேலையை ராஜினாமா செய்யக் கூடாது?"

பிந்து சிரித்தாள்.

"அது முடியாது."

"ஏன்?"

"அந்த வேலை எனக்குப் பிடிச்சிருக்கு. அதுல, நிறைய சவால் இருக்கு. என் திறமையை வெளிப்படுத்தற வாய்ப்பு நிறைய இருக்கு எனக்கு. இந்த ஊரும், பிடிச்சிருக்கு. என் நண்பர்கள் ரொம்ப அருமையானவர்கள்."

"கணவனை விடவும், ஒரு பெண்ணுக்கு பெரிசு, இருக்கா என்ன?"

ஒரு சத்தம் எழுந்ததை, பிந்து கேட்டாள். தேரின் சத்தம். சங்க காலத் தலைவன், வீடு திரும்பும் தேரின் மணி அசையும் சப்தம்.

பிந்து சொன்னாள்.

"ஒரு பெண்ணுக்குக் கணவன் பெரிசுதான். குடும்பம் பெரிசுதான். எல்லாத்தையும் விட, அவள்தான் அவளுக்கே பெரிசு. தன்னை அழிச்சுக்கிட்டு, அவள் பெறுவதற்கு வேறு எதுவும் இல்லை."

சிபி சொன்னான்.

"இப்படியே பேசிக்கிட்டு இருங்க. அடுத்த நூற்றாண்டுல, பெண்கள், தடி தடியா தனியாத்தான் இருப்பீங்க."

சிபிக்குத் தாடி நீண்டது. இடக்கையில் கிண்ணியும், வலக்கையைத் தூக்கிச் சாபம் கொடுக்கிற விசுவாமித்திரன் மாதிரியும் அவன் தெரிந்தான்.

பிந்து சிரிக்க வேண்டி இருந்தது.




"அந்த ஆளுக்கு 'பழமொழி' பைத்தியம் கொஞ்சம் ஜாஸ்தி..."

"எப்படிச் சொல்றே?"

"தை மாதம் பிறந்த குழந்தைக்கு 'வழி'ன்னு பெயர் வெச்சிருக்கார்னா பார்த்துக்கோயேன்!"

– வெ. ராஜாராமன்



"இந்தச் சினிமாவைப் பார்க்கிறவங்களுக்கு ஒரு பரிசுப் போட்டி அறிவிச்சிருக்காங்க!"

"என்ன போட்டி?"

"இந்தப் படத்திலே வர்ற ஆறு பாடல்களிலேயும் மொத்தம் எத்தனை தமிழ் வார்த்தை கலந்திருக்குன்னு எழுதியனுப்பினா ஒரு வைர நெக்லெஸ் பரிசாம்!"

– கபிஸ்தலம் எஸ். இராஜேந்திரன்

காந்தி தேசம்

"காந்தி தமிழ்நாட்டுக்கு வந்தப்ப இந்த வீட்டுத் திண்ணையில ஒக்காந்து கஞ்சியோ, மோரோ குடிச்சாராம். அதனால அந்த பெரியவருக்கு வீட்டு மேல செண்டிமெண்டா ஒரு டச். அதனால விக்க மாட்டாராம்" என்றான் குமார்.

எத்திராஜ் முதலாளி யோசனையுடன், "பாய்லர அந்த இடத்துலதான் எரக்ட் பண்ணணுமா?"

"ஆமாம் சார். அப்பத்தான் ப்ரொடக்சனுக்கு சூட்டபிளா இருக்கும்னு ப்ளானிங் எஞ்சினியர் உறுதியா சொல்லிட்டாரு."

"சரி வா... நான் பேசிப் பாக்குறேன். சுதந் தரப் போராட்ட தியாகி... முரண்டு பண்ணு வாரு."

பேசிக் கொண்டே இருவரும் அந்தப் பழைய காலத்து ஓட்டு வீட்டை நெருங்கினர்.

பெரியவர் குருமூர்த்தி, திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, கண்ணாடி மூலம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு நடுங்கும் விரல்களால் ராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார்.

"பெரியவரே... வணக்கம்" என்று எத்திராஜ் கூறியதும் மெதுவாகப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"வணக்கம். தம்பி யாருன்னு தெரி யலையே..." என்று கூறிக் கொண்டே பெரியவர் ராட்டை சக்கரத்தைச் சுற்றுவதை நிறுத்தினார்.

எத்திராஜும், குமாரும் எதிர் திண்ணையில் அமர்ந்தனர்.

"ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. கடவுள் புண்ணியத்துல ஒம்பது கோடி ரூபாய்க்கு சொத்து வச்சிருக்கேன். ஒரு ஃபேக்டரி ஆரம் பிக்கலாம்னு இருக்கேன். நான் மட்டும் சம் பாதிக்க உபயோகம் இல்ல. கூட நாலு பேரு வாழணும். இந்தக் கிராமத்துல விவசாயம் நொடிச்சுப் போயி ஜனங்க கஷ்டப்படறாங்க. இங்க ஃபேக்டரி ஆரம்பிச்சா இந்த ஜனங்களுக்கு வேலை கிடைக்கும்."

பெரியவருக்கு சட்டென்று விஷயம் புரிந்தது.

"தம்பி, சுத்தி வளைக்க வேணாம். ஏற்கனவே ஒங்க ஆளுங்க வந்து பேசி யாச்சு. முடியாதுன்னு சொல்லிட்டேன்" என்றார் பெரியவர்.



"பெரியவரே... காந்தின்னா எனக்கும் உசுருதான். என் பையனுக்குக் கூட செல்வ காந்தின்னுதான் பேர் வச்சருக்கேன்" என்று எத்திராஜ் கூறியபொழுது குமார் தன் முதலாளியின் பொய்யை நினைத்து வியந் தான். எத்திராஜ் தொடர்ந்து பேசினார்.

"காந்தி ஒக்காந்த திண்ணைன்னா மதிப்பு தான். காந்தி எதுக்குப் பாடுபட்டாரு? இந்தக் கிராமத்து ஜனங்க முன்னேறணும்னுதானே... அவரே உயிரோட இருந்தா ஒங்கள்ட்ட விட்ட விக்க சொல்லிடுவாரு."

"சும்மா அளக்காதே தம்பி... இந்த மாதிரி ரூரல் ஏரியாவுல ஃபேக்டரி ஆரம்பிச்சா பத்து வருஷம் வரைக்கும் டெஃபரல் ஸ்கீம்ல சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டியதில்ல. எனக்குத் தெரியும்! எனக்கு விக்கறதா எண்ணம் இல்லை. மொதல்ல இடத்தைக் காலி பண்ணு."

பெரியவர் விவரம் தெரிந்தவர் என்று எத்திராஜுக்கு உறைத்தது.

"இந்தக் கிராமத்துல இந்த பழைய வீடு



மிஞ்சிப் போனா பத்தாயிரத்துக்கு மேல போகாது. நான் ரெண்டு லட்சம் தரேன். பக்கத்துல வேணும்னா கொஞ்சம் தள்ளி ஒரு காந்தி சிலை வச்சிடலாம்."

"இங்க பாரு தம்பி. இதுக்கு விலையே கெடையாது. மேற்கொண்டு என்கிட்ட பேசிப் பிரயோஜனம் இல்லை."

பேச்சு சத்தம் கேட்டு, உள்ளேயிருந்த பெரியவரின் பேத்தி சுமதி வாசலுக்கு வந்து அவர்கள் பேசுவதைக் கவனித்தாள். எத்திராஜ் சுமதியை ஒருமுறை பார்த்துவிட்டு பேசினார்.

"இங்க பாரு... என் பலம் ஒனக்குத் தெரியாது. ஏதோ தியாகின்னு மரியாதையா பேசிக்கிட்டிருக்கேன். இல்லைன்னா நாலு ஆள வச்சு எல்லாத்தையும் தூக்கிக் கடாசிடுவேன்."

"இந்த மெரட்ற வேலையெல்லாம் வேணாம் தம்பி. ஒன்னப் பாத்தா நாப்பது வயசு மாதிரி தோணுது. சுதந்திர தேசத்துல பொறந்துருப்ப. காந்திங்கற மனுசன் இல்லன்னா அடிமை தேசத்துல பொறந்து நீ லோல்பட்டிருப்பே."

"அட போய்யா... உபதேசம் பண்ணிக்கிட்டு! அஞ்சு லட்சம் தர்றேன். என்ன சொல்றே?" என்றார் எத்திராஜ் கோபமாக.

"ஒன்கிட்ட இருக்குற ஒம்பது கோடிய கொடுத்தாலும், விக்க மாட்டேன். எடத்த காலி பண்ணு" என்றார் பெரியவர் கண்டிப்பாக.

எத்திராஜ் மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் எழுந்து நின்றார். சில நொடிகள் அமைதியாக நின்றுவிட்டு, "கல்யாணம் ஆவாத பேத்தி துணைக்கு வந்து இருக்கு. அகிம்சைல பேசிப் பாத்தேன். சரி வரலை. பசங்ககிட்ட ஒரு வார்த்தைச் சொன்னாப் போதும். சின்னப் பொண்ணை சீரழிச்சிடுவாங்க. ஜாக்கிரதை. ஒரு வாரம் டயம் தர்றேன். சீக்கிரம் முடிவு பண்ணு" என்று எத்திராஜ் கூறியதும் பெரியவர் ஆக்ரோஷமானார்.

"பொறுக்கி நாய்ங்களா... மிரட்டி பாக்குறீங்களா?" என்று கத்திக் கொண்டே அருகில் நூல் சுற்றியிருந்த டப்பாவை தூக்கி எத்திராஜின் மேல் விட்டெறிந்தார்.

எத்திராஜும், குமாரும் ஒன்றும் பேசாமல் நகர்ந்தனர்.

சுமதி பயத்துடன், "ஏன் தாத்தா இவ்வளவு பிடிவாதமா இருக்கீங்க?" என்றாள்.

"ஒனக்கு இது மதிப்பு தெரியாது புள்ள. காந்தி இருக்காரே..." என்று காந்தியின் பெயரைக் கூறும்பொழுதே பெரியவரின் கண்கள்

போட்டிக் கதை - 8

ஜி.ஆர். சுரேந்தரநாத்

மின்னியது. "அவரு பெரிய மகான்மா. காந்தி கூட சேர்ந்து அவ்வளவு தலைவர்கள் போராடினாங்களே? யாராச்சும் காந்தி மாதிரி சட்டை போடாம வேட்டி கட்டிக்கிட்டு திரிஞ்சாங்களா? ஆசிரமத்துல வாழ்ந்தாங்களா? லெனின், ஹோசிமின், நெல்சன் மண்டேலான்னு யார எடுத்துக்கிட்டாலும் உலகத்துல மக்கள் போராட்டத்துக்கு தலைமையேத்து நடத்தின எல்லாத் தலைவர்களும் பின்னாடி அதுக்கான பதவி சுகத்த அனுபவிச்சிருப்பாங்க. ஆனால் காந்தி ஒண்ணுத்துக்கும் ஆசைப்படலை. அப்பேற்பட்ட மகாத்மா ஒக்காந்த திண்ணை இது. இந்த இடத்துலதான் ஒக்காந்திருந்தாரு" என்ற பெரியவருக்கு மூச்சு வாங்கியது.

பாசத்துடன், மெதுவாக அந்த இடத்தைத் தடவிக் கொடுத்தார். பிறகு, "இந்தப் பசங்க மிரட்டறானுங்க. நான் எதுக்கும் போலீஸ் ஸ்டேஷன் போயி ஒரு புகார் கொடுத்துட்டு வர்றேன்" என்று கூறிவிட்டு பெரியவர் எழுந்தார்.

அந்த ஞாயிற்றுக் கிழமை, வெயிலில் நான்கு மணி நேரம் காத்திருந்த பிறகு மாவட்டக் கலெக்டரை அவரது வீட்டில் சந்தித்தார். கலெக்டர், பெரியவர் சொல்வதை பொறுமையாகக் கேட்டார். பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களும் பெரியவர் சொன்னதை விளையாட்டை நிறுத்திவிட்டு உன்னிப்பாகக் கவனித்தனர்.

"என் பேத்திக்கு பாதுகாப்பு வேணும்னு கேட்டா, போலீஸ்காரங்க பெரிய இந்திரா காந்தி பேத்தி, பாதுகாப்பு வேணுமான்னு கிண்டல் பண்ணி சிரிக்கிறாங்க. ஒண்ணும் நடவடிக்கையே எடுக்கலை" என்று கூறி முடித்தார் பெரியவர்.

"சரி... நான் பாத்துக்கறேன். போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு பண்றேன். ஆனால் கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க. பெரிய இடம்"

மறுநாள் இரண்டு போலீசார் காவலுக்கு வந்தனர்.

எத்திராஜ் வேறு வழிகளில் இறங்கினார். ஊர்ப் பெரியவர்கள் வந்து பேசிப் பார்த்தனர். இரண்டு மருமகன்களும் வந்து பேசியும் பெரியவர் பிடிவாதமாக இருந்தார். மூத்த பெண் பேத்தியை அழைத்துக் கொண்டு சென்று விட்டாள்.

துணைக்கு ஆளின்றி பெரியவர் தவித்தார். மிலிட்டரியில் இருக்கும் பேரனை வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தார். அவனுக்கு பெரியவர் மீது மிகவும் பிரியம்.

யோசனையோடு திண்ணையில் அமர்ந்திருந்த பெரியவர், ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டுத் திரும்பினார். ஜீப்பிலிருந்து மூன்று பேர் இறங்கினர். அவர்களுக்குள் பேசிக் கொண்டு, டேப்பை வைத்து அளந்து கொண்டே பெரியவரின் வீட்டை நெருங்கினர். பெரியவர் எழுந்து அவர்களை நோக்கிச் சென்றார்.

"யாரு நீங்கள்லாம்?" என்றார்.

"பி.டபிள்யூ.டி" என்றவரிடம், இன்னொருவர்,

"வீடு அடிபடுமா?" என்றார்.

"முக்கால்வாசி வீடு அடிபடும்."

பெரியவருக்குப் பதறியது. ஏதோ சதி நடக்கிறது என்று புரிந்தது.

"அய்யா.. என்ன சொல்றீங்க நீங்க?"

"பெரியவரே... தவுத்தாகுடிக்கு ரோடு போடறதா இருக்கோம். இந்த வழியாத்தான் போடணும்."

"அய்யா வீடு என்னுது."

"அது யாரோ ஏமாத்தியிருக்காங்க. இது பொறம்போக்கு இடம்."

"சுதந்திரத்துக்கு முன்னாடியே வாங்குன வீடுய்யா இது. யாரும் எதுவும் சொன்னதில்லை."

"அதுக்கு அவசியம் வரலை. இப்பத்தானே ரோடு போடறதா பிளானு. ரிஜிஸ்ட்ரேசன் டிபார்ட்மெண்ட்ல வெரிஃபை பண்ணியாச்சு. யாரோ உங்கள ஏமாத்தி வித்துருக்காங்க."

"அய்யா... ஏதோ சதி பண்றீங்க. அநியாயமா ஒரு கெழவனை ஏமாத்தாதீங்க."

"ஒங்கள ஏமாத்தி எங்களுக்கு என்ன ஆகப் போவுது? இன்னும் ரெண்டு நாள்ல நோட்டீஸ் வரும். ஒரு வாரத்துக்குள்ள காலி பண்ணிடணும். இல்லன்னா நாங்களே இடிச்சுடுவோம்" என்று கூறிவிட்டு ஜீப்பில் ஏறினர்.

பெரியவர் அதிர்ந்து போய் நின்று கொண்டிருந்தார்.


மூவரில் ஒருவன் ஜீப் டிரைவரிடம் கண்களைக் காட்ட, அவன் பெரியவரை நோக்கி வந்தான்.

"பெரியவரே... எத்திராஜு பெரிய இடம்.

"நேற்று வரைக்கும் சாப்பாட்டுக்கே கஷ்டப் பட்டுக்கிட்டிருந்த ஆளு. அரசியல்ல குதிச்சு ஆறே மாசத்துல கார், பங்களான்னு அனுபவிக்கிறாரு."

"அவசரப்பட்டு பேசாதீங்க... சீக்கிரமே கேஸ், கோர்ட், ஜெயில்...னு அனுபவிச்சாலும் அனுபவிப்பாரு!"

– சீர்காழி வி. ரேவதி



பி.டபிள்யூ.டி. ஹைவேஸ், ரிஜிஸ்ட்ரேசன்னு எல்லா டிபார்ட்மென்டையும் வெலைக்கு வாங்கிட்டாரு. பொறம்போக்கு நெலம்தான்னு நிரூபிக்கிற மாதிரி போலி பத்திரம்லலாம் ரெடியாயிடுச்சு. அடுத்த வாரம் இடிச்சுடு வோம். பேசாம நல்ல வெலைக்கு வித்துடு."

"இடிச்சா ரோடு போட வேணாமா?" என்றார் பெரியவர்.

"கிழிச்சாங்க. இடிச்ச பெறகு ஃபண்டு இல்லன்னு வேலைய நிறுத்திடுவாங்க. கொஞ்ச நாள் கழிச்சு எத்திராஜுவுக்கே வித்துடுவாங்க. அதுக்கு நீயே வித்துடலாம்."

பெரியவருக்கு இப்படியெல்லாம் கூட நடக்குமா? என்று நெஞ்சு பதறியது.

மறுநாளே பெரியவர் சென்னை சென்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பேப்பரில் நிருபராக பணிபுரியும் தனது நண்பரின் பேரனிடம் விஷயத்தைக் கூறினார். அடுத்த நாள் "வார் ஆஃப் எ ஃப்ரீடம் ஃபைட்டர்" என்ற தலைப்பில் பெரிய செய்திக் கட்டுரை வந்தது. அதற்கு நல்ல பலன் இருந்தது. என்ன நடந்தது என்று தெரியவில்லை. நோட்டீஸ் ஒன்றும் வர வில்லை. சில அரசியல் கட்சித் தலைவர்கள் வந்து ஆதரவு தெரிவித்துவிட்டுச் சென்றனர். மிலிட்டரியில் இருக்கும் பேரனும் லீவிற்கு வர, பெரியவர் உற்சாகமானார். பேரன் தாத்தா விற்கு முழு ஆதரவு தெரிவித்தான். இது சம் பந்தமாக நிறைய பேரைச் சென்று சந்தித்தான். சில நாட்கள் எந்த தொந்தரவுமின்றி பெரிய வருக்கு நிம்மதியாக இருந்தது.

திண்ணையில் அமர்ந்திருந்த பெரிய வருக்கு அருகில் கையில் கத்தையாக பேப்பர் களுடன் பேரன் குமரேசன் வந்து அமர்ந்தான்.

"என்னடா கையில பேப்பரு?" என்றார் பெரியவர்.

"நேத்து கப்புணி வாத்தியாரைப் பாத்தேன். நீ இருக்கற வரைக்கும் பரவாயில்ல. அதுக்குப் பிறகு பிரச்னை வந்தாலும் வரும். எதுக்கும் சி.எம்.க்கு ஒரு பெட்டிசன் குடுன்னு அவரே எழுதி தந்தாரு. நீங்க, இதுல கையெழுத்துப் போடுங்க" என்று பேப்பர்களை அருகில் வைத் தான்.

"சரி... நீ உள்ள போய் என் கண்ணாடிய எடுத்துட்டு வா" என்று பெரியவர் கூறியதும் குமரேசன் எழுந்து உள்ளே சென்றான்.

சில நொடிகளில் ஏதோ விழும் சத்தம் கேட்க, பெரியவர் உள்ளே எட்டிப் பார்த்தார். குமரேசன் கீழே விழுந்து கிடந்தான். பெரிய வர் பதறிப் போய் எழுந்து ஓடினார். "என் னடா ஆச்சு?" என்றார். "மூட்டைத் தடுக்கி விழுந்துட்டேன். ஒன்னும் அடி இல்ல" என்று கூறிக் கொண்டே குமரேசன் எழுந்தான். தூரத்



"எங்கு பார்த்தாலும் வெள்ளம், இப்போது பார்த்து, நம்ம கட்சி தலைவர் வறட்சி நிவாரண நிதி திரட்டறாரே!"

"இது தலைவரின் குடும்பத்தில் ஏற்பட்டு இருக்கும் பண வறட்சியைத் தீர்க்கத் திரட்டப் படும் நிதியாம்!"

– வி.சி.கிருஷ்ணரத்தினம்

தில் விழுந்து கிடந்த கண்ணாடியை எடுத் தான்.

"அய்யய்யோ... கண்ணாடி ஒடஞ்சிடுச்சு தாத்தா" என்றான்.

"பரவால்ல விடு. வேற மாத்திக்கலாம்" என்று கூறிய பெரியவர் வெளியே வந்தார்.

கையெழுத்து போடுவதற்காக பேனாவை நீட்டினான் குமரேசன். "கண்ணாடி இல்லாம ஒரு எழுத்தும் தெரியாது. எந்தெந்த இடத்துல கையெழுத்து போடணும்னு கை வச்சு காமி. நான் போட்டுடறேன்" என்ற பெரியவர் குமரேசன் சொன்ன இடங்களில் கையெழுத்து போட்டார்.

மறுநாள் காலை. திண்ணையில் ராட்டை சுற்றிக் கொண்டிருந்த பெரியவர், ஏதோ சள சளவென்று பேச்சுச் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். ஒரு வேனிலிருந்து கடப்பாறை, மண்வெட்டி, சட்டியுடன் நிறைய பேர் இறங்கினர். பெரியவருக்கு பகீரென்றது. "டேய் குமரேசா... இங்க வாடா" என்று கத்தினார்.

வெளியே வந்து பார்த்த குமரேசன் பதற்ற மடையவில்லை. அவர்களை நோக்கி கையைக் காட்டிவிட்டு,

"எத்திராஜு பத்து லட்சம் தந்தாரு. நான் ஆயுசு பூரா பார்டர்ல நின்னாலும் அந்த காச சம்பாதிக்க முடியாது. நம்ப நிம்மதியா பக்கத்து டவுன்ல..." என்ற குமரேசனை மேற்கொண்டு பேச விடாமல் பெரியவர் அவன் சட்டையை பிடித்து உலுக்கினார். கண்களில் கண்ணீரு டன், "இப்படி பண்ணிட்டியேடா பாவி? கண் ணாடிய ஒடச்சு ஏமாத்திட்டியே" என்ற பெரி யவர் மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் தூணைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் அமர்ந்தார்.

சில நிமிடங்கள் கழித்து குமரேசன் பெரியவரை அழைத்தபொழுது, அவர் இறந்து விட்டிருந்தார்.

✉ உலகம் மொத்தமும் 'ஜெய சூர்யா'ன்னு சொல்லிக்கிட்டிருக்கும்போது, அவர் மிகவும் தன்னடக்கமாக இருப்பது வியப்பு.

நல்லத்துக்குடி, கே.பி. சூர்யா.

✉ ஜெயசூர்யாவின் சிறப்புப் பேட்டியும், 'ஸ்டிரைக்கை மீறி வெளியாகும் படங்கள்' பற்றிய சினிமாக் கட்டுரையும் தீபாவளிக்குக் கிடைத்த விருந்து எனலாம்!

பு. புளியம்பட்டி, அ. கிருஷ்ணகுமார்.

✉ 'ரட்சகன்' நாயகிக்கு இனி 'பொற்காலம்'தானோ? அட்டைப்படம் 'ஆஹா' போட வைத்தது!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

18 வாரங்களில் ஒரு மௌனப் புரட்சி!

✉ கல்கிக்கே உரித்தான முத்திரை வாசகங்களோடு பர்கூர் தொகுதியின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் வாசகர்களை அழைத்துச் சென்று, அந்தத் தொகுதியின் உண்மை நிலையைக் கட்டுரை உணரச் செய்தது.... ''யாரு வந்தா என்னங்க... நாம உழச்சாத்தான் நமக்குக் கஞ்சி'' என்று மனம் வெதும்பும் கதிரிகானின் உள்ளக்கிடக்கையில்தான் எத்தனை எதார்த்தம்?!

புதுக்கோட்டை - 11, எம். பாலசுப்பிரமணியன்.

✉ உ.பி.யில் நடக்கும் விளையாட்டுத்தனமான அரசியல் விளைவுகளை அபாரமாகக் கருத்துப்படமாகவும், தலையங்கமாகவும் தீட்டியிருந்தீர்கள். மக்களைச் சந்தித்து தீர்ப்பு பெறுவதே சாலச்சிறந்தது என்ற கருத்து வரவேற்கத்தக்கது. நியாயமானது!

கோவை - 14, ஏ.எஸ். இராமசாமி.

✉ தாமரை எழுதிய ஒன்... டூ... த்ரீ.. கதைகள் மூன்றும் ரசனைக்குகந்தவைகளாய் வடிவமைப்பு பெற்றிருந்தன.

வலையபட்டி, என். இராமச்சந்திரன்.

✉ உணர்வுகள் உறவுகள் தொடர் அருமை. நம் உணர்வுகளை நாம் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு. 'பயம்' என்பது இந்த வாரம் எடுத்து கொண்ட உணர்வு என்பதால் அப்படி ஒரு படத்தைப் பிரசுரித்து பயங்காட்ட வேண்டுமா?

தூத்துக்குடி - 2, கே. சுதர்சன்.

✉ கன்னியராகி நிலவினில் ஆடி... தொடர் மிக அருமையாக காலத்திற்கேற்றபடி இருந்தது. சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திய நர்மதாவின் கதாபாத்திரம் அருமை!

சென்னை - 12, இராம. மகேஸ்வரன்.

✉ வையவனின் படைப்புக்கு ஸ்யாம் வரைந்திட்ட ஓவியங்கள் பனித் துளி பூத்த ரோஜாக்கள் போல வெகு அழகு!

வேலூர் - 4, திருமலை நாயகன்.

✉ சுற்றுச் சூழல் சிந்தனையை மையமாக வைத்து எழுதப்பட்ட 'கன்னியராகி நிலவினில் ஆடி' கதையில், நர்மதா நம் எண்ணத்தில் மிக உயர்ந்து நிற்கிறார். 18 வாரங்கள் போனதே தெரியவில்லை.

நாட்டறம்பள்ளி, பாலு.

✉ பாரதியின் அழகான, ஆழமான கவிதை வரிகளைத் தலைப்பாக்கி, நம் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதையும், நம் இயற்கை வளங்கள் கொள்ளை போவதையும் அமைதியாக, அழகாக விளக்கியிருக்கிறார் வையவன். கதையில் காதல் இருந்தது! ஆனால் அதில் கவர்ச்சியில்லை! மாறாக கண்ணியமிருந்தது; மனதைத் தொட்டது. நட்புக்கு சாதி பேதம் கிடையாது என்பதை, நர்மதா – மீனாட்சியின் நட்பு விவரித்தது. பதினெட்டு வாரங்களில் ஒரு மௌனப்புரட்சி!

சென்னை - 41, ந. வந்தியக்குமாரன்.

நான் வில்லன் அல்ல! 14

• ஸ்ரீதர்

இப்ப சமீபத்தில் நம்ம நாட்டு விடுதலைப் பொன் விழா கொண்டாட்டங்கள் நடந்தப்ப ஒரு நாள் காலையில வழக்கம் போல நாலேகால் மணிக்கு நான் மெரினா பீச்சில் வாக்கிங் போயிகிட்டிருந்தேன்.

ரெண்டு மூணு பொம்பளைங்க அந்த அதிகாலை நேரத்தில என்னை அடையாளம் கண்டு பிடிச்சுட்டாங்க. சித்தூர்ல இருந்து வந்தவங்களாம் அவங்க.

"என்ன ஸார்... எங்களை ஞாபகமில்லியா?"

"இல்லியேம்மா."

"இன்னா ஸார். அன்னிக்குக் கூட டி.வி. யில இருந்து எங்களைப் பாத்தீங்களே...!

சரி... இவங்க டி.வி.யில ஏதோ படம் பாத்திருக்காங்க. நான் காமிராவைப் பார்த்து பேசினப்போ ஏதோ இவங்களைப் பாத்த மாதிரி நினைச்சிட்டாங்கன்னு நினைச்சேன்.

"எம்.ஜி.ஆர்கிட்ட நல்லா அடிபட்டீங்க ஸார்... ஆனா அவர் பாவம் போயிட்டாரு..." அப்படீன்னு ஒரு அம்மா சொன்னாங்க.

"ஏம்மா... நான் அடிச்சா அவரு போனாரு?"ன்னு சும்மா அவங்க வாயைக் கிண்டினேன்.

"ஐயோ, அப்படிச் சொல்லாதீங்க!"

"அவர் போயிட்டாரு. சீக்கிரம் நானும் போயிடுவேன்!"

"ஐயையோ... நீங்க போகக் கூடாது... உங்களை எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். நீங்க ரொம்ப காலத்துக்கு நல்லா இருக்கணும்..."

"என்னிக்காவது போய்த் தானே ஆவணும்? இங்கே நான் எம்.ஜி.ஆரோட சண்டை போட்டப்ப அவரு என்னை ஜெயிச்சுட்டாரு. நீங்க வேணும்னா பாருங்க.. நான் அங்க போயும் அவருகிட்ட சண்டை போடப் போறேன்..."

"உங்களால அங்கேயும் அவரை ஜெயிக்க முடியாது ஸார்..."

நான் அசந்து போனேன். எம்.ஜி.ஆர். போய் எத்தினி வருஷம் ஆவுது! இன்னிக்கும் ஜனங்க அவர்மேல வச்சிருக்கிற நம்பிக்கை, பாசத்தைப் பாத்தீங்களா! ஜனங்க மட்டும்தானா? அரசியல் வாதிங்க?

அதுதான் எம்.ஜி.ஆர்.

டைரக்டர்கள்னு எடுத்துகிட்டா எனக்கு அநேகமா எல்லா டைரக்டர்களையுமே தெரியும். எல்லாரைப் பத்தியும் சொல்றதா இருந்தா அது வளர்ந்துகிட்டே போவும். அதனால சில பேரை மட்டும் குறிப்பிட்டுச் சொல்றேன். மத்தவங்க கோபப்படமாட்டாங்கன்னு நம்பறேன்.

சின்னப்பாதேவரைப் பத்தி நான் ஏற்கனவே கொஞ்சம் சொல்லியிருக்கேன். அறுபது ரூபா சம்பளத்தில் இருந்து, ஜூபிடர் பிக்சர்ஸ் மெட்ராஸுக்கு மாத்தி வந்தப்போ தொண்ணூறு ரூபா சம்பளம் வாங்கினவர். ஆனா தொண்ணூறு ரூபாயில காலம் தள்ள முடியாதுன்னு அவர் மெட்ராஸுக்கு வரல்லே.

ஆனா அப்புறமா அவரு அங்கே இங்கேன்னு ஐயாயிரம் ரூபா புரட்டிப் போட்டு எஸ்.ஏ. நடராஜன், கேமிரா விஜயம் இவங்க



ரெண்டு பேரோட கூட்டு சேர்ந்து ஒரு சினிமா கம்பெனி ஆரம்பிச்சாரு. மூணு பேரும் பார்ட்னர்ஸ். இவங்கல்ல நடராஜனும், விஜயமும் கொஞ்சம் ஜாலி டைப். அது தேவருக்கு ஒத்து வரல்ல. 'ஆளை விட்டா போதும்'னு தன் பங்கு ஐயாயிரம் ரூபாயை வாங்கி மெட்ராஸுக்கு வந்து தனியா ஆரம்பிச்சாரு. ரொம்ப சாதாரணமா ஆரம்பிச்சவரு, பின்னாடி பெரிய பட அதிபரா- மத்தவங்க எல்லாரும் மூக்குமேல விரல் வைக்கிற அளவுக்குப் பிரமாதமா வந்தாரு. அவருகிட்ட ஒரு கெட்ட குணம் என்னன்னா, யாருக்குமே அட்வான்ஸ்'னு காலணா கொடுக்க மாட்டாரு. அட்வான்ஸ் இல்லாம எப்படி வொர்க் பண்றதுன்னு யாருமே முகம் சுளிக்கறதுமில்ல. என்

தேன்நிலவு படத்துக்காக அவரு எங்களை யெல்லாம் கூட்டிகிட்டு காஷ்மீர் போனாரு. ஒரு பெரிய கும்பல். குடும்பத்தோட. நான் என் மனைவியோட போயிருந்தேன். மொத்த பேரும் ஒரே குடும்பமா பழகினோம். ஷூட்டிங் இல்லாத சமயங்கள்ல ஸ்ரீதர் சும்மா இருக்க மாட்டார். 'வாங்க'ன்னு எல்லாரையும் அழைச்சிகிட்டு இயற்கை காட்சிகளைக் காட்ட போயிடுவார். பணச் செலவைப் பத்தி கவலையே படாம, யூனிட்ல எல்லாம் சந்தோஷமா இருக்கணும்னு அவரு எங்களை ட்ரீட் பண்ண முறை இருக்கே, என் ஜென்மத்துக்கும் மறக்காது.

காஷ்மீர் குளிர்லேயும் என் வழக்கப்படி நான் அதிகாலையில எழுந்திடுவேன். எல்லாம் தூங்கிகிட்டிருப்பாங்க. யாரையும் எழுப்ப முடியாது. எழுப்பினா நான்தான் வாங்கிக் கட்டிக்கணும். சித்ராலயா கோபு, 'அண்ணே, கண்ணைத் திறந்துட்டேண்ணே. ஆனா எழுந்திருக்கதான் முடியல்ல'ன்னு பரிதாபமா கெஞ்சுவார்.

டணால் தங்கவேலு கதையே தனி. பத்து மணிக்கு மேல தேவதை கன்னாம் புடைசூழ அவர் ரொம்ப நேரம் 'சைனீஸ் செக்கர்' விளையாடுவார். இவர் ஆட்டமெல்லாம்



எம்.என். நம்பியார்

தெரியுமா? அட்வான்ஸ் தரதுக்கு பதிலா மொத்த சம்பளத்தையும் ஒரே தவணையில ஆரம்பத்திலேயே குடுத்துடுவாரு. இந்த மாதிரி ஒரு புரொட்யூஸர் இதுவரைக்கும் சினிமா உலகத்தில இருந்ததில்லை. இனிமே இருக்கப் போறதும் இல்ல. என்னைக்கேட்டா இது ஒரு கின்னஸ் ரிகார்ட். அவரு பேரு கின்னஸ்ல போவணும்.

டைரக்டர் ஸ்ரீதர். அவரு காலகட்டத்தில் அவரு டைரக்டர்கள்ல ஒரு ஹீரோ போல வாழ்ந்தார். அதுக்கான எல்லாத் தகுதியும் அவருக்கு இருந்தது. அவரு கொடுத்த எல்லா கதைகளையுமே ஜனங்க ஏத்துகிட்டாங்க. அவரோட படைப்புகள் அமோகமா ஓடி ரொம்பப் பெரிய ஆளாயிட்டாரு. அவரோட பல ஆசைகளும் நிறைவேறிச்சு.

முடிய காலையில மூணு நாலு மணி ஆயிடும்னு வைச்சுக்குங்களேன். அப்பவாவது தூங்கப் போவார்னு நினைக்கிறீங்க? அந்த நேரத்தில கம்பெனி சமையல்காரனை எழுப்பி உப்புமா கிண்டித்தரச் சொல்லி சாப்பிட்டுட்டு காலை ஆறு மணிக்குதான் தூங்கப் போவார். அப்புறம் எங்க எழுந்திருக்கிறது? எல்லாரும் தூங்குவாங்க. ஸ்ரீதர், வாங்கண்ணே எதையாவது எடுக்கலாம்னு காமிராமேனை அழைச்சுகிட்டு பக்கத்தில் எங்கேயாவது நல்ல லொகேஷனுக்குப் போயி படத்துக்குத் தேவையிருக்கோ இல்லையோ- என்னை அப்படியும் இப்படியுமா நாலு குளோஸ்-அப் ஷாட்ஸ் எடுத்து அனுப்புவார். மத்தவங்க எழுந்தப்புறம் படத்தோட வேலைகள் தொடங்கும். ரெண்டு மாசம் இப்படி எங்களையெல்லாம் எந்தப் பிரச்னையும் இல்லாம காஷ்மீரத்து அழகை

அனுபவிக்க வச்சார். நான் ரொம்ப நேசிக்கிற ஒரு டைரக்டர் ஸ்ரீதர். அவர் வாழ்க!

இன்னொரு டைரக்டர் கே. சங்கர். நூத்துக் கணக்கான படங்கள் எடுத்தவர். முன்னணி நடிகர்களையெல்லாம் தன் படங்கள்ல நடிக்க வச்சார். இவர்கிட்ட ஹீரோவா பண்ணாத பிரபல கலைஞர்களே இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன். சங்கர்கிட்ட எனக்கு ரொம்பவும் பிடிச்ச குணம் என்னன்னா, அவரு அட்ஜஸ்ட் பண்ணிக்கிற விதம். நமக்கு வேற வேலை இருக்கும். நாலு நாள் கால்ஷீட் வாங்கி வச்சிருப்பார். நம்ம பிரச்னையைச் சொன்னா உடனே ஏதேதோ கணக்குப் போடுவார். காட்சிகளை வேற விதமா 'கம்பைன்' பண்ணி நம்ம வேலையை அந்த ஷெட்யூல்ல ஒன்றரை நாளை முடிச்சிட்டு, மீதி இரண்டரை நாள்ல நமக்கிட்டவே திருப்பிக் கொடுத்திடுவார். இப்படி ஆர்ட்டிஸ்ட்டுகளுக்கு அனுசரணையா இருக்கிற டைரக்டர்கிட்ட நமக்கு எப்படி மதிப்பு வராம போகும்?

ஒரு நாள் கோடம்பாக்கத்தில் ஒரு ஷூட்டிங் முடிச்சிட்டு போற வழியில டைரக்டர் சங்கர் வீட்டுப் பக்கம் போனேன். வாசப்படியில கடவுள் வேஷம் போட்டுகிட்டு நாலைஞ்சு பேர் நின்னுகிட்டிருந்தாங்க.

"என்னப்பா? என்ன படம்? என்ன ஷூட்டிங்'னு நான் அவங்ககிட்ட கேட்டேன்.

ஒருத்தர் பிரம்மா வேஷம் போட்டிருந்தார். இன்னொருத்தர் மகாவிஷ்ணு வேஷம். அதே போல சிவன் வேஷத்தில ஒருத்தர்.

'ஷூட்டிங் எதுவும் இல்லீங்க. நாங்க சான்ஸ் கேட்க வந்திருக்கோம்'னு சொன்னார் பிரம்மா வேஷத்தில் இருந்தவர்.

'சரி... அதுக்கு சாதாரணமா வந்து கேக்கலாமே, எதுக்கு பிரம்மா போல மேக்கப் போட்டு வரணும்?"

'அட, நீங்க ஒண்ணு- இது மேக்கப் இல்லீங்க, நான் சாட்சாத் பிரம்மாதான். அதோ விஷ்ணு, சிவன். பின்ன என்னங்க, இந்த சங்கர் எப்ப பாத்தாலும் முருகன், அய்யப்பன் இவங்களை வச்சே படம் எடுக்கிறார். அவங்கல்லாம் ஜூனியர்ஸ். நாங்க சீனியர்ஸ். எங்களை வச்சு படம் எடுக்கணுமா வேணாமா. அதான் கேக்க வந்திருக்கோம்."

நான் நேரா உள்ளே போய் சங்கர் ரூம்ல 'என்னய்யா இதெல்லாம்?'னேன்.

'என்ன'ன்னாரு.

'இவங்கள்லாம் யாரு?'

'எவங்கள்லாம்!'

வெளியே வந்து பார்த்தோம். யாரையும் அங்கே காணோம்.



இது சும்மா என் கற்பனைதான். அப்படி 'கடவுளே வந்து சான்ஸ் கேட்கிற அளவுக்கு பிரமாதமா பக்திப் படங்கள் எடுத்து சக்ஸஸாயி காஞ்சிப் பெரியவர்கிட்ட 'இறையருள் இயக்குனர்'னு பட்டம் வாங்கியவர் சங்கர்னு சொல்ல வந்தேன்.

பல்லாண்டு வாழ்க படம் எடுத்துக்கிட்டு இருந்தப்போ ஒரு தடவை ஷூட்டிங் நடுவில டயம் கெடச்சா கலசாபுரத்தில இருந்து மூகாம்பிகை கோயிலுக்குப் போகலாம்னு பிளான் பண்ணி அதுக்காக காரையும் கூடவே கொண்டு போயிருந்தேன். டைரக்டர் சங்கர்கிட்ட 'என்னை என்னிக்கி விட முடியுமோ அன்னிக்குச் சொல்லுங்க. நான் கோயிலுக்குப் போயிட்டு வந்துடறேன்'னு கேட்டேன். வழக்கம்போல அவர் கணக்குப் போட்டுப் பாத்துட்டு, நடுவில ஒரு நாலு நாள் உங்களுக்கு வேலை இல்ல சாமி. அப்ப போயிட்டு வந்துடுங்க'ன்னு சொன்னார். அப்ப எம்.ஜி.ஆரும் அங்க இருந்ததால 'சரி... அவர்கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிடலாம்னு' நினைச்சு நான் கோயிலுக்குப் போக இருக்கறதைச் சொன்னேன்.

'வேலை நடுவில போறீங்களே'ன்னு எம்.ஜி.ஆர். கேட்டார். 'எனக்கு வேலைதான் கடவுள். வேலை இருந்தா அதுக்கப்புறம்தான் மத்த எதுவும். எனக்கு நாலு நாள் வேலை இல்லேன்னு டைரக்டர் சொன்னாரு. அதனாலதான் போறேன்'னு நான் சொன்னதும் 'அவரை நீங்க நல்லா கெடுத்து வச்சிருக்கீங்க'ன்னார் எம்.ஜி.ஆர். எனக்கு ஒண்ணும் புரியல்ல.

"நான் என்ன அவரைக் கெடுத்து வச்சேன்"னு கேட்டேன்.

"மத்தியானம் சாப்பாடு போட்டு கெடுத்து வச்சிருக்கீங்க."

"இதென்ன வம்பு? அவரு வெஜிடேரியன். அதனால என் கூட சேர்ந்து சாப்பிடுவார்."– இது நான்.

"அவர் எப்ப வெஜிடேரியனா மாறினார்? சங்கர் நல்ல மனுஷனா ஒழுங்கா கறிமீன் தின்னுக்கிட்டிருந்தார். உங்க கூட சேர்ந்தப்புறம் தான் இப்ப புல் பூண்டுக்கு மாறிட்டார்."

இப்படி எம்.ஜி.ஆர். சொன்னதும், 'அப்ப வெஜிடேரியன்ஸ் எல்லாம் கெட்ட மனுஷங்கன்னு சொல்றீங்களா?'ன்னு நான் கேட்டேன்.

"சரி... சரி...நீங்க போயிட்டு வாங்க."

அதே எம்.ஜி.ஆர்.தான் மீனவ நண்பன் படத்தில் நடிச்சிகிட்டு இருந்தப்ப 'மூகாம்பிகை கோவிலுக்கு எப்படி போறது?'ன்னு என்னைக் கேட்டு தெரிஞ்சு கிட்டார்.

நான் விளக்கிச் சொன்னேன். சொல்லிவிட்டு 'வேணும்னா டெம்பிள் புரோக்கரை அழைச்சிட்டுப் போங்கனேன்'னேன்.

"அதாங்க... உங்க சம்பந்தியைச் சொன்னேன். டைரக்டர் ஷங்கர்."

இப்படி தெய்வங்களை எல்லாம் சினிமாவில அதிக அளவில கொண்டு வந்து பெருமை சேர்த்த என் இனிய நண்பர் சங்கரை என்னால மறக்க முடியாது.

டைரக்டர் பாக்யராஜ். இவரை என்ன சொல்றதுன்னே தெரியல்ல. தேவையில்லாம என்னை எங்கேயோ உயரத்தில தூக்கி வச்சிட்டார். 'தூறல் நின்னு போச்சு' படத்தில அவர் எனக்குத் தந்த சான்ஸை சொல்றேன். படத்துக்கு அவர்தான் புரொட்யூஸர், கதை, வசனம், டைரக்ஷன், ஹீரோ எல்லாமே அவர்தான். நான் ஹீரோவா இருந்தும்கூட தன் முக்கியத்துவத்தைக் குறைச்சிட்டு என் கேரக்டரை அப்படி அருமையா பரிமளிக்கச் செய்தவர் பாக்யராஜ். பலமுக திறமைசாலி அவர். காமெடி அவருக்கு ரொம்ப இயல்பா வருது. தூறல் நின்னு போச்சுல என் நடிப்பை இன்னிக்கும் ஜனங்க ரசிக்கிறாங்கன்னா அதுக்கு காரணம் சந்தேகமில்லாமல் பாக்யராஜ்தான்.

(தொடரும்)

ரயில் மட்டுமா கவிழ்ந்தது?

'தண்டவாளத்தில் ஓடி ஓடி அலுத்துப் போச்சு. தரையில் இறங்கினால் என்ன..?' என்று இறங்கிவிட்டது டெல்லி–அகமதாபாத் மெயில்!

'இது ஒரு பெரிய செய்தியா தினம் தினம் நம் தாய்த் திருநாட்டில் நடப்பதுதானே?' என்பீர்கள். செய்தி இதோடு முடியவில்லை. இந்தத் தடம்புரளலினால் ஜரீனா கோர்ஷ்கோவா தோற்றுப் போனார்!


உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் ஜரீனா கோர்ஷ்கோவா. சமீபத்தில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டிக்கு வந்திருந்தார். போட்டிக்கு நடுவில் ஒரு நாள் ஓய்வு தினம் கிடைத்தது. சக விளையாட்டு வீரர்கள் உள்ளூரில் உள்ள அரண்மனைகளைப் பார்வையிடச் செல்ல, இவர் மட்டும் டெல்லிக்கு ஒரு ட்ரிப் அடித்துவிட்டு வரலாமே என்று ஆசைப்பட்டிருக்கிறார். 'அடுத்த நாள் காலை பத்தரை மணிக்கு சதாப்தி எக்ஸ்பிரஸ் ஜெய்ப்பூர் வந்து சேர்ந்து விடும்; போட்டியில் கலந்து கொள்ள நேரம் சரியாக இருக்கும்' என்று (நம் ரயில்வேயின் திறமையைப் பற்றிக் குறைவாக!) கணக்கிட்டு விட்டார். மெயில் தடம் புரண்டதால் சதாப்தி மூன்று மணி நேரம் லேட்!

விளையாட்டு அரங்கிற்கு 45 நிமிடங்கள் தாமதமாக வந்து சேர்ந்தார் ஜரீனா! முழுத்திறமையையும் காட்ட முடியவில்லை (ஒவ்வொருவருக்கும் அதிகபட்சம் இவ்வளவு நிமிடங்கள்தான் ஆடலாம் என்ற கணக்கு இது போன்ற போட்டிகளில் உண்டு. தாமதத்தின் காரணமாக ஜரீனாவின் விளையாட்டு நேரம் முக்கால் மணி நேரம் குறைக்கப்பட்டுவிட்டது). சீன வீராங்கனையான வீ ருஃபானிடம் தோற்றுவிட்டார். (இறுதியில் கோப்பையை தட்டிச் சென்றவர் இந்த சீன வீராங்கனைதான்.)

– குல்லூ




காற்றுடன் கொஞ்சம் புழுதி!



உலகச் சந்தையில் பங்குகளின் விலை குறைந்தபோது அதிர்ச்சி அலைகள் எங்கும் பரவின. ஹாங்காங் பங்கு மார்க்கெட் மிக வலிமையானதாகக் கருதப்படுவது. இதுவே பாதிக்கப்பட்டபோது, பங்கு மார்க்கெட் வட்டாரங்கள் கலவரமடைந்தன. சங்கிலித் தொடராக டோக்யோ, சிங்கப்பூர்; லண்டன், நியூயார்க் சந்தைகளிலெல்லாம் ஷேர் விலைகள் சரிந்தன.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன் மலேஷியா டாலர், சிங்கப்பூர் டாலர், தாய்லாந்து நாட்டு பாஹ்ட நாணயம் யாவும் மதிப்பில் வெகுவாகக் குறைந்தன. அந்தந்த நாடுகளின் ரிசர்வ் வங்கிகள் நிதிக் கட்டுப்பாட்டில் சற்று அசிரத்தையாக இருந்ததால் ஏற்பட்ட விளைவு இது.

இந்த நாணயங்களெல்லாம் மதிப்பில் குறைந்தபோது இந்திய ரூபாய் மட்டும் உறுதியாக இருந்தது. ரூபாயை முழுதும் மாற்றக் கூடிய நாணயமாக (fully convertible- அதாவது மார்க்கெட் நிலவரப்படி ரூபாய் கொடுத்து அந்நியச் செலாவணி பெறும் வசதி) அறிவிக்



காமல் ரிசர்வ் வங்கி இன்னமும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்தக் கட்டுப்பாடுதான் பிற நாணயங்கள் மதிப்பிழந்தபோது ரூபாயைக் காப்பாற்றியிருக்கிறது.

உலக நாடுகளின் நாணயங்கள் மதிப்பில் குறைந்ததன் எதிரொலியாகத்தான் உலகப் பங்குச் சந்தையிலும் பங்குகளின் விலைகள் குறைந்தன. நாணயங்கள் மதிப்பு குறைந்தபோது இந்திய ரூபாய் பாதிக்கப்படாவிட்டாலும் உலகப் பங்குச் சந்தை உலுக்கப்பட்டபோது நமது பங்குச் சந்தையும் ஆடிப் போயிற்று.

இதற்குக் காரணம் தாராளமயமாக்கல் கொள்கை என்று சொன்னால் அந்தக் கொள்கையை நான் குறை கூறுவதாக எண்ணிவிடக் கூடாது. சற்று விளக்குகிறேன்.

நமது அன்னியச் செலாவணி கையிருப்பு முப்பது பில்லியன் டாலரைத் தொட்டு விட்டது என்று பெருமை கொள்கிறோம் இல்லையா..? இதில் பத்து பில்லியன் டாலர், அந்நிய நிறுவனங்கள் நமது பங்குச் சந்தையில் செய்திருக்கும் முதலீடே ஆகும். நம் நாட்டு நிறுவனங்களும் பிற நாட்டுப் பங்குச் சந்தைகளில் தங்கள் பங்குகளை விற்று அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளன.

உலகச் சந்தையில் பல்வேறு நாட்டு நாணயங்களின் மதிப்பு குறைந்தபோது, சர்வதேசப் பங்கு மார்க்கெட் வியாபாரிகள் கலவரமுற்றுத் தங்கள் பங்குகளை விற்க ஆரம்பித்து விட்டார்கள். கிடைத்த விலைக்கு விற்றதால் மார்க்கெட் கிடுகிடுத்துப் போய் விட்டது!

உலக நிறுவனங்கள் நம் நாட்டில் முதலீடு செய்திருப்பதாலும் நம் நிறுவனங்கள் உலகச் சந்தையில் பங்கு வர்த்தகம் செய்வதாலும் இந்தியப் பங்குச் சந்தையிலும் விலைகள் வீழ்ந்தன. எனினும், அபூர்வமாகவே விற்கப்படும் சில நிலையான பங்குகள் பாதிக்கப்படவில்லை. அடிக்கடி வர்த்தகம் செய்யப்படும் பங்குகளுக்கே அடி.

இப்படியாக, நமது ரூபாயின் மதிப்பு ஸ்திரமாக இருந்த போதிலும் நமது பங்குகளின் விலை ஊசலாடியிருக்கிறது! உலக ஷேர் வியாபாரிகளின் போக்கும் உலகப் பங்குச் சந்தையின் போக்கும் இனி நமது உள்நாட்டுப் பங்குச் சந்தையையும் பாதிக்கும்.

கதவைத் திறந்து வைக்கும்போது காற்றுடன் கொஞ்சம் புழுதியும் வரத்தானே செய்யும்!

— வி. கோபாலன்

புரட்சி வானொலி!



• வேரித்தாஸ்' வானொலி நிலையம்

பொது மக்களிடம் நன்கொடை வாங்கி, இயங்கும் சேவை நிறுவனங்களைத் தெரியும். ஆனால் நன்கொடைகள் மூலம் மட்டுமே இயங்கும் ரேடியோ பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இந்திய நேரம் காலை 6 – 6.30 & மாலை 7.30–8.00 வரை சிற்றலை இரண்டு, 31 மீட்டரில் உங்கள் ரேடியோவைத் திருப்புங்கள்.

'இனிய இதயங்களே!' என்று தமிழர்களை அன்புடன் அழைக்கிறது ஒரு பிலிப்பைன்ஸ் வானொலி. பெயர் 'வேரித்தாஸ்' ("Veritas") இந்த லத்தீன் மொழிச் சொல்லுக்கு அர்த்தம் 'உண்மை'.

'வேரித்தாஸ்' ஒரு கிருத்தவ ஒலிபரப்பு நிலையமானாலும் மதப் பிரச்சாரம் மட்டும் என்றில்லாமல் உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் குரலாகச் செயல்படுவது இதன் சிறப்பு. "உலகமெங்கிலும் சுமார் 35 லட்சம் வேரித்தாஸ் ரசிகர்கள் இருக்கிறார்கள்!" என்கிறார் இதன் இயக்குநர் ம. ஜெகத் கஸ்பார்.



• ஜெகத் கஸ்பார்

இந்த 35 லட்சம் பேரில் பெரும்பான்மையானவர்கள் இலங்கைத் தமிழர்கள். தொடரும் உள்நாட்டுப் போரால் அகதிகளாக இலங்கையிலேயும் வெளிநாடுகளிலேயும் சிதறிக் கிடக்கிற இலங்கைத் தமிழர்களுக்குத் தொடர்புப் பாலமாகவும் உறவுப் பாலமாகவும் இயங்குகிறது இந்த வானொலி.

"இலங்கை அரசுக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ சார்பாக இல்லாமல் வெறும் செய்திகளை மட்டுமே அசலாகத் தருவது எங்கள் ஸ்பெஷாலிட்டி" என்கிறார் கஸ்பார்.

இலங்கை மட்டுமில்லாமல் மலேசியா, பர்மா உள்ளிட்ட பெரும்பான்மையான தென்காசிய நாடுகளிலும் இந்தக் குட்டி வானொலிக்குச் செமை வரவேற்பாம்.

காரணம்?

1986– பிப்ரவரி 20ம் தேதி பிலிப்பைன்ஸில் நடந்த ராணுவப் புரட்சி சமயம் இந்த வானொலி ஆற்றிய மாபெரும் சேவை!

மார்க்கோஸ் – இமெல்டாவைத் தெரியாமல் இருக்க முடியாது. (உபயம்: ஜெயலலிதா) பிலிப்பைன்ஸில் காட்டாட்சி புரிந்து வந்த இந்த மார்க்கோஸைக் கவிழ்த்து, புதிய ஆட்சி கொண்டு வர நடந்த மூன்று நாள் மக்கள் புரட்சியின்போது இந்த வானொலியின் சேவை மகத்தானது.

இப்போதைய அதிபர் பிடெல் ராமோஸ், மக்களைக் கூட்டி, ஒருங்கிணைத்து, புரட்சிக்கு வித்திட்டு, வெற்றி காணத் தம் அழைப்பை அவ்வப் போது விடுத்தது இந்த 'வேரித்தாஸ்' மூலம்தான்! சுமார் இருபது லட்சம் மக்கள் படையை வழி நடத்தும் சாதனமாக அன்று செயல்பட்டிருக்கிறது இந்த வானொலி.

புரட்சி சமயம் இந்த வானொலி நிலையம் மீது குண்டு மழை பொழிந்து, கோபுரமே சரிந்து போன போதும் கலங்காமல் மீண்டும் எழுந்து நின்றது வேரித்தாஸ்.

மகிழன், ஆன்டோ, கணபதிப் பிள்ளை, தெய்வேந்திரன் என்று பிலிப்பைன்ஸ் வாழ் தமிழர் கோஷ்டியால் வழி நடத்தப்படும் இந்த வானொலிக்கு முதல் முதலில் ஒரு நேயர் வட்டத்தை உருவாக்கிய பெருமையும் ஒரு தமிழருடையதே. அவர் பெயர் ம.அ. சாமி. சாமியைத் தெரியாதவர்கள் இருக்கலாம். அவர் மகனைத் தெரியாதவர்கள் இங்கே யாருமில்லை. ரபி பெர்னாட்!

— எழுத்தாணி

காதில் விழுந்தவை!

◆ பங்கு மார்க்கெட் ஊழல் சக்கரவர்த்தி ஹர்ஷத் மேத்தா சில நாட்களுக்கு முன்னர் சென்னை வந்திருந்தார். மகாபலிபுர விஜயம், தி.நகர் பட்டு மாளிகையில் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு பர்ச்சேஸ் என்று பிஸியாக இருந்த மேத்தாவை தாஜ் ஹோட்டலில் சந்தித்தனர் சுவாமியும், சந்திரலேகாவும்.

"ஃபேர் குரோத் பங்கு பத்திரம் வாங்கிய விவகாரத்தில் நிதி அமைச்சர் சிதம்பரத்தை மாட்டிவிட முடியுமா?" என்று ஆராய்வதற்குத் தான் மேத்தா - சுவாமி - லேகா - கூடிப் பேசினார்களாம்!

◆ ஆழ்வார்பேட்டை நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடந்த ஒரு சந்திப்பு பற்றி அ.தி.மு.க. வட்டாரத்தில் கிசுகிசுக்கப்படுகிறது. மதுரை பொதுக் கூட்டம் முடிந்த கையோடு, கண்ணப்பன், முத்துசாமி, அரங்கநாயகம், ஆகியோர் அந்த ஹோட்டலில் சேடப்பட்டியாரைச் சந்தித்துப் பேசினார்களாம். வெள்ளி விழா மாநாட்டுக்கு முன்னர் திருநாவுக்கரசு, ஆர்.எம்.வீ. தவிர மற்ற அனைவரையும் மீண்டும் தாய்க் கழகத்துடன் இணைத்துவிட வேண்டும் என்று மிக ஆர்வமாக இருக்கிறாராம் ஜெ. பொறியியல் கல்லூரி நடத்தும் பழைய அ.தி.மு.க. பிரமுகர் ஒருவரும், வாரப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் சந்திப்பின் போது உடனிருந்ததாக பலமான பேச்சு!


◆ சாதாரணமாக இருந்த அந்த நான் கெழுத்து கம்பெனி, இறக்கை கட்டிக் கொண்டு மேலே பறந்து சிறகை விரித்தது, அ.தி.மு.க. ஆட்சியில்தான்! ஆனால், தேர்தல் சமயத்தில் 'போட்ட பணத்தை' கட்சி மேலிடம் மீண்டும் வற்புறுத்தி வாங்கி விடவே, பண நடமாட்டம் குறைந்து கம்பெனி அதல பாதாளத்தில் விழுந்து விட்டது! விமானங்களெல்லாம் தரையிறங்கி விட்டாலும், அந்த கம்பெனி அதிபருக்கு வைரங்களின் மேல் உள்ள ஆசை குறையவில்லை. சமீபத்தில், கோடிக்கணக்கான ரூபாய்க்கு வைரங்கள் வாங்கியதாக ஒரு தகவல் சொல்கிறது.

"இந்த நாட்டில் மாஃபியா கும்பல்தான் விமான கம்பெனி நடத்த முடியும்!" என்று அவர் வணிகப் பத்திரிகையொன்றின் பெண் நிருபரிடம் குறிப்பிட்டாராம். அந்தப் பெண் பத்திரிகையாளர் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜெயந்தியிடம் இதைப் 'போட்டுக் கொடுத்து' விட்டாராம்!

◆ ஜனவரி முதல் வாரத்தில் நெல்லையில் நடக்க இருக்கும் அ.தி.மு.க. மாநாடு, (தேதி மாறாது என்று ஜெ. சொன்னாலும்!) தள்ளிப் போனாலும் போகலாம் என்கிறார்கள். காரணங்கள் இரண்டு. 1. தமிழ் மாதம் மார்கழியில் நடத்த வேண்டாம் என்ற ஜோசியர்களின் அட்வைஸ். 2. சபரிமலை சீஸனாதலால் டூரிஸ்ட் பஸ்களுக்கு மிகவும் கிராக்கியாக இருக்கும். ஆகவே மாநாடு ஜனவரி மூன்றாவது வாரத்துக்கு தள்ளிப் போகலாம். மாநாடு நடக்க இருந்த இடத்தை மாற்றியவர்கள் தேதிகளை மாற்றினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.


— தில்லப்பா






சிரிப்புச் சாரல்!

கருத்து : கோடைஇடி





மதிப்புக்குரிய எழுத்தாளர் எதிராசன் அவர்களுக்கு,

வணக்கம்.

எங்கள் 'பருவம்' இதழில் ஒரு சிறப்பு மலர் வெளியிடவிருக்கிறோம். பல்வேறு பிரபல எழுத்தாளர்கள் பல்வேறு தலைப்புக்களில் சிறுகதை எழுதுகிறார்கள். தாங்கள் 'மழை' என்ற தலைப்பில், மழையை அடிப்படையாக வைத்து ஒரு சிறுகதை எழுதி எங்களைக் கௌரவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
ஆசிரியர், 'பருவம்'.

மதிப்பிற்குரிய 'பருவம்' ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம். தங்கள் கடிதத்துக்கு நன்றி. நான் மேலெழுந்தவாரியாகவும், பொழுது போக்காகவும் கதைகள் எழுதுகிறேன் என்ற அவப்பெயர் சமீப காலமாக எனக்கு ஏற்பட்டு வருகிறது. அதைப் போக்க வேண்டி, எதையும் நன்கு ஆராய்ச்சி செய்து, ஆழத்தோடு எழுதுவதென்று தீர்மானித்துள்ளேன். இந்த நன்னாளில் அந்தத் தீர்மானத்துக்குச் செயல் வடிவம் கொடுக்க மழையைப் பற்றிப் பல விஷயங்கள் கேட்டறிந்து, அதை என் கதைக்குப் பின்னணியாக வைத்து எழுதப் போகிறேன்.

எதிராசன்.

அன்புள்ள எதிராசன்,

மேலும் பயமாயிருக்கிறது. நாங்கள் கேட்டது சிறு - சிறு என்றால் சிறிய கதைதான். நாவல் அல்ல. ஆகையால் ரொம்ப அதிகமாக ஆராய்ச்சி செய்ய வேண்டாம்.

ஆசிரியர், 'பருவம்'

●

அன்புள்ள எதிராசன்,

வணக்கம். எங்கள் முந்தைய கடிதம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம். ஒரு வாரமாகிறது. தங்களிடமிருந்து கதையும் வரவில்லை, கடிதமும் வரவில்லை. தயவு செய்து பதில் போடவும்.

ஆசிரியர், 'பருவம்'.

'பருவம்' ஆசிரியரவர்களுக்கு,

எதிராசனின் மனைவி

காட்டுக்குப் போன எதிராசன் கதை!

...ப் காடுக்கப் போகிறேன்.

இப்படிக்கு,
எதிராசன்.

மதிப்புக்குரிய எதிராசன் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் கடிதத்தைப் பார்த்துப் பயமாயிருக்கிறது. என்ன செய்யப் போகிறீர்கள்?

ஆசிரியர், 'பருவம்'.

அன்புள்ள பருவம் ஆசிரியரவர்களுக்கு,

பயப்படத் தேவையில்லை. ஆராய்ச்சி என்றவுடன் ஏன் அலறுகிறீர்கள்? வானிலை இலாகாவில் ஐம்பதாண்டு பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள டாக்டர் ராமசேஷனைப் பார்த்து, மங்களம் எழுதிக் கொண்டது. உங்கள் கடிதம் வந்தது. இப்பவும் பத்து நாளாக என் கணவரைக் காணவில்லை. யாரோ ஒரு டாக்டர் ராமசேஷனைப் பார்க்கப் போகிறேன் என்று புறப்பட்டுச் சென்றார். ஏன், எதற்காக என்று எதுவும் சொல்லவில்லை. நாலு முழம் வேட்டியும், சிமெண்ட் கலர் அரைச் கைச் சட்டையும், மேலே ஒரு சிவப்புத் துண்டும் போட்டுக் கொண்டிருந்தார். அதுதான் அவருடைய அடையாளம். போலீசில் சொல்லலாமென்று நினைத்தேன். உங்கள் கடிதத்தைப் பார்த்த பிறகு, உங்களுக்கும் அவர் காணாமற் போனதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்குமென்று தோன்றுகிறது. உடனே தகவல் தெரிவிக்கவும்.

மங்களம்.



ஒரு மழைக் - கூ

சுட்ட அப்பளம், மிளகு ரசம்
ஜன்னலோரம்.
மனசிலும் மழை.

முன்றி

அம்மணி,

போலீசில் கிலிசிலெல்லாம் சொல்லி எங்கள் பத்திரிகைக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டாம். டாக்டர் ராமசேஷனின் அட்ரஸ் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அவருக்குக் கடிதம் எழுதியுள்ளோம். நல்ல தகவல் கிடைக்கும். எதற்கும் மயிலாப்பூருக்குப் போய் கற்பகாம்பாளுக்கு ஒரு அர்ச்சனை செய்யுங்கள்.

ஆசிரியர், 'பருவம்'.

டாக்டர் ராமசேஷன் அவர்களுக்கு,

வணக்கம்.

எதிராசன் என்ற எழுத்தாளர் ஒருவர் தங்களைப் பார்க்க வந்தாரா? வந்திருந்தால் என்ன ஆனார்? உடனே தெரிவிக்கவும்.

ஆசிரியர், 'பருவம்'.

'ஹம்சா'

'பருவம்' ஆசிரியருக்கு,

டாக்டர் ராமசேஷனுக்கு எழுதுவதாகச் சொன்னீர்களே? என்ன ஆயிற்று? நிற்க. போலீஸ் கமிஷனரின் விலாசம் தெரியுமா?

மங்களம்

அன்புள்ள திருமதி மங்களம் அவர்களுக்கு,

பொறுமை, பொறுமை, பொறுமை. அது இல்லையேல் நாட்டுக்கு வெறுமை, வெறுமை, வெறுமை. போலீஸ் கமிஷனரின் விலாசமெல்லாம் எதற்கு? அவர் எங்காவது டூர் போயிருப்பார். கண்டு பிடிப்பது கஷ்டம். டாக்டர் ராமசேஷனின் தாயாருக்கு எழுதினோம். பதிலுக் காகக் காத்திருக்கிறோம்.

ஆசிரியர், 'பருவம்'.

பி.கு. : கற்பகாம்பாளுக்கு அர்ச்சனை செய்தீர்களா? கூடவே பார்த்தசாரதிப் பெருமாளுக்கும் ஒரு அர்ச்சனை செய்யலாமென்று தோன்றுகிறது.

●

பருவம் ஆசிரியருக்கு,

ராமசேஷனின் அம்மா எழுதுவது. எழுத்தாளர் எதிராசன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என் பிள்ளை ராமசேஷன் எங்கே? அதை முதலில் சொல்லு. அந்த எதிராசன் என்கிற ஆசாமி இவனிடம் வந்து மழையைப் பற்றி ஏதோ கேட்டான். என் பிள்ளை ஒரு அசடு. தமிழ் நாட்டிலேயே ரொம்ப அதிகமாய் மழை பெய்கிற இடம் கண்ணாவரம் காடுதான் என்று சொல்லி, அங்கே நேரில் போனால் நிறைய விவரம் சேகரிக்கலாம் என்றான். வேண்டாம்டா வேண்டாம்டா என்று முட்டிக் கொண்டேன். அவன் கேட்கவில்லை. நான்

கேரளாக்காரி. எண்பது வயது. முதல மைச்சர் நாயனாருக்குத் தூரத்து உறவு. அவர் மூலம் டெல்லிக்குப் போய் இந்திரஜித் குப்தா வைப் பார்த்துப் புகார் கொடுக்கப் போகிறேன்.

சிவசுந்தரி.

பெருமதிப்புக்குரிய சிவசுந்தரி அவர்களுக்கு,

வணக்கம் பல. கேரள முதலமைச்சர் நாயனாரின் தூரத்து உறவுக்காரரிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்ததில் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அளவேயில்லை. இந்திரஜித் குப்தா அன்டார்ட்டிகா போயிருப்பதாக எமது டெல்லி நிருபர் தெரிவித்தார். கண்ணாவரம் காட்டில் தங்கள் பிள்ளை காணாமல் போனதே போதும். தாங்களும் அன்டார்ட்டிகா பனிமலையில் சிக்கிக் கொள்ள வேண்டாம். நாங்களே விரைவில் நடவடிக்கை எடுக்கிறோம்.

ஆசிரியர், 'பருவம்'.

'பருவம்' ஆசிரியருக்கு,

உங்கள் கடிதப்படி கற்பகாம்பாளுக்கும் பார்த்தசாரதிப் பெருமாளுக்கும் அர்ச்சனை செய்ததோடு, திருவேற்காடு, மாங்காடு, கந்த கோட்டம் முதலிய எல்லாக் கோவில்களுக்கும் போய் வந்தேன். ஒரு தகவலும் இல்லை. என் கணவர் கிடைப்பாரா? எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுங்கள். கண்ணீர் சொட்ட இதை எழுதுவதால் நடுநடுவே எழுத்து அழிந்து போயிருப்பதைப் பார்த்தாவது மனம் இறங்குங்கள்.

மங்களம்.

திருமதி மங்களம் அவர்களுக்கு,

தாய்க்குப் பின் தாரமா, தாரத்துக்குப் பின் தாயா என்று தெரியவில்லை. இருவருக்கும் இடையில் நாங்கள் தவிக்கிறோம். இவ்வளவு தெய்வங்களை வேண்டிக் கொண்டிருக்கும் போது ஒரு கஷ்டமும் நேராது. தங்கள் கணவர் கண்ணாவரம் காட்டில் இருக்கிறார். ஆனால் பத்திரமாக இருக்கிறாரா என்பது தெரியவில்லை. தெரிந்ததும் எழுதுகிறோம்.

ஆசிரியர், 'பருவம்'.

பி.கு. : தங்கள் கணவர் வெளியே சென்ற போது குடை எடுத்துக் கொண்டு போனாரா? இங்கேயே மழை சொட்டு சொட்டென்று சொட்டுகிறது., கண்ணாவரம் காட்டில் வெள்ளமாக இருக்குமே?

●

'பருவம்' ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம். எழுத்தாளர் எதிராசன்

"என்னங்க, உங்க அரசியல் விவகாரமெல்லாம் நம்ம பையனைப் பக்கத்தில் வைச்சுக்கிட்டுப் பேசாதீங்கன்னு சொன்னேனே கேட்டீங்களா?"

"ஏன்டி, இப்ப என்ன ஆயிடுச்சு?"

"நான் பத்தாம் வகுப்புப் பரீட்சையில் தோல்வியடைந்தது உண்மை. ஆனால் வீழ்ச்சியடையவில்லைங்கறான்!"

— புளியரை கணேசன்

எழுதிக்கு கொண்டது. என் கையெழுத்து கன்னாபின்னாவென்று இருப்பதைப் பார்த்துத் திகைக்க வேண்டாம். இதைக் கண்ணாவரம் காட்டிலிருந்து எழுதுகிறேன். கொள்ளைக்காரக் கனகவேல் என் கைகளையும் டாக்டர் ராமசேஷனின் கையையும் கட்டிப் போட்டிருக்கிறான். அவன் சொல்லித்தான் இதை எழுதுகிறேன். ஆனால் கடிதம் எழுதுவதற்குக் கூடக் கட்டை அவிழ்க்க மறுத்து விட்டான். முதுகுக்குப் பின்னால் காகிதம் வைத்துக் கொண்டு எழுதிப் பாருங்கள். கஷ்டம் புரியும்.

நிற்க. இத்துடன் ஒரு கேசட் அனுப்பியுள்ளேன். அதைக் கேட்டால் விவரம் புரியும். மற்றபடி நாங்கள் கனகவேல் தருகிற காய், கிழங்கு, மூலிகைகளைச் சாப்பிட்டுக்கு கொண்டு சௌக்கியமாக இருக்கிறோம். எங்கள் குடும்பத்துக்குத் தெரிவிக்கவும். உங்கள் பதிலை, கண்ணாவரம் காட்டின் எல்லையில் உள்ள பழைய ஆலமரத்தின் பொந்தில் போடவும்.


எதிராசன்.

அன்புள்ள எதிராசனுக்கு,

வணக்கம். உங்கள் கடிதமும் கேசட்டும் கிடைத்து, எங்களுக்கு உயிர் வந்தது. ஆனால் வந்த உயிர், கேசட்டைப் புரிந்து கொள்வதற்குள் போய்விடும் போலிருக்கிறது. முதலில் ஒரே கிச்மூச் சத்தம். பிறகு 'வந்த நாள் முதல் இந்த நாள் வரை' என்ற பாட்டு நாலைந்து அடி கேட்டது. பிறகு மறுபடி சிக்மூச். தொடர்ந்து, 'ஆயிரத்தில் ஒருத்தி' என்ற பாட்டு கேட்டது. நடுநடுவே பந்தா, பந்தா என்று கேட்டது. என்ன பந்து? அவ்வளவு பெரிய கொள்ளைக்காரனுக்கு ஒரு நல்ல கேசட் கூடவா கிடைக்கவில்லை? மகா பழைய கேசட்டிலேயே உங்கள் பேச்சைப் பதிவு செய்ய வேண்டுமா? கனகவேலிடம் கெஞ்சிக் கூத்தாடி, கைக் கட்டை அவிழ்க்கச் சொல்லி, கடிதமாகவே எழுதுங்கள். உங்கள் வீட்டுக்குத் தெரிவித்து விட்டோம். நாங்கள் உயிருடன் இருப்பதைக் கொண்டே அதை அறியலாம்.

ஆசிரியர், 'பருவம்'.

பி.கு. : காய் கிழங்கு மூலிகை அதிகம் சாப்பிட வேண்டாம். வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் டாக்டர் கிடைக்க மாட்டார்.



'பருவம்' ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம். நானும் டாக்டர் ராமசேஷனும் வயிற்றுப் போக்கு எதுவும் இல்லாமல் சௌக்கியமாக இருக்கிறோம். மழைக்கு ஒதுங்கத்தான் இடமில்லை. ஒரு குடிசையில் புகுந்து கொண்டு இதை எழுதுகிறேன். தற்காலிகமாக என் கைக் கட்டைக் கனகவேல் அவிழ்த்திருக்கிறான்.

நானும் டாக்டர் ராமசேஷனும் கண்ணாவரம் காட்டுக்குள் நுழைந்தவுடன் கனகவேல் எங்களை மடக்கிப் பிடித்து, வெகு தூரம் கண்ணைக் கட்டி அழைத்துப் போனான். கனகவேலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அவன் கண்ணாவரம் காட்டில் இருப்பதைக் கேள்விப்படவில்லை.

அதிரடிப் படை ஆள் என்று எங்களை அவன் நினைத்துவிட்டதால் அன்னம் தண்ணீரில்லாமல் எட்டு நாட்கள் வாட்டியெடுத்து விட்டான். உண்மையைத் தெரிந்து கொண்ட பிறகுதான் ஒரு வாய் கேழ்வரகுக் கூழ் சாப்பிடக் கொடுத்தான். டாக்டர் ராமசேஷன்தான், பாவம், கேழ்வரகுக் கூழ் வாயில் ஒட்டிக் கொண்டதால் இரண்டு நாள் பேச முடியாமல் தவித்தார்.

கேசட்டைத் தாங்கள் சரிவரக் கேட்க முடியாமல் போனது குறித்து வருந்துகிறேன். எங்களை விடுவிப்பதற்குக் கனகவேல் அதில் ஒரு நிபந்தனை விதித்திருக்கிறான். சுலபமான நிபந்தனைதான். அவனுக்குக் காட்டில் தமிழ்ப் பத்திரிகை எதுவும் கிடைப்பதில்லையாம். ஆகவே 'பருவம்' இதழ் வாரா வாரம் ஆலமரப் பொந்தில் போட வேண்டுமாம். ஆனால் சந்தா எதுவும் கட்ட மாட்டானாம். ('சந்தா' என்பது தான் தங்களுக்கு 'பந்தா' என்று கேட்டிருக்கிறது.)

உடனே அவன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு எங்களைக் கனகவேலிடமிருந்து மூலிகை உணவிலிருந்தும் காப்பாற்றவும்.

எதிராசன்.

அன்புள்ள எதிராசன்,

பூ! இவ்வளவுதானே நிபந்தனை? 'பருவம்' மட்டுமல்ல, கல்கி, ஆனந்தவிகடன், குங்குமம், குமுதம், ராணி, தினமலர் முதலிய சகல பத்திரிகைகளும் கனகவேலுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளோம். அந்த ஆலமரப் பொந்து போதாது. பக்கத்து மரப் பொந்துகளிலும் கிளைகளிலும் வைக்கிறோம். உடனே வீட்டுக்கு வரவும்.

ஆசிரியர், 'பருவம்'.

●

அன்புள்ள 'பருவம்' ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம். சில தினங்களுக்கு முன்பு வீட்டுக்கு வந்து சேர்ந்து, என் மனைவியின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருக்கிறேன். டாக்டர் ராமசேஷனும் அவருடைய அம்மாவின் கண்ணீரை இன்னேரம் துடைத்துக் கொண்டிருப்பார்.

கண்ணாவரம் காட்டில், கனகவேலிடமிருந்தும், அவனுடைய தோழர்களிடமிருந்தும் மழை பற்றிய பல அரிய பெரிய தகவல்களைச் சேகரித்தோம். டாக்டர் ராமசேஷன், தான் கொண்டு வந்திருந்த காகிதங்கள் தீர்ந்து, குகைச் சுவர்களில் கரிக் கட்டியால் எழுதி வைத்திருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் கேட்டிருந்த என் கதையை விரைவில் அனுப்பி வைக்கிறேன். சற்று நீளமாக இருக்கும். வெட்டாமல் போடவும்.

எதிராசன்.

அன்புள்ள எதிராசனுக்கு,

மழை நின்று போய், மழையைப் பற்றிய எங்கள் சிறப்பிதழும் வெளியாகி விற்றுத் தீர்ந்து நீண்ட நாளாகிறது. கோடை ஆரம்பமாகி விட்டது. எனவே தங்கள் கதை வேண்டாம்.

ஆசிரியர், 'பருவம்'.

அன்புள்ள 'பருவம்' ஆசிரியருக்கு,

வணக்கம். மழை இதழ் தாண்டினால் என்ன? கோடை இதழில் வெளியிடுங்கள். விஜயவாடாவின் அருகே, கொடும்பாறை என்ற இடத்தில்தான் ரொம்ப அதிக வெயில். இந்தியாவின் தட்ப வெப்பங்கள் பற்றிய நிபுணரான டாக்டர் ரத்தினம் என்ற என் நண்பருடன் அங்கே சென்று ஆராய்ச்சி செய்து அருமையான கதை எழுதித் தருகிறேன்.

எதிராசன்.

●

ஹலோ! ஹலோ! யார் பேசறது? எழுத்தாளர் எதிராசனா? நான்தான் பருவம் ஆசிரியர் பேசறேன். கோடை மலர் எதுவும் நாங்கள் போடுகிற உத்தேசம் இல்லை. நீங்கள் கொடும்பாறைக்குப் போக வேண்டாம். நக்ஸலைட் நாகதேவ் அந்த வட்டாரத்தில்தான் இருக்கிறானாம். ப்ளீஸ்! ப்ளீஸ்! போகாதீங்க! உங்க ஒய்ஃபைக் கொஞ்சம் கூப்பிடுங்க. அவங்க கிட்டேயும் இப்பவே சொல்லிடறேன்...

32 11:29

மூலம் : டேனியல் ஸ்டீல்
தமிழில் : ரா.கி. ரங்கராஜன்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

"ஆண்டியைக் காணோமா?' என்று பேஜ் அதிர்ச்சியுடன் கேட்டதுமே, விஷயத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டான் தாரென்ஸன். சட்டென எழுந்து வந்து அவள் கையை ஆதரவுடன் பிடித்துக் கொண்டு, பதற்றப்படாதே என்பது போல் சைகை செய்தான்.

"ஏதோ சீட்டு வைத்திருக்கிறான் என்றீர்களே? என்ன எழுதியிருக்கிறான் அதில்?" என்று பிராடிடம் பேஜ் பதைத்தாள்.

"ஒன்றுமே புரியவில்லை..." என்றான் அவன். "நாம் சண்டை போட்டுக் கொண்டிருப்பதெல்லாம் அவனால்தானாம். அவன் மீது நாம் கோபமாக இருக்கிறோமாம். நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான் அவன் ஆசையாம். குழந்தைத்தனமாக என்னவோ எழுதியிருக்கிறான்..." என்றபோது அவன் குரல் கரகரத்தது. "நான் போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறேன். நீ சீக்கிரம் வீட்டுக்கு வா. நாம் சண்டை போட்டதை அவன் பார்த்து விட்டான் போலிருக்கிறது. கடவுளே! அவன் எங்கே இருப்பானென்று உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?"

"எனக்கு எதுவும் புரியவில்லையே?" என்றாள் பேஜ். திகிலும் கலவரமும் அவள் நெஞ்சை அழுத்தின. "எல்லா இடத்திலும் நன்றாய்ப் பார்த்து விட்டீர்களா? தோட்டத்தில் எங்காவது ஒளிந்து கொண்டிருக்கிறானோ என்னவோ? என் அம்மாவிடம் சொன்னீர்களா?"

"சொன்னேன். யாராவது சினேகிதன் வீட்டுக்குப் போயிருப்பான் என்கிறாள். ராத்திரி பத்து மணியாகிறது! சின்னப் பையன் அப்படிப் போவானா, என்ன?"

"அம்மா அப்படித்தான் சொல்வாள். நான் இதோ வருகிறேன்," என்றவள் தாரென்ஸனிடம் சுருக்கமாக விவரம் சொன்னாள். கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. "என்ன விபரீதமோ... பயமாயிருக்கிறது. சின்னப் பையன்களைக் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்று தினம் தினம் பேப்பரில் செய்தி வருகிறது...."

"சே, சே. அப்படி எதுவும் இருக்காது. கொஞ்ச நேரத்தில் போலீசார் கண்டுபிடித்து விடுவார்கள், பார். நானும் உன் கூட வரட்டுமா?"

"வேண்டாம்," என்றவளை அவளுடைய கார் வரையில் ஆறுதலாய் அழைத்துப் போய் வழியனுப்பினான். "தைரியமாயிரு, பேஜ். ஒன்றும் நேராது," என்று கூறி விடை கொடுத்தான்.

அவள் வீட்டை அடைந்தபோது போலீஸ் பட்டாளம் வந்து எல்லா விவரங்களையும் பிராடிடம் குறித்துக் கொண்டிருந்தது. ஆண்டியின் உடை என்ன, சினேகிதர்கள் யார் யார், பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் என்ன செய்தான் என்ற தகவல்களைத் திரட்டிக் கொண்டார்கள். ஆண்டியின் இரண்டு புகைப்படங்களை அவர்களிடம் தந்தாள் பேஜ். டார்ச் விளக்குகள் ஒளி வெள்ளம் பாய்ச்ச, போலீசார் எல்லா இடத்தையும் தேடினார்கள்.

இவ்வளவு சந்தடிகளுக்குமிடையே பேஜின் அம்மாவும் அக்காவும் அவரவர்கள் அறையில் படுத்திருந்தார்கள். எழுந்து வந்து என்ன விஷயம் என்று கேட்கவில்லை. கசப்பான எதையும் எதிர்நோக்கும் தைரியம் கிடையாது அவர்களுக்கு. ஒளிந்து கொள்வதுதான் வழக்கம்.

போலீசார் புறப்பட்டுச் சென்று பல இடங்



களில் விசாரித்து
விட்டுப் பேஜின் வீட்டுக்கே திரும்பி வந்தார்கள். ஆண்டி இன்னும் வரவில்லை என்பதை அறிந்து மறுபடியும் அவர்கள் புறப்பட்டுச் சென்ற சற்றைக்கெல்லாம் –

டெலிபோன் மணியடித்தது.

கூப்பிட்டவன் தாரென்ஸன்தான்.

"பேஜ், ஆண்டி இங்கே இருக்கிறான்" என்றான் அவன் நிதானமான குரலில். "பிஜான் அவனைத் தன் படுக்கையறையில் வைத்துக் கொண்டிருந்தான். பிஜானைக் கண்டித்தேன். 'ஆண்டிதான் தானாகவே இங்கே வந்தான். அவனுக்கு அவன் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லையாம். மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்றான். சரி இரு என்றேன்,' என்கிறான்..."

கேட்கக் கேட்கப் பேஜின் கண்களில் மளமளவென்று கண்ணீர் கொட்டியது.

பிராடை
நோக்கி, "தாரென்ஸன் வீட்டில் இருக்கிறானாம் குழந்தை," என்றான்.

"தாரென்ஸன் வீட்டிலா? அங்கே அவனுக்கு என்ன வேலை?" என்று பிராட் திகைத்தான். ஆலிஸனும் க்ளோவும் சிநேகிதிகள். ஆனால் ஆண்டியின் வயதுக்கொத்த தோழன் யாரும் அங்கே கிடையாதே என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.

"பிஜானும் அவனும் சிநேகிதர்கள். ஆண்டிக்கு இங்கே இருப்பதற்கு வருத்தமாயிருக்கிறது என்று சொல்கிறானாம்," என்று அவனுக்கு விளக்கிய பேஜ், "சரி, நான் அங்கே வந்து ஆண்டியை அழைத்துக் கொள்கிறேன்," என்றான் தாரென்ஸனிடம்.

மறுமுனையில் தாரென்ஸன் பெருமூச்சு

விட்டான், சங்கடத்துடன். "வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை என்கிறானே இவன்?"

திகைத்தாள் அவள். "ஏனாம்?"

"நீயும் உன் கணவரும் அவனைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டீர்களாமே? 'அப்பா என் மீது ரொம்பக் கோபமாக இருக்கிறார்' என்கிறான்."

"அவர் கோபமாக இருப்பது ஆண்டி மீது அல்ல. என் மீது. அவனிடம் நான் ஏதோ சொல்லிக் கொடுத்து விட்டேனென்று இவர் என் மேலேதான் கோபமாக இருக்கிறார்."

"அது மட்டுமில்லை. ஆலிஸன் இறந்து போய் விட்டாள் என்பதை மறைத்து நீங்கள் எல்லாரும் அவனிடம் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்றும் அவன் நினைக்கிறான்."

"அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகாமலே இருந்தது தப்பு," என்றாள் பேஜ். "சரி, நாங்கள் அங்கே வருகிறோம்."

"இப்போது அவனும் பிஜானும் சாக்லேட் ட்ரிங்க் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டு முடிக்கட்டும். நானும் பிஜானும் அவனை அங்கே அழைத்து வருகிறோம்."

"தாங்க்ஸ்," என்று சொல்லிவிட்டு, நடந்ததை பிராடிடம் சொன்னாள்.

அவன் முகத்தில் சுரத்தே இல்லை. "அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டியதுதான்," என்றான்.

"அவனிடம் சொல்வது இருக்கட்டும். உண்மை நிலைமையை நாமே ஒப்புக் கொள்ள வேண்டும்," என்ற பேஜ், போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு, ஆண்டி ஒரு சிநேகிதன் வீட்டில் இருக்கிறான் என்று தெரிவித்தாள்.

அரை மணி நேரத்தில் ஆண்டியை அழைத்துக் கொண்டு தாரென்ஸனும் பிஜானும் வந்து சேர்ந்தார்கள். பயத்தினாலும் வருத்தத்தினாலும் ஆண்டியின் முகம் வெளிறியிருந்தது. அவனைக் கண்டவுடன் கட்டியணைத்துக் கொண்டு கதறி விட்டாள் பேஜ். பிராடுக்கும் கண்கலங்கியது.

"இன்னொருதரம் இப்படிச் செய்யாதேடா, கண்ணா. செய்யவே செய்யாதே. உனக்கு ஏதாவது ஆகியிருந்தால் எனக்கு உயிரே போயிருக்கும்," என்றாள் பேஜ்.

"நீயும் அப்பாவும்தான் என்மேலே கோபமா இருக்கீங்களே?" என்றான் ஆண்டி.

"சீ, சீ! எனக்கும் உன் மீது கோபம் கிடையாது. அப்பாவுக்கும் உன் மீது கோபம் கிடையாது. அத்தோடு, ஆலிஸனுக்கும் ஒன்றும் ஆகவில்லை. நிறையக் காயம். அதனால் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள். நாளைக்கு உன்னை அவளிடம் அழைத்துப் போகிறேன். சரிதானா?"

அதைக் கேட்டதும் ஆண்டியின் முகத்தில் தான் எத்தனை மலர்ச்சி! "நிஜமாய்?" என்றான்.

"நிஜமாய்," என்று உறுதியளித்தாள் பேஜ். பாவம், ஆலிஸன் எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறாள் என்பது இவனுக்குத் தெரியாது. அவள் பேச மாட்டாள் என்று தெரியாது... அவனுடைய அன்புக்குரிய பழைய அக்காவாக அவள் இருக்கப் போவதில்லை... இருந்தாலும், இவனும் யதார்த்தத்தைத் தெரிந்து கொள்வது நல்லதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

அவளும் பிஜானுமாக ஆண்டியை அவனுடைய படுக்கையறையில் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள். பிஜான் வெளியே போனதும் ஆண்டியைப் பாசத்துடன் முத்தமிட்டு, "குட் நைட். தூங்கு," என்றாள் பேஜ்.

"ஏம்மா, அப்பா வீட்டை விட்டுப் போய் விடப் போகிறாரா?" என்று கேட்டான் ஆண்டி.

"தெரியாதுடா கண்ணா," என்றாள் அவள். உண்மையிலேயே அவனிடம் என்ன பேசுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. "எனக்கு நிச்சயமாய்த் தெரிந்ததும் கட்டாயம் உன்னி



அருள்வாக்கு

வாழ்நாள் முழுக்க எதன் நினைப்பு ஒருத்தன் மனஸில் ஜாஸ்தியாக இருக்கிறதோ, அதைப் பற்றிய சிந்தனைதான் அந்திமத்தில் வரும். இப்படி நமக்குக் கடைசியில் பகவத் ஸ்மரணம் வருமா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஒரு பரீக்ஷை வைத்துக் கொள்ளலாம். அதாவது :

அன்றன்றைக்கும் நாம் தூங்குகிறோம் அல்லவா? இதையும் ஒரு சாவு மாதிரி என்று தான் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. தூங்குகிறபோது கட்டை போல ஒன்றும் தெரியாமல், ஞானமே இல்லாமல்தானே கிடக்கிறோம்? இதனால்தான் இப்படிச் சொல்லியிருக்கிறது. 'நித்யப் பிரளயம்' என்று தூக்கத்தைச் சொல்வார்கள். இப்படி தினமும் நாம் 'சாகிற' போது பகவானையே ஸ்மரித்துக் கொண்டு 'சாக' முடிகிறதா என்று அப்யாஸம் பண்ணிப் பார்க்கலாம். தூங்குகிறதற்கு முன்னால் நம் இஷ்ட தேவதையையே ஸ்மரித்துப் பார்க்க வேண்டும். அந்த நினைப்போடேயே தூக்கத்தில் ஆழ்ந்து விட வேண்டும். வேறே நினைப்பு வரக்கூடாது. சொல்லும் போது ஸுலபமாக இருக்கும். ஆனால் பண்ணிப் பார்த்தால் எத்தனை கஷ்டம் என்று

தெரியும். காமாக்ஷியோ, நடராஜாவோ, தக்ஷிணாமூர்த்தியோ, வேங்கடரமண ஸ்வாமியோ, முருகனோ – எந்த தெய்வமாக வேண்டுமானாலும் இருக்கலாம், அந்த இஷ்ட தெய்வத்தையே அல்லது தெய்வத்துக்கு ஸமானமாக நமக்கு சாந்தியும் ஸந்துஷ்டியும் தருகிற ஒரு குரு, அல்லது மஹானையோ வேறே நினைப்பு வராமல் ஸ்மரிப்பதென்றால், 'இதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? மனஸுக்கு ரம்யமாகவும் ஆறுதலாகவும் இருக்கப்பட்ட இந்த ரூபங்களை நினைப்பதில் என்ன ச்ரமம்?' என்றுதான் தோன்றும். ஆனால் எதனாலோ, சிறிது நேரமானால் இத்தனை நல்ல, திவ்யமான ஸ்மரணையை விட்டுவிட்டு மனஸ் வேறெங்கேயாவதுதான் போய் விழும். அப்படியே கண்ணை கசக்கித் தூக்கத்தில் கொண்டு போய் விட்டுவிடும். இப்படி ஏமாறாமல் பழக்கிக் கொண்டால் சாகிற ஸமயத்திலும் பகவானை விடாமல் நினைக்க முடியும் என்ற நிச்சயத்தைப் பெறலாம். எல்லாம் அப்யாஸத்தில், விடாமுயற்சியில்தான் இருக்கிறது. நம்முடைய ச்ரத்தையைப் பொருத்து பரமாத்மாவே கைகொடுப்பார்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

டம் சொல்கிறேன். ஆனால் ஒன்று. என்ன நேர்ந்தாலும் சரி, நீ அதைப் பற்றிக் கவலைப் படக் கூடாது. புரிகிறதா? உன் மேலே யாருக்கும் கோபமில்லை. இது எனக்கும் அப்பாவுக்கும் மட்டுமுள்ள விவகாரம். விபத்து மாதிரி ஏதோ நேர்ந்து விட்டது..."

"ஆலிஸனுக்கு ஏற்பட்ட மாதிரியா அம்மா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்," என்று சொல்லி மறுபடியும் அவனை முத்தமிட்டு விட்டு வெளியே வந்தபோது தாரென்ஸனும் பிஜானும் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

"குட் நைட், பேஜ்," என்று புன்னகையுடன் கூறி விடைபெற்றான் தாரென்ஸன்.

தங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த நெருக்கம் மேலும் அதிகரித்து விட்டது என்று பேஜுக்குத் தோன்றியது. தாரென்ஸனிடம் இனி அவளுக்கு எந்த ஒளிவுமறைவும் இல்லை. இரண்டு பேரின் குடும்பங்களும் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து கொண்டு வருகின்றன.

அதைப் பிராடும் உணர்ந்தான் போலும். தாரென்ஸனை வழியனுப்பி விட்டு உள்ளே வந்ததும், "உனக்கும் தாரென்ஸனுக்கும் ரொம்பத்தான் சினேகம் ஏற்பட்டிருக்கிறது," என்றான்.

"இப்போது அதைப் பற்றி என்ன பேச்சு? வேறு எவ்வளவோ கவலை இருக்கிறது," என்றாள் அவள்.

"உண்மைதான்," என்றான் அவன். "ஏதோ தோன்றியது. சொன்னேன். எனக்கு அவனைப் பிடித்திருக்கிறது. உனக்கும் அப்படித்தான். இல்லையா? பண்பாடு உள்ள மனிதன்."

"இந்த நாலைந்து வாரமாக ஆஸ்பத்திரியில் எனக்கு அவர்தான் துணை. நல்ல சினேகிதர். அத்தோடு நல்ல தந்தை. நல்ல மனிதர்."

அவளுடைய குத்தல் அவனுக்குப் புரிந்தது. "அந்த விஷயத்தில் நான் மோசம்தான்..." என்றவன், "தோட்டத்தில் போய் உட்கார்ந்து பேசலாம், வா," என்றான், தோட்டத்துக்குச் செல்லும் கதவைத் திறந்தவாறு.

எதிரெதிராக நாற்காலிகளில் அமர்ந்த போது பேஜ் எதுவும் பேசவில்லை. பிராட் தான் மெதுவே ஆரம்பித்தான். "கொஞ்ச நாள் பொறுத்து நம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். முடியாது போலிருக்கிறது. நான் வீட்டுக்கு அதிகம் வருவதில்லை. வந்தாலும் நீ ஆத்திரப்படுகிறாய். ஆயிரம் திசைகளில் ஆயிரம் பேர் என்னைக் கட்டி இழுக்கிற மாதிரி இருக்கிறது. வீட்டுக்கு வரும்போதெல்லாம் ஆண்டி ஏக்கமாக என்னைப் பார்க்கிறான். உன் கண்ணிலோ கோபம் கொந்தளிக்கிறது. ஆஸ்பத்திரிக்கு வந்து ஆலியைப் பார்ப்பதற்கும் என்னால் தாளவில்லை..."

சொல்லிக் கொண்டே போனானே யொழிய, ஸ்டிபானி தன்னுடன் வந்து இருக்கும்படி வற்புறுத்துவதைச் சொல்லவில்லை. அவளுடன் போய்த் தங்க அவனுக்கும் முழு விருப்பம் ஏற்படவில்லை.

மெதுவாக, "வெளியே எங்காவது போய்த் தங்கிக் கொள்ளலாமென்று பார்க்கிறேன். இங்கேயே தங்கியிருப்பேன். அது சரிப்பட்டு வராது என்று தோன்றுகிறது," என்றான்.

"ஆமாம், சரிப்பட்டு வராது. நீங்கள் வெளியே போய் இருப்பதுதான் நல்லது," என்றாள் பேஜ் வெடுக்கென்று. எப்படி இந்த வார்த்தை தன் வாயிலிருந்து வந்தது என்று அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. இப்படி அவள் சொல்வாள் என்று ஒரு மாதம் முன்பு யாரேனும் சொல்லியிருந்தால் அவளே நம்பியிருக்க மாட்டாள்.

"மெய்யாலுமே சொல்கிறாயா?" என்றான் பிராட். அவனுக்கு ஆச்சரியமாயும் இருந்தது. பிரச்னை முடிந்ததில் நிம்மதியும் ஏற்பட்டது.

"ஆமாம்," என்றாள் அவள். "ரொம்ப நாளாக நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு



● சாலையின் நடுவில் ஒரு மஞ்சள் கோடு இருப்பது வழக்கம். பெங்களூரில் இந்தக் கோட்டிற்கு 'லக்ஷ்மண் ரேகா' என்று பெயர். இராமாயணத்தில் லக்ஷ்மணன் கிழித்த கோட்டைத் தாண்டியதால் இராவணனால் சீதைக்கு ஆபத்து ஏற்பட்டது. 'லக்ஷ்மண் ரேகா'வைத் தாண்டினால் வாகனம் ஓட்டுபவர்களுக்கு விபத்து ஏற்படும் என்பதை உணர்த்தத்தான் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

– பெங்களூர் புஷ்பராசன்

வந்திருக்கிறோம். போதும். ஆண்டியிடம் எப்படிச் சொல்வது என்றுதான் புரியவில்லை..."

வாழ்க்கையின் மிகப் பெரிய பிரச்னையை இப்படி இங்கே உட்கார்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதே அவளுக்குப் பைத்தியக்காரத்தனமாய்த் தோன்றியது. ஏதோ பார்ட்டி கொடுப்பதற்குத் திட்டமிடுகிற மாதிரி... வெளியூர் போவதைப் பற்றி யோசிக்கிற மாதிரி... சவ ஊர்வலத்தில் கலந்து கொள்வதைப் பற்றிப் பேசுகிற மாதிரி...

இந்த ஒவ்வொரு நிமிடத்தையும் அவள் வெறுத்தாள். ஆனால் முடிவெடுக்க வேண்டிய தருணம் இதுதான் என்பதும் புலப்பட்டது.

''ஆண்டியிடம் உண்மையைச் சொல்லி விடுவதே மேல்... மடையன் மாதிரி நான் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிவிட்டு, பிறகு புறப்படுகிறேன்,'' என்றான் அவன்.

'மடையன் மாதிரி' என்று அவன் தன்னை வர்ணித்துக் கொண்டதைக் கேட்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. இன்னும் கூட அவன் மீது அவளுக்குக் காதல் இருந்தது. 'ஏதாவது ஒருவகையில் காலத்தைத் திருப்பி வைக்க முடிந்தால்...!' என்று எண்ணிக் கொண்டாள். அது நடவாத காரியம் என்பதையும் உணர்ந்தாள்.

"சரி, எனக்கு ஒரு வாரம் அவகாசம் கொடு. நான் நாளை நியூயார்க்கிற்குப் போகிறேன். வியாழக்கிழமை திரும்பி வருவேன். இந்த வாரக் கடைசியில் நாம் எல்லாவற்றையும் முடிவு பண்ணலாம். உன் அம்மா இன்னும் எத்தனை நாள் இங்கே இருக்கப் போகிறாள்?" என்றான் அவன். மாமியார் இங்கே இருக்கும் போது பேஜின் உறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுவது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

''நாளைக் காலையில் அவர்களைக் கிளம்பச் சொல்லப் போகிறேன்,'' என்றாள் பேஜ் உறுதியான குரலில். "அவர்கள் இங்கே இருப்பது எனக்கும் நல்லதில்லை. ஆண்டிக்கும் நல்லதில்லை."

"உன் இஷ்டம்," என்று கூறிவிட்டு எழுந்து மெல்ல நடந்தபடி பேசினான் பிராட். "நான் போன பிறகு நீ நிம்மதியாக இருப்பாய். உன் வாழ்க்கையை நீயே பார்த்துக் கொள்ள முடியும்... ஆனால் ஒன்று.. ஆலி மூளையும் உடம்பும் சேதமடைந்தவளாக வீடு திரும்பினால், ஆயுள் பூராவுக்கும் உன்னால் அவளைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நிரந்தரமாகக் கோமாவில் கிடக்கும் பெண்ணை... யார் துணையும் இல்லாமல், ஒண்டியாய், வருடக்கணக்காகக் கவனித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க உன்னால் முடியுமா? ஊகூம்... நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது எனக்கு..."

ஒரு நெடுமூச்சுடன் பிராட் போய் விட்டான்.

தலையை உயர்த்தி, ஆகாயத்தையும் நட்சத்திரங்களையும் பார்த்தவண்ணம் வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள் பேஜ்.

அடுத்த நாள் காலை அமைதியாக அம்மாவுக்கும் அக்காவுக்கும் சிற்றுண்டி தயாரித்து, அவர்கள் எழுந்து கொண்டு வந்ததும் மௌனமாகப் பரிமாறினாள். முந்தின தினம் நடந்த சண்டையைப் பற்றி எந்தப் பேச்சும் எடுக்கவில்லை. எந்தச் சமாதானமும் சொல்லவில்லை. அவளுடைய நடவடிக்கைகளில் ஒரு கடுகடுப்பு இருப்பது அவர்களுக்குத் தெரிந்தது.

"சாயந்தரம் நாலு மணி ஃப்ளைட்டுக்கு உங்கள் இரண்டு பேருக்கும் டிக்கெட் ஏற்பாடு செய்து விட்டேன். ஏர்போர்ட் போக டாக்ஸிக்குச் சொல்லி வைத்திருக்கிறேன். நீங்கள் ஒரு வாரம் தங்கியதே போதும். என்னால் இதற்கு மேல் முடியாது," என்றாள் பேஜ் சுருக்கமாக.

அம்மா எதிர்த்துப் பேசவில்லை.

அவர்கள் புறப்பட்டுப் போகிறவரையில் வீட்டிலேயே இருந்தாள் பேஜ். போனதும் படுக்கையறைத் துணிகளை வாஷிங் மெஷினில் போட்டாள். அறைகளைக் கழுவி, வாக்குவம் க்ளீனரைக் கொண்டு சுத்தம் செய்தாள். ஆலிஸனின் அறையையும் ஒழுங்குபடுத்தினாள்.

வீடு மொத்தமும் தூய்மையாகி விட்ட மாதிரி இருந்தது. அது மட்டுமல்ல; தனக்குத் தானே எஜமானியாகி விட்டது போல ஒரு தெம்பும் உண்டாயிற்று.

(தொடரும்)

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.
Phone: 4340224/4340210/-4342667. Fax: 044-2344333

ஏழையின் அழுகையில் எதைக்

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
தி. சந்தானம்,
6, ஐந்தாவது தெரு,
நந்தனம் விரிவு, சென்னை - 35.

● என். செல்வம், கொப்பம்பட்டி.

? நாதஸ்வரம், அருள் உரை, நடிகையின் தீபாவளிக் கொண்டாட்டம், புதிய சினிமா கண்ணோட்டம், சிறப்பு ஒளியும் ஒலியும்... என்று ஃபார்முலாவுக்கு உட்பட்ட தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள் எப்பத்தான் மாறும்?

! பிரசார்பாரதியாம்; தூர்தர்ஷனுக்குச் சுதந்தரமாம்... பார்ப்போம், மாற்றம் வருகிறதா என்று...

● டி. அரவிந்த் பகபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? நமது அரசியல் சட்டத்தின் 356 ஆவது பிரிவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! அதை நீக்குவது ஆபத்து; அது துஷ்பிரயோகமாகாமல் தடுக்க, தக்க பாதுகாப்பு அம்சங்களை உருவாக்காமல் இருப்பது அதைவிட ஆபத்து என்று நினைக்கிறேன்.

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? அளவுக்கதிகமாகச் சொத்து சேர்த்த குற்றத்துக்காக கருணாநிதியின் குடும்பம் கூண்டில் ஏறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்கிறாரே வை.கோ...?

! அப்படியே கருணாநிதி சொத்து சேர்த்திருந்தாலும் அது வை.கோ. தி.மு.க.விலிருந்தபோதே சேர்த்த சொத்தாகத்தானே இருக்க வேண்டும்? அப்போது வை.கோ. ஏன் மௌனமாயிருந்தாராம்...!

● வி.எஸ். அனந்தராமன், சென்னை – 78.

? இவ்வளவு ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டும் இன்னமும் ஜெயலலிதாவுக்கு மக்களிடம் செல்வாக்கு இருக்கிறதே?

! மக்களிடையே உள்ள செல்வாக்கு ஒரு பக்கம் இருக்கட்டும்... ம.தி.மு.க. அலுவலகத்துக்கு ஜெ. வருவது குறித்து பத்திரிகைகளுக்கு ஃபேக்ஸில் அனுப்பிய அழைப்பிதழில் 'மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா என்று குறிப்பிட்டதை எங்கே போய்ச் சொல்லியழ...? 'மாண்புமிகு' என்பது அமைச்சர் பதவிக்கான மரியாதைச் சொல்லே தவிர, பிறருக்கான சொல் அல்ல என்பது கூட ம.தி.மு.க.வினருக்குத் தெரியவில்லையே!

● கே. ஆர். வேலுச்சாமி, வடக்கலூர்.

? விற்கிற விலைவாசியில் தீபாவளியைத் துறந்து விட்டால் என்ன...?

! இந்த ஆண்டு, நிறைய பள்ளிக் குழந்தைகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்; பட்டாசு செய்யும் கைகள் பிஞ்சுக் கைகள் என்பதால், பட்டாசு வெடிக்கப் போவதில்லை என்ற உறுதிமொழி. நீங்களும் இப்படி எடுத்துக் கொள்ளுங்களேன்... செலவின் ஒரு பகுதியாவது மிச்சமாகும்.

● பிரேம், தூத்துக்குடி – 2.

? 'மாநில முதல்வர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என கமல் கூறியதைப் பற்றி உங்கள் கருத்து என்ன...?

! எவ்வளவு படித்திருந்தாலும் நேர்மையாயில்லாவிட்டால் என்ன பயன்? ஐ.ஏ.எஸ். ஆக இருப்பதை விட ஐ.ஐ.எஸ்.ஆக (Indian Integrity Service) இருப்பது அவசியம்!


● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் – 1.

? 'நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் பத்திரிகைகளுக்கு எந்த மிரட்டலும் விட்டதில்லை. வழக்குத் தொடுப்பேன் என்று அச்சுறுத்தியதும் இல்லை...' என்று ஜெ. அறிக்கை விடுத்துள்ளாரே?

! நவம்பர் மூன்றாம் தேதி 'தினமணி' பார்க்கவும். அதில், ஜெ. பத்திரிகைகளுக்கு விடுத்த மிரட்டல்கள், அவை மீது தொடுத்த வழக்குகள், என்று பட்டியலிட்டு விரிவாக, ஆதாரபூர்வமாக வெளியாகியிருக்கிறது. ஜெ.வுக்கு



• சாமர்த்திய சுயமரியாதை!



• இமேஜ் கவலையின்றி...



• புது யோசனை!

யாராவது 'மெமரி பிளஸ்' சிபாரிசு செய்தால் தேவலாம்!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? *'எவ்வளவோ விழாக்களில் நான் கலந்து கொள்வதில்லை... அது மாதிரிதான் ரயில்வே விழாவும்... அதில் நான் கலந்து கொண்டேனா என்பதை விட, ரயில் வந்ததா என்பதே முக்கியம்... ரயிலோ வந்து விட்டது...' என மூப்பனார் சொல்லியி ருப்பது குறித்து?*

! சுயமரியாதையுடன் கூடிய தம்முடைய எதிர்ப்பையும் தெரிவித்து, அதே சமயம் பிரச்னை பெரிதாகிவிடாமலும் காக்கிற சாமர்த்தியம் மூப்பனாருக்கு எப்போதுமே உண்டு!

● ஆர். பிரகாசம், கோவிலூர்.

? *தீபாவளியில் தங்களைச் சிந்திக்க வைத்த நிகழ்ச்சி எது...?*

! டீ.வி.யில் மம்முட்டியின் பேட்டி - "தளபதி படம் மட்டும்தான் மக்கள் மனத்தில் நிக்கு துன்னா, நான் நடிச்சதெல்லாம் வேஸ்ட்! வெறும் மெஸ்மரிச கேரக்டர்களில் எனக்கு நம்பிக்கை இல்லை..." என்றார்! இப்படி ஒரு

காணலாம்?

தமிழ் நடிகர் தமது இமேஜ் பற்றிக் கவலைப் படாமல் பேசுவாரா...?' என்று யோசனை வந்தது.

● வீ. முத்துக்குமரன், திருமானூர்.

? *சந்திரலேகா மீது ஆசிட் வீசிய வழக்கு என்னவாயிற்று...?*

! சுர்லாவுக்கும் ஆசிட் வீச்சுக்கும் சம்பந்தமே இல்லை என்று சி.பி.ஐ. ஒருவழியாகக் கூறிவிட் டது. அவன் கம்பி எண்ணியதுதான் மிச்சம்! உண்மைக் குற்றவாளி இனியேனும் பிடிபடு கிறானா பார்ப்போம்.

● தி. சந்தானம், சென்னை - 35.

? *ஜெ. லஞ்சம் வாங்கினாரோ இல் லையோ... ஆட்சியில் சௌகரியங்கள் இருந் தன. நகரப் பேருந்து வசதியெல்லாம் ஒழுங் காயிருந்தது. இப்போது அது இல்லை. தீபாவளிக்கு ஒரு கிலோ உபரி சர்க்கரை – சொன்னபடி தரவில்லை; எல்லா அரசியல் வாதிகளுமே ஊழல். இந்த ஆட்சியில் மெத் தனமும் சேர்ந்து விட்டதே... தெரியவில் லையா...?*

! பரவலாக அடிபடும் பேச்சைத்தான் நீங்கள் கேள்வியாக்கியிருக்கிறீர்கள். கருணாநிதி ஒருவர் சுறுசுறுப்பு காட்டினால் போதாது. அமைச்சர்கள், அதிகாரிகள் தங்களைத் தாங் களே உசுப்பி விட்டுக் கொண்டால்தான் உண்டு. உங்கள் கேள்வியை இதன் மூலம் முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு வரு கிறேன். நான் செய்யக்கூடியது அது மட்டுமே!

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் - 6.

? *அன்று காமராஜர் காலத்தில், மாநிலத்தில் ஒன்பதே பேர் கொண்ட அமைச்சரவை. இன்று மாநிலங்களில் 93 பேர் கொண்ட அமைச்சரவை! ஏன் இப்படி...?*

! அன்று நடந்தது அரசியல்; இன்று நடப்பது வியாபாரம். அது சட்ட சபை; இது சந்தைக் கடை... அதனால்தான் இந்த நிலைமை!



• ஓ லேட்!

● கே. சுதர்சன், தூத்துக்குடி - 2.

? *சந்தன வீரப்பனின் தீபாவளி ஸ்பெஷல் அல்வா...?*

! டீ.வி. விளம்பரப் பாணியில் படிக்கவும் :

கோபால் : பேஷ், பேஷ்! ரொம்ப நன்னா ருக்கு...

கலைஞர் : ஐயே! இதுல இல்லை கொஞ்ச மும் ருசி!

ஜே.எச். படேல் : கடிச்சி கடிச்ச, பற்குழி வந்துடுச்சே... இனி போகவே போகாதாம்மா...?



• சட்டசபை....



• ....சந்தைக் கடை



• செல்வாக்கு செல்வி!

● டி. சங்கர், திண்டுக்கல் - 1.

? *பா.ஜ.கவும் தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டதா? (கட்சி மாறுவது; உதவிக்காக எதையும் செய்வது...)*

! ஆமாம். லேட்டஸ்ட் திட்டம் – கேசரி காங் கிரஸை உடைத்து, மத்திய அரசைக் கைப்பற்ற முயற்சி செய்வது.

● ச. ஆ. கேசவன், இனாம்மணியாச்சி.

? *ஏழையின் அழுகையில் எதைக் காண லாம்?*

! அரசியல்வாதியின் சுயநலச் சுரண்டலை!



மருதநாயகத்தில் மெகா கூட்டணி!

மருதநாயகம் படத்தில் ரஜினி நடிப்பது அக்மார்க் நிஜம்! ஆனால் இந்த விஷயத்தை கமல் இப்போதைக்கு ரகசியமாக வைத்திருக்க நினைக்கிறார். அதனால்தான், தீபாவளியன்று, ஒரு பிரபல நாளிதழில் வாசகர்கள் கேள்விக்கு பதிலளிக்கும் போது, மருதநாயகம் படத்தில் ரஜினி நடிக்கிறாராமே? என்ற கேள்விக்கு 'இல்லை' என்ற ஒற்றை வார்த்தையை மட்டுமே பதிலாய் கூறியுள்ளார் கமல்!

ரஜினிக்குத் தரப்பட்டிருக்கும் பாத்திரம் சிறியதுதான் என்றாலும் ரஜினி ரசிகர்களை ஏமாற்றாத அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமாம். ரஜினிக்கும், தனக்குத் தரப்பட்டிருக்கும் கேரக்டர் குறித்து சந்தோஷம்தானாம்.

கமலின் இந்த gesture பற்றி ரஜினியே தனக்கு நண்பரும், ஆலோசகருமான ஒரு தயாரிப்பாளரிடம் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார்.



அதே போல சத்யராஜுக்கும் மருதநாயகத்தில் ஒரு ரோல் கொடுத்திருக்கிறார் கமல். சத்யராஜுக்கும், இதில ரொம்பப் பெருமை.



மகாராணி கலந்து கொள்ள, மருதநாயகம் துவக்க விழாவும், டிரெய்லர் ரிலீசும் அமர்க்களமாய் நடந்து முடிந்து விட்டாலும், படப் பிடிப்பு துவங்க ஜனவரி ஆகிவிடும். காரணம், அதற்கு முன் இரண்டு முக்கிய வேலைகள் கமலுக்கு உள்ளன. ஒன்று, பல சிக்கல்களையும் சந்தித்து, கடைசியில் ஒருவழியாய் முடித்து விட்ட இந்தி அவ்வை சண்முகியை வடக்கே பிரமாதமான பப்ளிசிடியுடன் ரிலீஸ் செய்வது.

அடுத்தது கமல் – பிரபுதேவா இணைந்து நடிக்கும் 'காதலா காதலா' படத்தை முடித்து வெளியிடுவது (இன்னும் சுமார் நாற்பது நாள் ஷூட்டிங்தான் பாக்கி)

மருதநாயகம் படப்பிடிப்பை ஜனவரி வரை தள்ளிப் போட இன்னொரு காரணமும் உண்டு. 'காதலா காதலா' படத்தில் கமலுக்குத் தாடி கிடையாது. அதை முடித்துவிட்டு, தாடி வளர்ந்த பின்தான் மருதநாயகம்.

இன்னொரு விஷயம்! காதைக் கிட்டே கொண்டு வாருங்கள். மருதநாயகம் துவக்க விழாவில் நாம் பார்த்த கமலின் தாடி ஒரிஜினல் இல்லை, ஒட்டுதாடிதான்.

— கௌதம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement: 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 208/-; Overseas : Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 104/-; Overseas : Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/97* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka



L.R.SWAMI / P.P.